கல்கி

KALKI 3-3-1974 50 காசு



எஃகு நகரம்
ஒரு பூஞ்சோலை நகரமாகவும் ஆக முடியுமா?



இந்தியாவின் எஃகு நகரமான ஜாம்ஷெட்பூர் ஒரு முன்மாதிரி நகரமாகத் திகழவேண்டும் என்றே திட்டமிடப்பட்டிருந்தது.

''நிழல் தரும் மரங்களைக் கொண்ட, அகன்ற தெருக்களாக அமைத்திட மறந்திட வேண்டாம். ஒன்று விட்டு ஒன்று, துரிதமாக வளர்ந்திடும் வகை மரங்களை நடவும். புல்வெளிகளுக்கும் பூங்காக்களுக்கும் போதிய வசதி செய்திடவும்.''—என்று ஜாம்ஷெட்ஜி டாடா தனது மகன் தோராப்புக்கு எழுதியிருந்தார்.

இன்று ஜாம்ஷெட்பூர் அவ்வண்ணமே உள்ளது—எஃகு நகரத்தோடு ஒரு பூஞ்சோலை நகரமாகவும் பரிமளிக்கிறது.

குடியிருப்பு வீடுகள் கூட, எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஜாம்ஷெட்ஜி வெளியிட்ட விருப்பங்களை நினைவில் நிறுத்தி, திட்டமிட்டு அமைக்கப் பட்டிருப்பதோடல்லாமல், இன்னும் விரிவுபடுத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.



டாடா ஸ்டீல்

வளரும் குழந்தைகளுக்கு இனிய போர்ன்விடா!



சக்தி வளரட்டும்! பள்ளியிலும்... விளையாட்டிலும்!

சக்தி வளரட்டும்! பள்ளி-
யிலும் விளையாட்டிலும்,
இன்றும் என்றுமே வெற்றி
அவனுக்கே. ஆம்! அவன்
சுவைத்துப் பருகுவது
போர்ன்விடா. ஊட்ட-
மளிக்கும் **கோகோ**, பால்,
மால்ட், சர்க்கரை இவை
இனிதே கலந்திட்ட
போர்ன்விடாவிலே
அடங்கியுள்ளது அவனு-
டைய ஒளிமிக்க எதிர்காலம்.

ஊட்டமளிக்கும் போர்ன்விடா ஒரு இன்சுவையுள்ள பானம். ஏனெனில் இதில் கோகோ உள்ளது.



காட்பரிஸ்
போர்ன்விடா சக்திக்கும் வலிமைக்கும் மற்றும் தீஞ்சுவைக்கும்

OBM-0445 TAH

ஸ்தாவர சொத்துக்கள் ஆர்ஜிதம்

புதிய விதிகள்

1972 நவம்பர் 15-ம் தேதியன்றோ அதற்குப் பிறகோ விற்பனை அல்லது பரிமாற்றம் மூலம் மாற்றப் படும் ஸ்தாவர சொத்து எதனையும், இந்திய அரசாங்கம் 1961-ம் வருடத்திய வருமான வரிச் சட்டத்தின் கீழ், ஆர்ஜிதம் செய்யலாம், இவ்விதம் இருந்தால்:

(அ) அந்தச் சொத்தின் "நியாயமான மார்க்கெட் விலை" அது மாற்றப்பட்ட தேதியன்று ரூ. 25 ஆயிரத்துக்கு மேல் இருக்குமானால்;

(ஆ) சொத்து மாற்றப்பட்ட தினத்தன்று இருந்த நியாயமான மார்க்கெட் விலை, மாற்றல் பத்திரத்தில் குறிப்பிட்டிருக்கும் அந்தச் சொத்துக்கான விலையை விட 15 சதவிகிதத்திற்கும் மேல் அதிகமாக இருக்குமானால்;

(இ) உண்மையான விலையை மாற்றல் பத்திரத்தில் குறிப்பிடாததற்கான நோக்கம்:

(1) சொத்து மாற்றலின் மூலம் கிடைக்கும் வருமானத்தின் மீதான வரியைச் செலுத்துவதில், சொத்து மாற்றுபவருக்குள்ள பொறுப்பைக் குறைக்க அல்லது தட்டிக் கழிக்க வகை செய்வதாகவோ;

(2) அல்லது சொத்தைப் பெற்றுக் கொள்பவர், வருமான வரி அல்லது சொத்து வரிச் சட்டங்களின் நோக்கங்களுக்காக தெரிவித்திராத, ஆனால் அவர் கட்டாயம் தெரிவித்திருக்க வேண்டிய வருமானம் அல்லது பணம் அல்லது மற்ற உடைமைகள் எதையும் மூடி மறைப்பதற்கு வகை செய்வதாகவோ இருந்தால், அரசாங்கம் சொத்தை ஆர்ஜிதம் செய்யும்.

ஸ்தாவர சொத்து — வரையறை

இந்த நோக்கத்திற்காக (விவசாய நிலம் உள்ளிட்டு) எந்த நிலத்தையும் அல்லது கட்டடத்தையும் அல்லது ஒரு கட்டடத்தின் பகுதியையும் "ஸ்தாவர சொத்து" என்னும் சொற்றொடர் குறிக்கிறது; ஏதாவது நிலமோ அல்லது கட்டடமோ அல்லது ஒரு கட்டடத்தின் பகுதியோ, யந்திரம், சாதனங்கள், ஃபர்னிச்சர், ஃபிட்டிங்குகள் அல்லது மற்றப் பொருள்களுடன் கூட மாற்றப்படும் விஷயத்தில், அத்தகைய யந்திரத்தையும், சாதனங்களையும், ஃபர்னிச்சரையும், ஃபிட்டிங்குகளையும் அல்லது மற்றப் பொருள்களையும் கூட அச்சொற்றொடர் குறிக்கிறது. அத்தகைய நிலம், கட்டடம், ஒரு கட்டடத்தின் பகுதி, யந்திரம், சாதனங்கள், ஃபர்னிச்சர், ஃபிட்டிங்குகள் இதர பொருள்கள் ஆகியவற்றில் உள்ள எந்த உரிமைகளும் அதில் அடங்கும்.

ஆர்ஜிதம்

1961-ம் வருடத்திய வருமான வரிச் சட்டத்தின் அத்தியாயம் 20ஏ-யில் (269ஏ பிரிவிலிருந்து 269 எஸ் பிரிவு வரை) இடம் பெற்றுள்ள ஸ்தாவரச் சொத்துக்களின் ஆர்ஜிதம் பற்றிய புதிய விதிகள், ஜம்மு-கஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியாவில் எந்த இடத்திலும் அமைந்துள்ள சொத்துகளுக்குப் பொருந்தும்.

அத்தகைய ஸ்தாவர சொத்துக்கள் சம்பந்தமான ஆர்ஜித நடவடிக்கையை, அந்தச் சொத்து பற்றிய மாற்றல் பத்திரம் 1908-ம் வருடத்திய பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மாத இறுதியிலிருந்து ஒன்பது மாதங்களுக்குள் எந்தச் சமயத்திலும் தகுதி வாய்ந்த அதிகாரி எடுக்கலாம். அப்பீல் முதலிய போதிய வசதிகள் மூலம், வரிச் செலுத்துவோரின் உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இழப்பீடு

இவ்வாறு ஆர்ஜிதம் செய்த சொத்துக்கள் விஷயத்தில் இந்திய அரசாங்கம் இழப்பீடு அளிக்கும். மாற்றல் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தொகைக்குச் சமமான தொகையும், அதோடு கூட, அவ்வாறு குறிப்பிடப்பட்ட தொகையில் 15 சதவிகிதமும் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஈடாக வழங்கப்படும்.

விலக்கு

எனினும், இயற்கை அன்பு, நேசம் குறித்து, ஒருவர் தம்முடைய உறவினருக்கு ஸ்தாவரச் சொத்தை அதன் நியாயமான மார்க்கெட் மதிப்பை விடக் குறைவானதொரு தொகைக்கு மாற்றல் செய்து, மாற்றல் பத்திரத்தில் அவ்வாறு குறிப்பிட்டிருந்தால், இந்த ஆர்ஜித விதிகள் பொருந்தா.

மேலும் விவரங்களுக்கு, தகுதி வாய்ந்த அதிகாரியாக செயலாற்றுவதற்கு மத்திய அரசாங்கம் அதிகாரமளித்துள்ள உதவிக் கமிஷனர் அல்லது வருமான வரி இலாகாவின் மக்கள் தொடர்பு அதிகாரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வெளியிட்டது:
டைரெக்டரேட் ஆஃப் இன்ஸ்பெக்ஷன்,
(ஆய்வு புள்ளிவிவர, வெளியீட்டுப் பிரிவு)
மயூர் பவன், கன்னாட் சர்க்கஸ், புது தில்லி.

davp 73/483





"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

பொருளடக்கம்

பிரமாதீச, மாசி 19 ■ மார்ச் 3, 1974

மேலட்டை: மஞ்சள் மலர்க் கொல்லை; மங்கை மனம் கொள்ளை!
வண்ணப் படம்: அனந்

கல்கி சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 26-00	ரூ. 13-00
இதர நாடுகள்	ரூ. 55-00	ரூ. 27-50
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 30-00	ரூ. 15-00



எங்கும் எப்போதும்....
ஹாமர் மாஸ்டர்.
பிக்னிக்குகளுக்கு உடன் கொண்டு செல்லுங்கள்
அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லுங்கள்
கதகதப்பாக இயங்க சூடான தேநீர் உங்களுக்குத் தேவையா? அல்லது இதம் தரும் குளிர்ந்த காப்பி வேண்டுமா? உங்களுடைய ஹாமர் மாஸ்டரை உபயோகியுங்கள். உஷ்ணத்தை நன்கு இருத்தி வைத்துக் கொள்ளும் வகையில் ஒவ்வொரு ஹாமர் மாஸ்டர் ரீபில்லும் 'டெம்பரேச்சர் டெஸ்ட்' செய்யப்படுகிறது.
பல அழகான டிஸைன்களில் உள்ள ஹாமர் மாஸ்டர் மாடல்களிலிருந்து உங்களுக்குப் பிடித்ததை தேர்ந்து எடுங்கள்....250 மி.லி.யிலிருந்து 2750 மி.லி. வரையான அளவுகளில் கிடைக்கும். உறுதியான, திடமான உங்கள் ஹாமர் மாஸ்டர் பல ஆண்டுகளுக்கு உழைக்கும்.
இவையிருக்கட்டும். ஹாமர் மாஸ்டர் நல்ல பரிசுப் பொருளும் ஆகும்.... ஊழியர்களுக்கும், கஸ்டமர்களுக்கும், நண்பர்களுக்கும் அதை பரிசாக வழங்கலாம்.
நல்ல ஃப்ளாஸ்க் வேண்டுமெனக் கேளுங்கள். கிடைக்கும்
ஹேமர்மாஸ்டர்

HVG-21/73 TM

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

மலர் 33 -- இதழ் 31

பொறுப்பை உணராத உரை

ராஷ்டிரபதியின் பாராளுமன்ற உரை மிகுந்த ஏமாற்றத்தையே அளித்துள்ளது. உண்மையை உள்ளபடி உரைக்காது மூடி மறைக்கப் பார்த்துள்ளார். நாட்டு நிலையைச் சீர்ப்படுத்த அரசு எடுக்க விருக்கும் நடவடிக்கைகளைப் பற்றியும் தெளிவாகக் குறிப்பிடவில்லை. இவைதாம் ஏமாற்றத்துக்குக் காரணங்கள். பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் வகையில் அவர் பேசியிருப்பதும் அரசாங்கம் செய்த தவறுகளின் விளைவுகளுக்கு, எதிர்க் கட்சிகளையும், பதுக்கல்காரர்களையும், சம்பந்தமில்லாதவர்களையும் குற்றம் சாட்டியிருப்பதும் திருப்தியளிக்கவில்லை.

விலைவாசி உயர்வும், பொருள்களுக்குத் தட்டுப்பாடும், உற்பத்திக் குறைவும் பரவலான. வேலைநிறுத்தங்களும் சர்வதேசத் தலைவலியாகி விட்ட எண்ணெய்ப் பிரச்னையும் எல்லாமாகச் சேர்ந்து நமது பொருளாதாரத்தைச் சீர்குலைத்துள்ளன. இதை அரசு ஒப்புக்கொள்ளவோ திருத்தவோ இன்னமும் முன்வரவில்லை. மாறாக, இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையைச் சமாளிக்க மக்கள் மன உறுதியுடன் முன்வர வேண்டும் என்று அறைகூவல் விடுத்திருக்கிறார் ராஷ்டிரபதி. இதைப் பார்த்து அழுவதா, சிரிப்பதா, அநுதாபப்படுவதா என்று தெரியவில்லை. இன்றுவரை மக்கள் தங்கள் கஷ்டங்களைத் தாங்காமல், அரசாங்கமும், ஆளும் கட்சியுமா தாங்கி வந்திருக்கின்றன?

உணவு விநியோக விஷயத்தில் லஞ்ச ஊழல் மலிந்து விட்டிருக்கிறது. ராஜிநாமா செய்துவிட்ட குஜராத் முதல்வர் திரு சிமன்பாய் பட்டேல், இதை அப்பட்டமாகவே சொல்லியிருக்கிறார். ஒழுங்கீனங்கள், லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள், அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றை விசாரிக்கக் கட்சிச் சார்பற்ற நீதிமான்கள் அடங்கிய உயர்மட்ட விசாரணைக் குழு அமைக்க வேண்டிய அவசியம் பற்றி ராஷ்டிரபதியின் உரையில் சூசகமாகக்கூடக் குறிப்பு ஏதும் இல்லை. கட்சி மாறுவதைத் தடுக்கக் கொண்டுவரப்பட்ட மசோதா இந்தக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படுமா என்பது பற்றியும் காணப்படவில்லை.

உற்பத்தி பெருகாமைக்குக் காரணங்கள் கச்சாப் பொருள்கள் நிலக்கரி முதலியன குறித்த காலத்தில், வேண்டிய அளவு கிடைக்காமையும் தொழிலாளர்களின் ஒத்துழையாமையும் அவசியமில்லாத கட்டுப்பாடுகளும்தாம் என்பதை நாடு நன்குணர்ந்தும், இவ்வகையில் நிலைமையைச் சீராக்க அரசு என்ன செய்யப் போகிறது என்பது பற்றிப் பேசப்படவில்லை. உற்பத்தியை மேலும் வேகமாகப் பெருக்கத் தயாராகவே இருக்கும் தனியார்த் துறைத் தொழில்களுக்கு வேண்டிய ஆதரவையும், அனுமதியையும் வழங்க இன்னமும் அரசு தாமதிக்கவே செய்கிறது.

ஆளும் கட்சியின் தேர்தல் வாய்ப்புக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக, ராஷ்டிரபதி உரைகூடப் பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் வகையில் இருக்க வேண்டுமா? இதற்காகவே பார்லிமெண்டின் பட்ஜெட் கூட்டத் தொடர் ஆரம்பித்தவுடனே வழக்கமாகச் சமர்ப்பிக்கப்படும் ரயில்வே பட்ஜெட்டைத் தள்ளிப் போட வேண்டுமா? ரயில்வே வரவு செலவில் கணிசமாகத் துண்டு விழத்தான் போகிறது. பிரயாணக் கட்டணங்களும், சரக்குக் கட்டணங்களும் உயரத்தான் போகின்றன. எனினும், தேர்தலில் ஆளும் கட்சியின் வெற்றி வாய்ப்புக்கள் குன்றிவிடுமோ என்பதற்காகப் பார்லிமெண்டு வேலை முறைகளைக்கூட மாற்றியுள்ளார்கள்.

ஆளும் கட்சியின் ஆட்சித் திறமை மிக மிகக் குறைந்துவிட்டது. நாட்டின் பிரச்னைகளைச் சமாளிக்க முடியாது தத்தளிக்கும் நிலைமையில் காங்கிரசின் ஆட்சி இருக்கிறது. இம்மாதிரி நிலைமையில், பார்லிமெண்டைக் கலைத்து, மறு தேர்தல் நடத்துவது அவசியமாகிவிட்டது என்றே எண்ண வேண்டும். அல்லது, நாட்டிலுள்ள திறமையாளர்களை, அறிவும் ஆற்றலும் பெற்றவர்களை அமைச்சர்களாகக் கொண்டு நிர்வாகம் நடக்க வேண்டும்.

தமிழ் நாட்டிலே...

தீரன்

பஸவலிங்கப்பா திரட்டும் படை

ஜாதி பேதம் ஒழிய வேண்டும் என்று கூறிக் கொண்டே ஒவ்வொரு ஜாதியும் தங்கள் ஜாதி நலனை மட்டும் காக்க ஒரு படை, ஒரு சேனை என்றெல்லாம் திரட்டுவதற்கு மக்களிடம் அறைகூவுவது இப்போது நாகரிகமாகி வருகிறது. சமீபத்தில் சென்னையில் நடந்த அமைச்சர் சத்தியவாணிமுத்து பிறந்த நாள் விழாவில் மைசூரின் பகுத்தறிவுச் சிங்கம் என்று தம்மைச் சொல்லிக் கொள்ளும் திரு பசவலிங்கப்பா பேசும்போது, பகுத்தறிவுக்குப் பொருந்தாத விஷயத்தைக் கூறியுள்ளார். ''அரிஜன இளைஞர்களின் புரட்சிப் படை ஒன்றைத் திரட்டி அமெரிக்க நீக்ரோக்கள் செய்தது போல் ஜாதி இந்துக்களை எதிர்த்துப் போராட வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள் இனி அடங்கிக் கிடக்கக் கூடாது'' என்று கோபமாக முழங்கியிருக்கிறார். வேற்றுமைகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் அகற்றப் படைகள் அமைப்பது பைத்தியக்காரத்தனம். ஒவ்வொரு தலைவரும் தம் ஜாதியைக் காக்கப் படை அமைத்தால் நாட்டில் அமைதி இருக்காது. வெறும் படைகளும், சேனைகளும் அவை கிளப்பும் பூசல்களும்தான் மீதமாக இருக்கும்.

கட்சி மாறல்

இப்போதெல்லாம் தமிழ் நாட்டில் மாதத்துக்கு ஒரு கட்சி மாற்றச் செய்தி பத்திரிகைகளில் சர்வசாதாரணமாக வருகிறது. 1971 தேர்தலுக்கு முன் வரை கட்சி மாறல், கட்சி தாவல் வியாதிகள் அதிகமில்லாத மாநிலமாகத் தமிழகம் ஒன்றே மீதம் இருந்தது. இப்போது தமிழகமும் விதிவிலக்கு இல்லை என்றாகிவிட்டது.


எம். எல். சி. பதவி மறுபடியும் உறுதியாக்கப்பட்டவுடன் ராணி அண்ணாதுரை அ.தி.மு.கவிலிருந்து பழையபடி தி.மு.க.வுக்குவந்து விட்டார். தமக்கு உறுதியளிக்கப்பட்ட மந்திரி பதவி தரப்படாததால் உதவி சபாநாயகர் பி. சீநிவாசன் தி.மு.கவிலிருந்து அ.தி.மு.கவுக்கு மாறித் தேர்தல் பிரசாரத்துக்கும் போய்விட்டார் என்று செய்திகள் வருகின்றன. உதவிசபாநாயகர் பதவியை விடாமலே தேர்தல் பிரசாரமும் நடத்துவது நியாயமா என்ற கேள்வி எழலாம். புதுவை, கோவை தேர்தல் முடிவுகள் வந்ததும் மேலும் சில கட்சி மாறல்கள் இருக்கலாம். ஆனால் அந்த மாறுதல்கள் அரசியல் நாணயத்துக்கும் ஒழுக்கத்துக்கும் பெருமை சேர்க்குமா என்று மக்கள் நெஞ்சில் ஒரு வினா எழும். மதியழகன், ராணி அண்ணாதுரை இருவரும் இரு முறை கட்சி மாறிவிட்டார்கள். மற்றவர்கள் இனி மூன்று முறை மாறினால்தான் அவர்களை இந்தக் கட்சி மாறல் போட்டிப் பந்தயத்தில் ஜெயிக்க முடியும் போலிருக்கிறது. சபாநாயகர் மதி 1973ல் வழிகாட்டினார். உதவி சபாநாயகர் 1974ல் வழிகாட்டுகிறார். இப்படி வழிகாட்டினால் தமிழ் நாடு உருப்படுமா ?

தேர்தல் காலப் பரபரப்பு

இந்த இதழ் வெளியாகும்போது கோவை—பாண்டிச்சேரி தேர்தல்கள் முடிந்து வெற்றி தோல்விகளும் தெரிந்திருக்கும். பரபரப்பான பிரசாரம், அடிதடி, ஊர்வலங்கள், ஆவல், அச்சம், எல்லாம் ஓய்ந்து முடிவுகள் வென்றவரிடையே ஆரவாரத்தையும், தோற்றவரிடையே அமைதியையும் சோர்வையும் உண்டாக்கிவிடலாம். வென்றவர்கள் வெற்றிக் களிப்பிலே நாட்டுக்குச் செய்ய வேண்டிய நன்மைகளை மறந்துவிடக் கூடாது. வெற்றி

ராஜாஜி சிந்தனை

பெருங்காட்டு மிருகங்களை யெல்லாம் சாதுவாகச் செய்துவிடுகிறோமல்லவா ? யானையை அடக்கி, சொன்னபடி செய்யப் பண்ணுகிறோம். நம்முடைய மனமும் அடக்கி ஆளக்கூடிய ஒரு மிருகம். முயற்சி வீண் போகாது. உள்ளத்தை அடக்காமல் கண்டபடி காட்டில் திரிந்து மேய விடாதீர்கள். பயனற்ற எண்ணங்களே காடு. அதில் மேயவிட்டால் உள்ளம் ஒரு காட்டு யானையாகப் போகும். அடக்கி ஆள முடியாமற் போகும். ஏமாந்து போகாதீர்கள். விவேகமே யானையை அடக்கும் அங்குசம். பற்றுக்களையும் ஆசைகளையும் குறைத்துக் கொண்டே போக வேண்டும். அவை வளர்ந்தால் விவேகம் வளராது. பூண்டு வளர இடம் கொடுத்துவிட்டால் பயிருக்குச் சேதம். களை பிடுங்கினால் பயிர் நன்றாக வளரும். இல்லாவிட்டால் பயிர் அழிந்து வயல் காடாகிப் போகும். அப்படியே விவேகமும். ஆசைகளையும் பற்றுக்களையும் குறைத்துக் கொள்ளாமற் போனால் விவேகம் வளராது.


இது யோகநித்திரைதான்!
எதிர்க் கட்சிகள்
குஜராத் சட்டசபை
மேற்குநாடுகள்
சேரா விரல்!
எண்ணெய் மன்னர்
போ வெளியே
உன் மூட்டை
முடிச்சுடன்!
உண்மைதான். பம்பாயை நீ கட்டிக்-
-கொடுத்தாய். இனி நீ போகலாம்!
தென்னிந்தியர்
பம்பாய்

பெறுதவர்களும் நாட்டுக்கு நன்மை செய்யத் தொடர்ந்து பாடுபட வேண்டும். ஜனநாயகத்தில் வென்றவருக்கும் கடமை உண்டு. தோற்றவருக்கும் கடமை உண்டு. வென்றவரின் வெற்றிக் களிப்பும், வெற்றி பெறுதவரின் அமைதியும் மக்களுக்குப் பணி செய்வதன் மூலமே தொடர வேண்டும். மக்களுக்குப் பணி செய்வதைத் தொடர்வதன் மூலமே தோற்றவர் மீண்டும் வெற்றிபெற முடியும். வென்றவர் தம் வெற்றியை நிலைப்படுத்த முடியும். அதையே மக்கள் எதிர்பார்ப்பார்கள்.

பட்ஜெட் வருகிறது

பிப்ரவரி இறுதியில் மத்திய பட்ஜெட்டும், மார்ச் முதல் வாரம் தமிழ்நாடு அரசின் பட்ஜெட்டும் வெளிவரப் போகின்றன. ஏற்கனவே விலைவாசி, வரிவிதிப்பு மிகுதியால் திணறும் மக்களுக்கு இன்னும் என்னென்ன புதிய வரிச் சுமைகள், விலைவாசி உயர்வுகள் இந்த பட்ஜெட் மூலம் வருமோ தெரியவில்லை. மார்ச் மாதம் வெயில் மாதம். பட்ஜெட்டால் விளையும் வெப்பமும் இயற்கை வெப்பத்தோடு கூடச் சேரலாம். இரண்டு அரசுகளுமே (மத்திய மாநில) 'பட்ஜெட் விளைவுகள்' தேர்தலைப் பாதித்துவிடக்கூடாது என அஞ்சி முன்னாக்கிரதையாகத் தேர்தலுக்குப்பின் பட்ஜெட்டை வெளியிடுகின்றன. மத்திய அரசு ரயில்வே பட்ஜெட்டைக் கூட ஏதோ காரணம் சொல்லி ஒத்திப் போட்டாலும் உண்மைக் காரணம் தேர்தல் வாய்ப்புக்கள் பாதிக்கப்படப் போகிறதே என்ற கவலைதான் என்பது நாடறிந்த ரகசியம். அந்த ஒரு கெட்டிக்காரத்தனத்தை எப்படி வியப்பதென்றே தெரியவில்லை. 'பட்ஜெட்டில்' அதிர்ச்சிகள் இருக்கும் என்பதற்கு அவை தேர்தலுக்குப்பின் வெளியிடப்படுவதே ஓர் அடையாளம்தான். ஆனாலும் மறுபடியும் எப்போதாவது தேர்தல் வராமலா இருக்கப் போகிறது? அடுத்த தேர்தலுக்குமுன் மக்களின் துயரமெல்லாம் தீர்ந்துவிடும் என்று ஆட்சியில் உள்ளவர்கள் கனவு காண்கிறார்கள் போலும். பகல் கனவு காண்பதற்கு உச்ச வரம்பு இல்லையல்லவா ?


காலனுக்குக் கிடைத்த கொள்ளை

சென்ற சில தினங்களாகக் காலனுக்கு அபரிமிதப் பசி கண்டிருப்பதாகத் தோன்றுகிறது. கலை, அரசியல், சமயம், சட்டம் ஆகிய பல துறைகளைச் சேர்ந்த அருமணிகள் பலரை அவன் நம்மிடமிருந்து பறித்திருக்கிறான். ஈடுசெய்ய முடியாத இந்த இழப்புக்கள் குறித்து வருந்துகிறோம்.

● திரு கே. ராஜா அய்யரவர்கள் சட்டத் துறையில் ஒரு துருவ நட்சத்திரமாகத் திகழ்ந்த பெரியவர். வழக்குத் துறையில் சிம்மமாக விளங்கிய திரு எஸ். ஸ்ரீநிவாச ஐயங்காரிடம் பயிற்சி பெற்றுக் காலக்கிரமத்தில் தாமும் ஒரு சிம்மமானார். தற்போது உயர்நீதி மன்றத்தில் பிரதம நீதிபதியாக உள்ள திரு வீராசாமியும், நீதிபதி கே. எஸ். ராமமூர்த்தியும் இவரிடம் ஜூனியராக இருந்தவர்கள்தாம். 1947லிருந்து ஐந்தாண்டுகளுக்கு அன்றைய சென்னை மாகாணத்தின் அட்வகேட் ஜெனரலாக இருந்து நிர்வாகம் — நீதி பரிபாலனம் இவை தனித் தனித் துறைகளாக வரையறுக்கப்படுவதற்கு உதவி புரிந்தார். நமது அரசாங்கப் பிரதிநிதியாக வெளி நாடுகளில் நடந்த வழக்கறிஞர் மகாநாடுகளில் பங்குகொண்டு நாட்டுக்குக் கீர்த்தி வாங்கித் தந்தார். சென்னை மாநகரின் முக்கியஸ்தர்களில் ஒருவராக விளங்கியவர் திரு கே. ராஜா அய்யரவர்கள்.

● கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் தமிழ் இலக்கிய உலகில் பெற்றிருந்த ஸ்தானம் தனித் தன்மை வாய்ந்தது. வெள்ளித் திரை, நாட்டுப் பாடல், நாவல் படைப்பு இவற்றில் பல்வேறு நிலைகளிலும் உள்ள மக்களைக் கவர்ந்திருந்தவர் அவர். 'தில்லானா மோகனாம்பாள்', 'பொன்னிவனத்துப் பூங்குயில்' ஆகிய புதினங்கள் மூலம் 'க்ளாஸிகல்' எனப்படும் இலக்கியத் துறையில் இடம் கொண்டாலும், அவரது பெருமை நாட்டுப் பாடல்களிலேயே கொழுந்து விட்டு ஒளிர்ந்தது. கள்ளம் அறியாக் கிராமத் தமிழரின் உள்ளத்தோடு தம்மைக் கரைத்துக் கொண்டு அற்புதமான பாடல்களைப் பொழிந்தார். 'காந்தி மகான் கதை' ஒன்று போதுமே! பாட்டாலேயே தேசப் பற்றையும், தெய்வ பக்தியையும் வளர்த்தார். நவரசங்களும் கொழிக்கும் திரைப் படங்களில் பல விதங்களில் பங்கு கொண்டு பொழுதுபோக்கிலேயே கலா, சாரத்தைக் குழைத்துத் தந்தார். ஆனந்த விகடன், ஜெமினி இவற்றின் மூலம் அவர் புரிந்த கலைப் பணி ஒப்பற்றது. தமிழர் பண்பாட்டின் மகோன்னதத்தை விளக்கும் வகையில் 'அவ்வையார்' திரைப் படத்தை உருவாக்கினார். இளகிய உள்ளமும், முருகனிடம் முறுகிய பக்தியும் கொண்ட ஓர் அன்பு ஆன்மா மறைந்து விட்டது.

● அமுத சங்கீதத்துக்கு ஓர் அமீர்கான் என்றே சொல்லலாம். 'இந்தோர் பாணி' என்று சொல்லப்படும் சம்பிரதாயப்படி அலைக்கு மேல் அலை மோதும் கற்பனை வளத்தோடும் அலை எழா ஆழ்கடல் கர்ப்பமாகவும் அவர் நாதப் பிரம்மத்தை வெளிப்படுத்தும் போது அதில் கரைந்தவர்கள் அனந்தம். ஹிந்துஸ்தானி சங்கீத வானில் சுடர்த் தாரகையாக இருந்தார் உஸ்தாத் அமீர்கான். தேசிய விருதுகள் பல பெற்ற அவரது வாழ்க்கை குறித்து இந்திய அரசாங்கத் திரைப்படப் பிரிவினர் ஒரு திரைச் சித்திரம்



திரு கே. ராஜா அய்யர்



அமீர்கான்



கொத்தமங்கலம் சுப்பு

தயாரித்திருக்கிறார்கள். இந்தச் சித்திரத்துக்குச் சற்றும் பொருந்தாத பயங்கரமான விதத்தில் இந்த நாத யோகி ஒரு கார் விபத்தில் மாண்டு போனதுதான் நெஞ்சாருத் துயரமாயுள்ளது.

● ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் மற்றொரு பெரும் புள்ளியாக இருந்தவர் டாக்டர் எஸ். என். ரதன் ஜங்கர். சங்கீதப் பேராசிரியர், துணைவேந்தர் ஆகிய பெரும் பதவிகளை வகித்து, சுமார் நாற்பதாண்டுகள் இசை ஆராய்ச்சியில் நிபுணராக விளங்கினார். அவரது அறிவாற்றலால் இசைத் துறையில் வெளிப்பட்ட நுட்பங்கள் ஒருபுறமிருக்க, அவரே சிறந்த இசைக் கலைஞராகவும் இருந்தார்.

நாட்டில் நடக்கும் பெரிய இசை மகாநாடுகளில் இனி டாக்டர் ரதன் ஜங்கர் பங்கு பற்ற மாட்டார் என்பது ஒரு பெருங் குறையாகவே தெரியும்.

● பதினாயிரத்துக்கு மேற்பட்ட பாட்டுக்களை ஒருவர் பாடியிருக்கிறார் என்றால் அதை அதிசயம் என்றுதான் சொல்ல வேண்டும். இந்த அதிசயத்தைச் செய்தவர் திரு கண்டசாலா வேங்கடேசுவர ராவ் அவர்கள். கண்டசாலாவின் கண்டத்திலிருந்து எழுந்த கனிவும் கம்பீரமும் கொண்ட கானம் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஆந்திரத்திலும் பிறகு தேசம் எங்கிலுமே பரவத் தொடங்கியது. நூற்றுக் கணக்கான திரைப் படங்களில் பின்னணிப் பாடகராகப் பங்கு கொண்டார். பிறகு இசை இயக்குநராகவும் படத் தயாரிப்பாளராகவும் கூடப் பரிணமித்தார். பல் சுவைப் பாடல்களைப் பாடுபவர் எனினும் இந்த மெல்லிசை .வேந்தர் இறைவனைக் குறித்துப் பாடிய பாடல்களில் பல நெஞ்சைத் தொடுவனவாக உள்ளன. திருப்பதி வேங்கடேசுவரனின் ஆஸ்தான வித்வான்களில் ஒருவராக இருக்கும் பாக்கியத்தைப் பெற்ற வேங்கடேசுவர ராவ், தீர்க்காயுள் என்ற பாக்கியத்தை மட்டும் பெற்றிருக்கவில்லை!

● அரசியலில் ஈடுபட்டிருந்தும் தெய்வ பக்தி, நேர்மை இவற்றுக்காக நற்பெயரெடுப்பது ஒரு சாதனைதான். இப்படிப்பட்ட சாதகர்களில் ஒருவரை திரு ராதாகிருஷ்ண பிள்ளையின் மறைவில் இழந்திருக்கிறோம். காந்திய நெறியைக் கைக்கொண்ட ஆதிகால தேசபக்தர்களில் ஒருவர் அவர். பச்சையப்பன் கல்லூரி, அண்ணாமலை பல்கலைக் கழகம் முதலியவற்றின் மூலம் கல்விப் பணியும், மேயர் பதவி மூலம் சென்னை மாநகருக்குத் தனிப்பட்ட பணியும் புரிந்தவர். நல்ல இலக்கிய அறிவு வாய்ந்த அவர் எழுத்துத் துறையிலும் பயனுள்ள நூல்களை ஆக்கித் தந்தவர். பெருமாளிடமும், பிரபந்தங்களிடமும் ஆழ்ந்த பற்றுக் கொண்டு ஓர் உண்மையான வைஷ்ணவராக வாழ்ந்தார். ஸ்ரீ வைஷ்ணவ மகாநாடு ஒன்றுக்குத் தலைமை வகித்த கையோடு அவர் உலகை விட்டுப் பிரிந்ததைப் பார்க்கும் போது வைகுண்டப் பிராப்தி அடைந்தார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

ரதன் ஜங்கர்



கண்டசாலா



ராதாகிருஷ்ண பிள்ளை



உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்கு வைடமின்களும், தாதுப் பொருள்களும் இன்றியமையாதவை.

அவை போதுமான அளவில் கிடைக்கின்றனவா?



வைடமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின் பற்றுக்குறை உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்தைப் பாதிக்கக்கூடும். சோர்வு, ஜலதோஷம், பசியின்மை, உடல் இளைத்துப்போதல், சரும உபாதைகள், மற்றும் பல் உபாதைகள் - இவற்றிற்கு மூலகாரணம் சாதாரணமாக, இன்றியமையாத வைடமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின் பற்றுக்குறைதான். இருப்பினும், வைடமின்களும், தாதுப் பொருள்களும் பெரும்பாலும் அலட்சியம் செய்யப்படுகின்றன. மிகவும் கவனமாகத் திட்டமிடப்பட்ட உணவில் கூட இவற்றின் பற்றுக்குறை காணப்படுகிறது. வளமான உணவு எல்லாம் சரிவிகித உணவாக இருப்பதில்லை; விதவிதமான உணவுகளிலும், வைடமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின் பற்றுக்குறை இருக்கக் கூடும். அப்படியானால், அத்தியாவசியமான வைடமின்களும், தாதுப் பொருள்களும் - அதுவும் சரியான விகிதங்களில் - உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கின்றன என்று நிச்சயமாக எப்படிச் சொல்ல முடியும்? உங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும், தேவையான அளவுகளில் இந்த இன்றியமையாத போஷாக்குச் சத்துக்கள் கிடைப்பதை உறுதிப் படுத்திக் கொள்ள, அவர்களுக்கு விம்க்ரான் - ஸ்க்விப் பல்வேறு வைட்டமின், தாதுச் சத்து மாத்திரைகள் - கொடுங்கள், தினம் ஒரு மாத்திரை வீதம். இந்த ஆரோக்கியமான வழக்கத்தை இன்றே ஏன் ஆரம்பிக்கக்கூடாது?

விம்க்ரானில் 11 முக்கியமான வைடமின்களும், 8 தாதுப் பொருள்களும் சரியான அளவுகளில் அடங்கியிருக்கின்றன. இரத்தச் சிவப்பு உயிரணுக்களை வளர்க்கவும், சக்தியை மீண்டும் பெற உதவவும் இரும்புச் சத்து - எலும்புகளையும், பற்களையும் உறுதியாக வைத்திருக்க கால்ஷியம் - ஜலதோஷத்தை எதிர்க்கும் சக்தியை அதிகரிக்க வைடமின் ஸி - சிறந்த கண் பார்வைக்கும், ஆரோக்கியமான சருமத்திற்கும் வைடமின் ஏ - பசியைத் தூண்டி, தாங்கும் சக்தியை அதிகரிக்கும் வைடமின் பி-12 - இவற்றுடன், உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்குத் தேவையான, இதர போஷாக்குச் சத்துக்களும் அடங்கியிருக்கின்றன.

விம்க்ரான்®

பல்வேறு வைட்டமின்-தாதுச் சத்து மாத்திரைகள்

11 வைட்டமின்களும் 8 தாதுப் பொருள்களும் அடங்கியது.

ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரை உங்களை நாள் முழுதும் சக்தியுடன் வைத்திருக்கப் போதுமானது.

SQUIBB SARABHAI CHEMICALS

Shilpi HPMA-25A/71 Tam

காமாக்ஷியின் கண்கள்

௨

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

அம்பாளுடைய கண்களிலிருந்து பொங்குகிற கடாக்ஷம் ஸ்ரீ ஆசார்யாளிடம் பூரணமாகப் பொலிந்து கொண்டிருந்தபோது அவரது வாக்கிலிருந்து ஒரு சுலோகம் வந்தது. இது 'ஸௌந்தர்ய லஹரி'யில் இருக்கிறது. 'த்ருசா த்ராகீயஸ்யா தரதளித நீலோத்பல ருசா' என்கிற சுலோகம். அவளுடைய கடாக்ஷம் இல்லாமல் இப்படிப்பட்ட அமிருதம் போன்ற சுலோகம் பிறக்க முடியாது. ஆனால் இந்தச் சுலோகத்திலோ ஆச்சாரியாள் அம்பாளின் கடாக்ஷம் தமக்குக் கிட்ட வேண்டும் என்று பிரார்த்திக்கிறார். **'தமக்குக் கிட்ட** வேண்டும் என்று மட்டுமில்லை. **'தமக்கும் கூடக்** கிட்ட வேண்டும்' என்கிறார் — பக்தியும் ஞானத்திலும் சிகரமாக இருந்தும், துளிக்கூட அகம்பாவமே இல்லாத நம் ஆசார்யாள்.

காமாக்ஷியின் கடாக்ஷ வீக்ஷண்யத்தின் பெருமையை இந்தச் சுலோகத்தில் சொல்லுகிறார். அவளுடைய கண் பார்வை எத்தனை தூரமும் தாண்டி விழுமாம் — த்ருசா த்ராகீயஸ்யா என்கிறார். ஒரு தாயார்க்காரி பச்சைக் குழந்தைகளைத் தன் பார்வைக்குள்ளேயேதான் வைத்துக் கொள்வாள். அம்பாளுக்கு நாம் எல்லோரும் பச்சைக் குழந்தைகள்தான். பெரிய பெரிய காரியம் சாதித்தவர்கள், அகட விகடம் செய்கிறவர்கள் எல்லோரும் கூட அவளுக்குப் பச்சைக் குழந்தைகள்தான். மிருகங்கள், பட்சிகள், புல், பூண்டு எல்லாவற்றுக்கும் தாயார்க்காரி அவள். எல்லையில்லாத பிரபஞ்சத்துக்கு அம்மா அவளே. இத்தனையும் அவள் பார்வைக்குள்தான் இருக்கின்றன. எனவே அவளுடைய கடாக்ஷத்துக்கும் எல்லையில்லை. அது நீண்டு நீண்டு போய், தகுதியே இல்லை என்று எட்டாத் தொலைவில் நிற்கிறவர்கள் மீதும் விழுகிறது. அந்தக் கண்கள் பாதி மூடி, பாதி விரிந்திருக்கிற நீலோத்பல புஷ்பம் மாதிரி இருக்கின்றனவாம். ஜலத்தில் நனைந்த நீலோத்பலம் மாதிரி பரம சீதளமாக இருக்கிறது. அவளுடைய திருஷ்டி. நீண்ட நேத்திரங்கள், நீலமான நேத்திரங்கள், குளிர்ந்த நேத்திரங்கள் — இதனால் நீலோத்பலத்தை உவமிக்கிறார். 'இப்படி நீள நெடுக எங்கு பார்த்தாலும் போய்க் கொண்டிருக்கும் உன் கடாக்ஷப் பிரவாகத்தில் **என்னையும் கூட** முழுகும்படியாகச் செய்தருளேன்' என்கிறார். **'மாம் அபி'** — 'என்னைக்கூட' என்கிறார். 'எனக்கு உன் கடாக்ஷம் கிடைக்க நியாயமே இல்லை. என்றாலும் தீனனான என்னையும் உன் பார்வையால் ஸ்நானம் பண்ணி வை'' என்கிறார். 'தீனம்', 'மாமபி' என்று மிக மிக விநயத்துடன் சொல்லுகிறார் பரமேசுவராவதாரமான ஆசார்யாள். 'எனக்கு யோக்கியதை இல்லா விட்டாலும் ஏன் கேட்கிறேன் என்றால், இதனால் உனக்கு ஒன்றும் நஷ்டம் வந்துவிடவில்லை என்பதாலேயே கேட்கிறேன்' என்கிறார். தோஷமுள்ளவர்களைப் பார்த்தாலும் கூட அவளுடைய பார்வைக்குத் தோஷம் வராது — எந்த ஹானியும் வராது — ந ச தே ஹாநிரியதா. 'உனக்கு நஷ்டமில்லை என்பது மட்டுமில்லை. எனக்கோ இதனால் பரம லாபம் சித்திக்கிறது. நான் தன்யனாகிறேன்' என்கிறார். 'அனேனாயம் தன்யோ பவதி''. தனத்தை உடையவன் தன்யன். அம்பாளின் கடாட்சத்தால் அருட் செல்வம் என்ற தனம் கிடைக்கிறது. அதற்கு மேல் பெரிய செல்வம் எதுவுமில்லை.

'தகுதியைப் பார்க்காமல் கடாக்ஷிப்பாய்' என்றதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்கிறார். பூரண சந்திர ஒளி பிரகாசிக்கிறது. அது வித்தியாசம் பாராட்டாமல் எல்லா இடங்களிலும் ஒரேபோல் அமிருத நிலாவைக் கொட்டுகிறது — சக்கரவர்த்தியின் மாட மாளிகை நிலா முற்றத்தில் சந்திரிகையைப் பொழிகிறது; அதே போல் ஒரே முள்ளும் புதர் மண்டிய காட்டிலும் நிலவைப் பொழிகிறது. உப்பரிகையில் விழுந்ததால் அதன் சௌகரியங்களும் நிலாவைச் சேரவில்லை; காட்டில் விழுந்ததால் அதற்கு முள் குத்தவும் இல்லை. இப்படித்தான் அம்பாளின் கடாக்ஷம் எங்கு விழுந்தாலும் அதற்குக்கூடுதல், குறைவு இவை இல்லை. 'என்மேல் அது விழுந்தால் ஒன்றும் குறைந்து விடாது. நானோ அதன் ஸ்பரிசத்தால் நிறைந்தவனாகி விடுவேன். அதனால் என்னையும் உன் கடாக்ஷத்தில் முழுக்கடிப்பாய் அம்மா' என்கிறார்.

என்னையும் என்று 'உம்' போட்டுச் சொன்னது நம்மையெல்லாம் உத்தேசித்துச் சொன்னதுதான். அம்பாளும் ஈசுவரனும் ஆசார்யாளும் ஒன்றேதான். அப்படிப்பட்ட ஆசார்யாள் பரம கருணையால் நம்மோடு சேர்ந்து நின்று நமக்காக இந்தச் சுலோகத்தை அநுக்கிரகித்திருக்கிறார். மனமாரப் பிரார்த்தித்து விட்டால், எத்தனை யோக்கியதை இல்லாதவர்களையும் அம்பாள் கடாக்ஷிக்கிறாள்; நிலாப் போலவும் நீலோத்பலம் போலவும் குளிர்ந்தது அவளது கடாக்ஷம். எவரையும் கை தூக்கிவிடும் என்று நமக்குக் காட்டிக் கொடுக்கிறார்.

அழகான அந்நியங்கள்



அவன் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தான். ஆனல், ஜன்மம் ஜன்மமாகத் தொடர்ந்து வரும் சம்சார பந்தம் போல் அவன் மனம் நிற்காமல் ஓடிக் கொண்டிருந்தது.

அவன் உதடுகளின் மேல் புகைக் கூடு கட்டும் மரிஜ்வானு பைப்பையே ஸாமப்பிரியா பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் புகையை இழுத்து உள்ளே நிறுத்திக் கொண்டே அறைக்கு வெளியே பார்வையை நிறுத்தினன். அரண்மனை போன்ற அழகான அவனது பங்களாவில் அந்தரங்கமான அந்தக் கூடந்தான் இப்பொழுதெல்லாம் அவனது பிரத்தியேகப் பிரபஞ்சமாக விளங்கியது.

ஆசாபாசங்களற்ற மனத்தின் குறியாக அவன் முகம் விகசித்துக் கொண்டிருந்தது. அவன் மிகப் பெரிய விஷயங்களை யெல்லாம் மிகச் சாதாரணமாகவும் மிகச் சிறிய விஷயங்களைக் கூட மிக மிக அசாதாரணமாகவும் பேசிக் கொண்டிருப்பான்.

திறந்திருந்த கதவு வழியாகத் திரிவிக்ரமா வந்தான்.

அவன் ஒரு பௌதிக விஞ்ஞானி.

அவனை ''வா'' என்றுன் மகாவர்த்தன.

அவனும் வந்து அவர்கள் இருவருக்கும் அருகே அமர்ந்து ஒரு முக்கோணமாக்கினன்.

''விக்ரம்! உனக்கு ஒரு விஷயம் சொல்கிறேன். நீ அதைக் கண்டுபிடிக்க வேண்டும். அதாவது, உடலின் வெளியே தெரியாத நரம்பையும், எலும்பையும், செல்களையும் நாம் கண்ணுல் காண்பதற்குக் கருவிகள் உள்ளன. அதுபோல் வெளியே தெரியாத வேகமான .மனித எண்ணங்களைப் பதிவு செய்து பின் விளக்கக்கூடிய ஒரு சாதனத்தை நீ செய்ய வேண்டும்! ஏனென்றல், என் மனத்தின் வேகம் மின்னலை மீறிக் கொண்டு சுழலும்போது மனம் நிறைந்து விட்டது போல் தோன்றுகிறது.உண்மையில் அது நிரப்ப இல்லை; அழிவதில்லை! மனம் மாறிக் கொண்டிருக்கிறது. மாறுதல்கள், மாறுதலான கற்பிதங்கள் இரண்டுமே தப்பித்துக் கொள்ளும் உபாயங்கள்!'' என்று நிறுத்தினன் மகா.

''நீ என்ன நினைக்கிறுய், பிரியா?'' என்றுன் திரிவிக்ரமா.


''ஆமாம் விக்ரம், அதைச் செய்யுங்கள்'' என்றுள் பிரியா. அவள் வேறுஎதையோ எண்ணிக் கொண்டிருந்தாள்.

மகாவர்த்தன, விக்ரம் இருவருக்குமே முப்பதுக்கு இரண்டொரு வயது கூடவோ குறையவோ இருக்கும். பிரியா அவர்களுக்குப் பத்து வயது குறைந்தவள்.

இப்பொழுது பிரியா விக்ரம் பைப்புக்கு நெருப்பு வைத்தாள்.

விக்ரமின் பூனைக் கண்கள் அவள் உடலின் உள் வளைவுகளைத் தேடின. அவள் இடுப்புக்குக் கீழே சுற்றியிருந்த பூப்போட்ட ஹாட் பிங்க் டெபிலெஸ்டு புடவையின் இறுக்கமான





தழுவலைப் பொறுமையோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனது பார்வை தோரன்ஸ் ஸ்டீரியோ ரிகார்டு பிளேயர் மேலும் அதன் அருகே சிதறிக் கிடந்த மேற்கத்திய, கர்நாடக நெடுஞ்சங்கீத இசைத் தட்டுகள் மேலும் அலைந்து கொண்டிருந் தன.

மகாவர்த்தனு, விக்ரம்மனத் தைப் படித்தான். பிறகுஒடும் மனத்தை நிறுத்தவும் அலையும் எண்ணக் ,குமிழிகளை அழித்து நிலைப்படுத்தவும் தோட்டத் துக்கு எழுந்து போனுன்.

அங்கே ஓர் ஒற்றைப் பப் பாளி மரத்தில் காய்கள் குலை குலையாய்ச் சுரந்திருந்த பெண் மைக் கோலம் அவன் இத யத்தை மென்மை யாகக் குழைத்தது. மூன் பிறையின் தண்ணொளியில் பப்பாளி மரத் தின் நிழல் அழகாகக் குடை விரிந்திருந்தது. மகா,மரத்தின் அடியில் போய், அதன் நிழல் தலையில் தன் தலை நிழலையும் சங்கமமாக்கிக் கொண்டு அதை மானசிகமாக முத்தமிட்டு நின்ருன்.

பிறகு பிரியாவை நினைத்துக் கொண்டு மேலே வந்தான். அங்கே அவனும் இல்லை; விக்ரமும் இல்லை. அப்பொழுது தான் பிரியாவின் கார் புறப் படும் சத்தம் கீழே கேட்டது.

கூடத்தில் கனிந்து கொண் டிருந்தகனதுபத்திகள் அணைந்து விட்டாலும் கர்மவாசனைகளைப் போல் அதன் மணம் இன்னும் எஞ்சியிருந்தது.

''பப்பாளிவிடம் நான் கொண்ட உணர்வு பின்னையே மெருமல் கொண்ட புத்திர பாசமா? அப்படியானுல் நான் பிரியாவிடம் கொள்ளும் அன்பு எப்படிப்பட்டது? எந்த ஸ்தனங்களில் பாலைக் குடித்தேனே, அந்த ஸ்தனங்களையே பார்த்து மோகிக்கும் சம்சார சக்க ரத்தில் பிரியா என் பெருத தாயா? கல்யாணம் பண்ணிக் கொள்ளாத மனைவியா?

பிரியாவிடமும் பப்பாளியிடமும் நான் அன்பு கொள் கிறேனு? அப்படியென்ருல் தேகத்துக்கும் இந்திரியங்களுக் கும் வேருகிய என் ஆத்ம சொருபத்திலிருந்து அவர்களைப் பிரித்தவன் ஆவேனே!

பிரியா! பப்பாளி! உங்கள் ஜீவ சொருபம் ஒன்றே — நானே. த்வமே வா ஹம் நபே தோஸ்தி பூர்ணத் வாத் பரமாத்மகஹ.''

சிந்தனைச் சாகரத்தில் பித்தனைப் போல் அமிழ்ந்து கொண்டிருந்த மகாவர்த்தனு ஒரு குழந்தையைப் போல் தூங்கி விட்டான்.

'மூச்சு நடக்கும்வரை மனமும் நடக்கும்' என்று மகா சொன்னதை எண்ணியபடியே அவன் கூடத்துக்கு வந்து பிரியா உட்கார்ந்தாள்.

அவனுக்கு முன்னரே அங்கு வர்ணவிபா வந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

இருவரும்பேசிக் கொள்ள முடியாத மன உணர்வுகளுடன் சங்கடமான மௌனத்தில் ஆழ்ந்திருந்தனர்.

மகாவர்த்தனு உள்ளே வந்தான்.

''ஏன் மகா...?'' என்று பிரியா எழுந்து வந்தாள்.

''பதில் இல்லாத ஒரே கேள்வி ஏன் என்பதே!'' என்று சொல்லிவிட்டு வர்ணவிபாவைப் பார்த்தான். அவள் புத்தம் புதிய பூவாய்ப் புன்னகை செய்தாள். மூங்கில் போன்று விளங்கும் அவள் தோள்களைத் தன் இரு கைகளாலும் பற்றி எடுத்து நிற்க வைத்தான்.

வர்ணவிபா கனப்பரிமாணமுள்ள கவின் பெறு ஓவியமாய் நின்றாள். ஒரு தளிர்க் கொடியை மெல்ல எடுத்து ஒரு கொம்பில் பற்ற விடுவது போல் வாகவமாக அவளை எடுத்து அணைத்துக் கொண்டே மகாவர்த்தனு தோட்டத்தை நோக்கி நடந்தான்.

தனித்து விடப்பட்ட ஸாமப்பிரியாவின் உள்ளம் தவித்தது. சற்று நேரத்தில் அவள் வேகமாகத் தோட்டத்துக்கு வந்தாள்.

ஓர்அழகான சிறு தாமரைக்குளத்தின் பசும் புல் தரையில் அமர்ந்து வர்ணவிபாவும் மகாவர்த்தனுவும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஸாமப்பிரியா, மகாவர்த்தனுவின் இன்னொரு பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

மகா அவளை உற்றுப் பார்த்தான்.

அவள் கண்கள் கலங்கின. உதட்டின் ஒவ்வொரு நுண்ணணுவும் துடிக்க, ''உன் மனத்தில் இருப்பதை மறைக்காமல் சொல். நேற்றிரவு நான் திரிவிக்ரமாவோடு சேர்ந்து கொண்டு உன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் கூடப் போய்விட்டேன் என்றுதானே என் மேல் கோபம்?'' என்று கேட்டான்.

அவள் சிரித்துக் கொண்டே, ''இல்லை'' என்றாள்.

''நான் ஏன் போனேன் தெரியுமா?''

''தெரியாது!'' என்றாள் சிரிப்பு மாறாமலே.

''மகா... என் தந்தை என்னை அழகு சாதனப் பொருள்கள் தயாரிப்பு பற்றி ஆராய்ந்து அறிந்து வர ஸ்விட்ஸர்லாந்து அனுப்புகிறார். போவதற்குள் என் திருமணத்தை நடத்தி, தேநிலவை ஸ்விஸ் தடாகத்திலேயே வைத்து விடலாம் என்று திட்டமிட்டு ஏற்பாடு செய்கிறார். நீ வியாபாரத்தைச் சரியாகக் கவனிக்காமல் எப்படி எப்படியோ இருக்கிறாய் என்று சொல்லி உன்னை நான் கல்யாணம் செய்து கொள்வதற்கு அவர் சம்மதிக்கவில்லை. அதுமட்டுமல்லாமல் திரிவிக்ரமாவை மணந்து கொள்ளுமாறும் வற்புறுத்துகிறார்!''

''ம்ம்.... சொல்!'' என்று முறுவலித்தான் மகா.

''நான் விக்ரமாவை நேற்றிரவு அழைத்துக் கொண்டு போய், 'நான் மகாவைத்தான் மணந்து கொள்வேன்! நீயே என் அப்பாவிடம் வந்து சொல்லிவிடு!' என்று சொன்னேன். அவனும் அப்படியே என் அப்பாவிடம் 'மன்னித்துக் கொள்ளுங்கள்... நான் பிரியாவை மணந்து கொள்ள முடியாமல் இருக்கிறேன். அவளுக்கும் மகாவுக்கும் உள்ள ஆழ்ந்த உறவை நான் பிரிக்க விரும்பவில்லை!' என்று சொல்லி விட்டான்.''

''இப்பொழுது உன் அப்பா என்ன சொல்கிறார்?''

''அவர் என் விருப்பப்படியே விட்டு விட்டார்!'' என்றாள் நாணம் கலந்த முறுவலுடன்.

''உன் விருப்பம் என்ன?''

''ம்... நீயே சொல்!'' என்று வெட்கத்தோடு விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள்.

''சொல்கிறேன்... பிரியா! மனம் நிரந்தரமான இன்பத்துக்கு ஆசைப்படுகிறது. நிரந்தரமான துன்பத்துக்கு அஞ்சுகிறது. மனம் நிலையாக இல்லாததால் நிரந்தரமாக எதுவுமே இருப்பதில்லை.''

''பார்த்தாயா... நீ இப்படியெல்லாம் பேசுவதால்தான் சிலர் உன்னை 'ஒரு ஸ்திர புத்தியில்லாத ஆள்' என்று சொல்கிறார்கள்.'' என்று பிரியா செல்லமாகச் சிணுங்கினாள்.

''வர்ணவிபா! நிலையாமைகள் உண்மை தான்! ஆனால் அந்த அநித்தியங்களில்தான் அழகு இருக்கிறது: ஆனந்தம் இருக்கிறது!''

''சரி, பிரியாவை நீங்கள் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறீர்களா இல்லையா?'' என்று வர்ணவிபா விஷயத்துக்கு வந்தாள் — பொறுமை இழந்து.

மகா, தன் மீசையை நீவிவிட்டுக்கொண்டே சொன்னான்: ''மீசையை ஷேவ் பண்ணி விட்ட பிறகு மீசை இருந்தால் நன்றாயிருக்கும்போல் தோன்றுகிறது. மீசை வளர்ந்திருக்கும்போதோ அது இல்லாவிட்டால் தேவலாம் போலிருக்கிறது. இப்படி மனிதனுக்கு எதிலுமே நிலையான திருப்தி இல்லை. ஆமாம்; ஒன்றையே நிலையாக அனுபவிப்பதில் ஓர் அலுப்பு இல்லையா? அதனால்தான் நித்தியம் ஒரு 'போர்!' அநித்தியமே அழகு என்கிறேன். எனது இந்த எண்ணமே நித்தியமில்லையே! அதனால்தான் அது எனக்கு அழகாயிருக்கிறதோ!''

''இன்னும் நீங்கள் முடிவு சொல்லவில்லை!'' என்று வர்ணவிபா அவனுக்கு எரிச்சலோடு நினைவூட்டினாள்.

பிரியா ஆவலோடு அவனைப் பார்த்தாள்.

அவன் சொன்னான்: ''அழகான அநித்தியங்களில் ஆனந்தம் காணும் நான், ஒருத்தியுடன்-அது பிரியாவோ வர்ணவிபாவோ—திருமணம் என்ற ஒன்றை நிச்சயித்துக் கொண்டு அவளோடு எப்படி நிரந்தரமாக வாழ முடியும்?''

இப்பொழுது இரண்டு பெண்களுமே எழுந்து அவனிடம் சொல்லாமல் கொள்ளாமல் போய்க் கொண்டிருந்தனர்.

டாக்டர் வர்ணவிபா அவனைத் திரும்பிப் பார்த்துவிட்டுப் பிரியாவிடம் மெதுவாகச் சொன்னாள்: ''He is a Philosophy addict you know - முதலில் அவர் மன நோய் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்! பிறகு உங்கள் தேனிலவை ஸ்விஸ் தடாகத்தில் ஜாம் ஜாம் என்று அநுபவிக்கலாம்!''





மேற்கு ஜெர்மானியத் தலைவர் வில்லி பிராண்ட் அவர்களுக்குக் குழந்தைகள் எழுதிய கடிதங்கள் பலவற்றைத் தொகுத்து நூலாக வெளியிட ஒரு நிறுவனம் முன்வந்தது. இது, 'அளவுக்கு மீறிய புகழ்ச்சி' என்று கருதப்படலாம் என்பதால் பிராண்ட் இதற்கு முதலில் அனுமதி மறுத்தார். ஆனால் இதிலிருந்து கிடைக்கும் வருவாய் ஊனமுற்ற குழந்தைகளின் நலனுக்குப் பயன்படுத்தப்படும் என்று அறிந்ததும் சம்மதமளித்தார். அதிகப் பிரசிங்கித்தனமான ஆனால் கள்ளம் கபடமற்ற தான 'சில' கடிதங்களும் இடம் பெற்றுள்ளன இந் நூலில்! அதோடு தலைவருக்குக் குழந்தைகள் தீட்டி அனுப்பிய வண்ண ஓவியங்களும் இடம் பெற்றுள்ளன. படத்திலே ஜெர்மானியத் தலைவர் புத்தகம் வாங்கிய ஒரு குழந்தைக்கு அதில் கையெழுத்திட்டுத் தருவதையும் அந்நூலில் இடம் பெற்றுள்ள குழந்தை ஓவியங்களுள் ஒன்றினையும் காணலாம்.



மயிலாப்பூர் அகாடமியின் இருபத்தியோராவது ஆண்டுவிழாவுக்கு ஆளுனர் ஸ்ரீ கே. கே. ஷா தலைமை வகித்தார். நகரிலேயே பியூஸியில் மிக அதிகமான மாணவிகளை வெற்றி பெறச் செய்த ஸ்டெல்லா மேரி கல்லூரிக்குச் சுழல் கோப்பையை ஸ்ரீமதி ஷா வழங்குகிறார். ஆங்கிலச் சொற்பொழிவுப் போட்டிக்கான ரி. பி. ராமசாமி அய்யர் சுழல் கோப்பையை எதிராஜ் கல்லூரி தட்டிச் சென்றது.



வடஆர்க்காடு வள்ளிமலை முருகனுக்குக் கோவை தொழிலதிபரும், மோபெட்ஸ் இந்தியா நிறுவனத்தின் டைரக்டருமான திரு வி. எல். பாலகிருஷ்ண நாயுடு அவர்களால் பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள வைரக்கல்லிழைத்த இரண்டு விபூதிப் பட்டைகளும், அம்மனுக்கு வைரக் கல்லிழைத்த கம்மல்களும் உபயமாக அளிக்கப்பட்டன. அவ்வைபவம் திரு டி. எம். நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. திரு முருக கிருபானந்த வாரியார் தலைமை தாங்கினார்.



ஹைதராபாத்தில் ஒன்பதாவது தேசிய கேரம் போட்டிகள் நடைபெற்றன. ஆந்திர சுகாதார அமைச்சர் கே. ராஜமல்லு இந்தப் போட்டிகளைத் தொடங்கி வைத்தார். ஒற்றையர் கேரம் போட்டியில் தமிழ்நாடு வி. லாசர், முன்னாள் தேசிய வீரரான எஸ். டில்லியை இறுதிப் போட்டியில் தோற்கடித்து, சேஷாத்திரி நினைவுச் சுழல் கோப்பையைப் பெற்றார்.



லக்ஷ்மி மில்ஸ் மானேஜிங் டைரக்டர் கே. ராஜ கோபால் அவர்களின் புதல்வி ஜெயந்தியின் நடன அரங்கேற்றம் அண்மையில் கோயமுத்தூர் சித்ரா கலையரங்கில் விமரிசையாக நடைபெற்றது.

சிவகாமியின் சபதம்



பதினைந்தாம் அத்தியாயம்

கிளியும் கருடனும்

"கமலி!"

"கண்ணா!"

"எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை!"

"ஏன் அப்படி?"

"புதிய தளபதிக்கு வந்த வாழ்வை நினைக்க நினைக்கக் கோபம் கோபமாய் வருகிறது."

"கோபித்து என்ன பயன்? அவர் யுத்தகளத்துக்குப் போய் வீராதி வீரர் என்று பெயர் எடுத்து வந்திருக்கிறார்."

"யுத்தத்துக்குப் போக வேண்டும் என்று என் மனமுந்தான் துடியாய்த் துடிக்கின்றது."

"யார் குறுக்கே விழுந்து மறிக்கிறார்கள்?"

"வேறு யார்? மாமல்லர்தான்! மாமல்லருக்கு ஏன் நான் ரதசாரதியானேன் என்று இருக்கிறது. அவராலேதானே நானும் இந்தக் கோட்டைக்குள்ளேயே அடைந்து கிடக்க வேண்டியிருக்கிறது?"

"இல்லாமற் போனால் வெட்டி முறித்து விடுவாயாக்கும்!"

"எப்படியும் ஒரு நாளைக்கு மாமல்லர் யுத்தத்துக்குப் போகாமல் இருக்க மாட்டார். அப்போது நானும் போகிறேன். இல்லையா, பார்! ஒருவேளை நான் போர்க்களத்தில் வீர சொர்க்கம் அடைந்தால் என்னைப் பற்றிச் சின்னக் கண்ணனுக்குச் சொல்வாயல்லவா?"

"ஆகட்டும், ஆகட்டும்! வீட்டுக்குள்ளேயே உட்கார்ந்து வீரம் பேசுவதிலே உனக்கு இணை இந்தப் பல்லவ இராஜ்யத்திலேயே கிடையாது என்று கண்ணம்மாவிடம் சொல்கிறேன்."

"என்ன சொன்னாய்? கண்ணம்மாளா?"

"ஆமாம்; கண்ணம்மாளாய்த்தான் இருக்கட்டுமே?"

"போதும், போதும்! பூலோகத்தில் பெண்களே பிறக்கக் கூடாது என்று நான் சொல்வேன். கூடவே கூடாது."

"உண்மைதான்! ஆண் பிள்ளைகளைப் போன்ற நிர்மூடங்கள் இருக்கிற உலகத்

அமரர் கல்கி

தில் பெண்களைப் பகவான் படைக்கக் கூடாதுதான். உங்களால் நாங்கள் படுகிற கஷ்டம் எவ்வளவு என்பதை உணர்ந்து கொள்ளக்கூட உங்களுக்குச் சக்தி இல்லை.''

''இது என்ன அபாண்டம், கமலி! உங்களை நாங்கள் அப்படி என்ன கஷ்டப்படுத்துகிறோம்?''

''சற்று முன்னால் 'யுத்தத்துக்குப் போய் நான் செத்துப் போகப் போகிறேன், நீ வீட்டிலே சுகமாயிரு' என்று சொன்னாயே? அது என்னைக் கஷ்டப் படுத்துகிறதல்லவா? தங்கச்சி சிவகாமியை எட்டு மாத காலமாக மாமல்லர் போய்ப் பார்க்காமல் இருக்கிறாரே, அது அவளைக் கஷ்டப்படுத்துகிற தாகாதா?''

''எப்போதும் உன் தங்கச்சியைப் பற்றியேதான் உனக்கு யோசனை. வேறு நினைவே கிடையாது.''

''ஆமாம், கண்ணா! கொஞ்ச நாட்களாக நான் அவளைப்பற்றியேதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். யோசிக்க யோசிக்க வருத்தமாயிருக்கிறது. சிவகாமி எதற்காக மாமல்லர் மேல் காதல் கொண்டாள் என்று இருக்கிறது. கிளி கிளியுடனும், குயில் குயிலுடனும் கூடி வாழ வேண்டும். மரக் கிளையில் வாழும் பச்சைக் கிளி உச்சி வானத்தில் பறக்கும் கருடனுக்கு மாலையிட ஆசைப்படலாமா?''

''இதென்ன கமலி, இப்படிப் பேசுகிறாய்? கொஞ்ச நாளைக்கு முன்னாலெல்லாம் நீதானே உன் தங்கைக்கு இணை மூன்று உலகத்திலும் இல்லை என்றும், மன்னாதி மன்னர்களெல்லாம் அவள் காலில் வந்து விழுவார்கள் என்றும் சொல்லிக் கொண்டிருந்தாய்?''

''ஆமாம், கண்ணா! என் தங்கை மேலுள்ள ஆசையினால் அப்படியெல்லாம் சொன்னேன். ஆசை இருக்கும் இடத்தில் அறிவு மழுங்கி விடும் அல்லவா? ஆர அமர யோசித்துப் பார்த்ததில், இதெல்லாம் நல்லதுக்கில்லை என்று தோன்றுகிறது. நான் சிவகாமிக்கு உடன்பாடாகப் பேசி அவள் ஆசையை வளர்த்து வந்ததும் தப்பு; மாமல்லரின் ஓலைகளை நீ அவளுக்குக் கொண்டு போய்க் கொடுத்துக் கொண்டிருந்ததும் தப்பு!''

''இப்பேர்ப்பட்ட ஞானோதயம் உனக்கு எப்படி உண்டாயிற்று?'' என்று கண்ணன் பரிகாசக் குரலில் கேட்டான்.

''கொஞ்சமாவது வெட்கமில்லாமல் நீ 'சின்னக் கண்ணன், சின்னக் கண்ணன்' என்று சொல்கிறாயே, அவன் என் வயிற்றில் வந்த பிற்பாடுதான்!'' என்றாள் கமலி.

''இதென்ன, கமலி! உன் தங்கை சிவகாமி மாமல்லரைக் கல்யாணம் செய்து கொள்வதற்கும் சின்னக் கண்ணனுக்கும் என்ன சம்பந்தம்? எனக்கு விளங்கவில்லையே?'' என்று கூறிக் கண்ணபிரான் 'கலகல'வென்று சிரித்தான்.

''உனக்கு ஒன்றுமே விளங்காது, கண்ணா! குதிரைகளோடு பழகிப் பழகிக் குதிரைகளுக்கு இருக்கிற அறிவுதான் உனக்கும் இருக்கிறது'' என்றாள் கமலி.

''இதோ பார், கமலி! நீ என்னைப் பற்றி என்ன வேணுமானாலும் சொல்; கேட்டுக் கொள்கிறேன். என் குதிரைகளைப் பற்றி மட்டும் ஒன்றும் சொல்



லாதே! குதிரைகளுக்கு உள்ள அறிவு மனிதர்களுக்கு இருந்தால் இந்த உலகம் எவ்வளவோ மேலாயிருக்குமே!'' என்றான் கண்ணன்.

குதிரைகளைப் பற்றிக் கமலி கேவலமாகப் பேசியதில் கண்ணனுக்கு மிக்க கோபம் உண்டாகி விட்டது. பின்பு சற்று நேரம் அவன் எதுவும் பேசாமல் வேறு பக்கம் பார்த்துக் கொண்டிருந்தான். கமலியும் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.


எனவே, கண்ணன் தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டு பேச வேண்டியதாயிற்று; ''நீ என்னதான் சொல்லுகிறாய்? கமலி! மாமல்லர் உன் தங்கையைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு என்ன தடை?'' என்று கேட்டான்.

''கண்ணா! இத்தனை நாட்களாக நீ அரண்மனைச் சேவகம் செய்கிறாய். ஆனாலும் அரண்மனை நடைமுறை ஒன்றும் உனக்குத் தெரியவில்லை. இராஜாக்களும் இராஜகுமாரர்களும் கல்யாணம் செய்து கொள்ளுவதென்றால் நீயும் நானும் கல்யாணம் செய்து கொள்வது போலவா? மாமல்லருடைய மகன் ஒரு நாள் இந்தக் காஞ்சி சிம்மாசனத்தில் ஏற வேண்டியிருக்குமல்லவா?''

''இதைத் தெரிந்து கொள்ள அபாரமான அறிவு வேண்டியதில்லை. குதிரைக்கு இருக்கும் அறிவுகூடப் போதுமே!''

''அப்படியானால் அந்த அறிவைச் செலுத்தி இன்னும் கொஞ்சம் யோசித்துப் பார்! சிற்பியின் மகள் வயிற்றிலே பிறக்கும் பிள்ளையைப் பல்லவ சிம்மாசனத்தில் ஏற்றி வைக்க முடியுமா?''

''ஏன் முடியாது? அதிலே என்ன கஷ்டம்? நமது அரண்மனைச் சிம்மாசனம் அப்படியொன்றும் அதிக உயரமில்லையே? நான் ஒருவ



னாகவே தூக்கி அதில் உட்கார்த்தி வைத்து விடுவேனே?'

"நீ விளையாடுகிறாய், கண்ணா! ஆயனச் சிற்பியின் பேரன் பல்லவ குலத்துச் சிம்மாசனத்தில் ஏறுவதற்கு நாட்டார் — நகரத்தார் சம்மதிப்பார்களா?"

"நாட்டார் — நகரத்தாரைச் சம்மதிக்கச் செய்வது என் பொறுப்பு, கமலி! நீ பார்த்துக் கொண்டேயிரு! இரண்டு கைகளிலும் இரண்டு குதிரைச் சாட்டையை எடுத்துக் கொண்டு போய் நாட்டார் — நகரத்தாரின் முதுகில் வெளு வெளு என்று வெளுத்துச் சம்மதிக்கும்படி செய்கிறேனா, இல்லையா, பார்!"

"அது மட்டுமல்ல, கண்ணா! மகேந்திர பல்லவரின் சித்தப்பா பேரன் ஒருவன் வேங்கிபுரத்தில் வளர்ந்து



கொண்டிருக்கிறானே, உனக்குத் தெரியாதா? அந்த ஆதித்த வர்மன் பல்லவ சிம்மாசனத்துக்குப் போட்டிக்கு வர மாட்டானா?"

"வரமாட்டான், கமலி, வரமாட்டான். வேங்கிபுரம் அடியோடு போய் விட்டது. வேங்கியோடு ஆதித்தவர்மனும் நாசமாய்ப் போய்விட்டான். இனி மேல் வரமாட்டான்!"

"மேலும், நமது குமார சக்கரவர்த்தி மற்ற தேசத்து இராஜகுமாரர்களைப் போல் அல்லவே! ஆசைக்குச் சிவகாமியைக் கல்யாணம் செய்து கொண்டு பட்டத்துக்கு இன்னொரு ராஜகுமாரியைக் கல்யாணம் செய்து கொள்ள மாமல்லர் இணங்க மாட்டார் அல்லவா? அவருடைய சுபாவம் மகேந்திர சக்கரவர்த்திக்கும் நன்றாய்த் தெரியும். ஏக பத்தினி விரதம் கொண்ட இராமனைப் போன்றவர் அல்லவா நம் மாமல்லர்?"

"ஆமாம், கமலி! சந்தேகமே இல்லை. மாமல்லர் அது விஷயத்தில் இராமனையும் கண்ணனையும் போன்றவர்தான்!...... கோகுலத்துக் கண்ணனை நான் சொல்லவில்லை. அந்த அயோத்தி ராமனையும் இந்தக் காஞ்சிக் கண்ணனையும் போன்றவர்!" என்று கண்ணபிரான் தன்னைச் சுட்டிக் காட்டிக் கொள்ளவே, கமலிக்குச் சிரிப்புப் பீரிட்டுக் கொண்டு வந்தது.

சற்றுப் பொறுத்துக் கண்ணபிரான், "கமலி! எனக்கு ஒரே அதிசயமாயிருக்கிறது! இவ்வளவு மர்மமான இராஜரீக விவகாரங்களெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டான்.

"எல்லாம் எனக்காகத் தெரிந்துவிடவில்லை, கண்ணா! நானாக யோசித்ததில் கொஞ்சம் தெரிந்தது; ஒட்டுக் கேட்டதில் மற்றதெல்லாம் தெரிந்தது."

"என்னத்தை ஒட்டுக் கேட்டாய்! எப்போது கேட்டாய்?"

"நாலைந்து நாளைக்கு முன்னால் நீ வீட்டில் இல்லாதபோது இங்கே ஒரு மனிதர் வந்திருந்தார், கண்ணா! அவரும் மாமாவும் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். சிவகாமியின் பெயர் காதில் விழவே, நான் சுவர் ஓரமாய் நின்று கேட்டேன். இந்த விஷயமெல்லாம் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். அதோடு..."

"அதோடு என்ன கமலி?"

"இன்னொரு முக்கிய விஷயமும் பேசினார்கள்."

"சொல்லு!"

"சிவகாமிக்கு மாமல்லர் ஓலை எழுதுவதும், அதை நீ கொண்டு போய்க் கொடுத்து வருவதும் உன் அப்பாவுக்குத் தெரிந்திருக்கிறது. அதைப் பற்றி அந்தப் புது மனிதனிடம் சொல்லிக்கொண்டிருந்தார்."

"ஆஹா! அந்தக் கிழக் கோட்டான், அந்த ராவண சந்நியாசி, அந்த ருத்திராட்சப் பூனை அப்படியா செய்து கொண்டிருக்கிறது?" என்றான் கண்ணபிரான். அவனுடைய தந்தையைப் பற்றித்தான் அவ்வளவு மரியாதையான வார்த்தைகளைச் சொன்னான்.

கமலி அவனுடைய வாயைப் பொத்தினாள்.

"அந்தப் புது மனிதர் யார் தெரியுமா, கமலி?" என்று கண்ணன் கேட்டான்.

"தெரியாது; அதற்கு முன்னால், அவரை நான் பார்த்ததே இல்லை" என்றாள் கமலி.

அந்தச் சமயத்தில் தெருவில் விரைவாகக் குதிரை பாய்ந்து வரும் சத்தம் கேட்டது. கண்ணன், கமலி இருவரும் பலகணி வழியாய் வீதியில் பார்த்தனர். நாலு கால் பாய்ச்சலில் சென்ற குதிரை மீது ஒருவன் போய்க் கொண்டிருந்தான். அவனுடைய முகம் ஒரு கணம் கண்ணன் வீட்டுப் பக்கம் திரும்பி மறு கணம் எதிரே நோக்கியது.

கமலி, ''கண்ணு! அவர்தான்! அந்தக் குதிரையில் போகிறவர்தான் அன்றைக்கு வந்து மாமாவுடன் பேசிக் கொண்டிருந்தவர்! அவர் யார், உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''தெரியும் கமலி! அவன்தான் ஒற்றர் தலைவன் சத்ருக்னன். மகேந்திர சக்கரவர்த்தியிடம் போய் விட்டுத் திரும்பி வருகிறான். ஏதோ விசேஷச் செய்தி கொண்டு வருகிறான். இதோ போய்த் தெரிந்து கொண்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டுக் கண்ணன் வெளியேறினான்.

* * *

ஒரு நாழிகைக்கெல்லாம் அந்த வீட்டு வாசலில் 'கடகட'வென்ற சத்தத்துடன் ரதம் வந்து நின்றது. கண்ணபிரான் ரதத்தின் முன் தட்டிலிருந்து குதித்து உள்ளே ஓடி வந்து, சமையற்கட்டிலிருந்து வந்துகொண்டிருந்த கமலியின் மேல் மோதிக் கொண்டான்.

''அவ்வளவு என்ன அவசரம்?'' என்றாள் கமலி.

கண்ணபிரான், ''என்ன அவசரமா? யுத்தத்துக்குப் போகிற அவசரந்தான்'' என்றான்.

''என்ன, யுத்தத்துக்குப் போகிறாயா?'' என்று கமலி பாய்ந்து வந்து கண்ணன் கழுத்தைத் தன் இரு கரங்களாலும் சேர்த்துக் கட்டிக் கொண்டாள்.

''ஆமாம், கமலி! ஒற்றர் தலைவன் சத்ருக்னன் மகேந்திர சக்கரவர்த்தியிடமிருந்து ஓலை கொண்டு வந்திருக்கிறான். மாமல்லர் போர்க்களத்துக்குப் போகச் சக்கரவர்த்தி அநுமதி கொடுத்துவிட்டார். இன்னும் அரை நாழிகையில் மாமல்லர் கிளம்புகிறார், கமலி!''

''நீயும் கிளம்புகிறாயா, கண்ணு! நிஜமாகவா?''

''இது என்ன கேள்வி கமலி! மாமல்லர் போனால் நான் அவருடன் போகாமல் எப்படி இருக்க முடியும்?''

''மாமல்லர், சக்கரவர்த்தியின் திருக்குமாரர்; நாளைக்குப் பல்லவ சிம்மாசனத்தில் ஏறப் போகிறவர். அவர் போர்க் களத்துக்குப் போய் யுத்தம் செய்ய வேண்டும். நீ ஏன் போக வேண்டும்? எந்த ராஜா வந்தாலும் எந்த ராஜா போனாலும் நமக்கு என்ன வந்தது?''

''இது என்ன கமலி? நேற்று வரை நீ இப்படியெல்லாம் பேசினதே இல்லையே? நம் பிறந்த நாட்டுக்கு அபாயம் வந்திருக்கும்போது நமக்கென்ன என்று'நாம் வீட்டில் இருப்பதா?...''

''நாட்டுக்கு அபாயம், நகரத்துக்கு அபாயம் என்று ஓயாமல் சொல்லுகிறாயே, கண்ணு! அப்படி என்ன அபாயம் வந்து விட்டது?''

''பல்லவ நாட்டுக்கு இது பொல்லாத காலம், கமலி. வடக்கேயிருந்து வாதாபி புலிகேசி மிகப் பெரிய சைனியத்துடன் வந்து கொண்டிருக்கிறான். அந்தச் சைனியத்தைத்தான் சக்கரவர்த்தி தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கிறார். இந்தப் பக்கத்தில் கங்க



நாட்டு ராஜாவுக்கு அதற்குள் அவசரம் பொத்துக் கொண்டு விட்டது. புலிகேசிக்கு முன்னால் தான் காஞ்சிக்கு வந்துவிட வேண்டும் என்று மேற்குத் திக்கிலிருந்து படையெடுத்து வந்து கொண்டிருக்கிறான். கங்கநாட்டு ராஜாவின் பெயர் என்ன தெரியுமா, கமலி! துர்விநீதன் — துரியோதனனுடைய மறு அவதாரம் இவன்தான் போலிருக்கிறது! இந்தத் துர்விநீதனை எதிர்க்கத் தான் மாமல்லர் கிளம்புகிறார், கமலி! நானும் கிளம்புகிறேன். இத்தனை நாட்களும் நான் எப்போது வரும் என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பம் வந்திருக்கிறது. மனப்பூர்வமாக, உற்சாகமாக எனக்கு விடை கொடுத்து அனுப்பு!''

''கண்ணு! நான் என்ன செய்யட்டும்! என் மனத்தில் ஏனோ உற்சாகமில்லை. என் தங்கை சிவகாமியை நினைக்க

மனச் சோர்வு அதிகமாகிறது. அவ ளுடைய தலைவிதி என்னவோ என்று எண்ண எண்ண ஏக்கமா யிருக்கிறது.''

''ஆகா! முக்கியமான விஷயத்தைச் சொல்லாமல் விட்டுவிட்டேனே? மகேந் திர சக்கரவர்த்தியைப் பற்றி நீ என்ன வெல்லாமோ சந்தேகப்பட்டாய் அல் லவா, கமலி! அதெல்லாம் சுத்தத்தப்பு! சக்கரவர்த்தி என்ன சொல்லி அனுப்பி யிருக்கிறார், தெரியுமா? மாமல்லரைப் போர்க் களத்துக்குப் போவதற்கு முன் னால் நேரே ஆயனர் வீட்டுக்குச் சென்று ஆயனரையும் சிவகாமியையும் உடனே காஞ்சிக் கோட்டைக்கு அனுப் பச் சொல்லி யிருக்கிறார். ஒருவேளை, நானே அவர்களை ரதத்தில் ஏற்றிக் கொண்டு இங்கே விட்டுப் போனாலும் போவேன். மகேந்திர பல்லவரைப் பற்றி இப்போது என்ன சொல்கிறாய், கமலி? அவர் நல்லவரா, பொல்லாத வரா?'' என்று கண்ணபிரான் தலை நிமிர்ந்து கர்வத்துடன் கேட்டான்.

''எப்படியாவது எல்லாம் நன்றாக முடியட்டும் கண்ணா! நீயும் போர்க் களத்திலிருந்து க்ஷேமமாய்த் திரும்பி வர வேண்டும்'' என்று கமலி கூறிய போது, அவள் கண்களிலிருந்து அருவி பெருகியது.

பதினாறாம் அத்தியாயம்

முற்றுகைக்கு ஆயத்தம்

கண்ணபிரானும் கமலியும் வாக்கு வாதம் செய்து கொண்டிருந்த அதே சமயத்தில் அரண்மனை அந்தப்புரத் தின் முன் வாசல் மண்டபத்தில் அமர்ந்து, மகேந்திர பல்லவரின் பட்ட மஹிஷியான புவன மகாதேவியும், மாமல்ல நரசிம்மரும், தளபதி பரஞ் சோதியும் வார்த்தையாடிக் கொண் டிருந்தார்கள்.

''தேவி, சென்ற எட்டு மாதங்களாக இந்தக் கோட்டைக்குள்ளே அடைபட் டுக் கிடக்க நேர்ந்ததன் பொருட்டுக் குமாரச் சக்கரவர்த்தி ஓயாமல் குறைப் பட்டுக் கொண்டிருக்கிறாரே? அவர் குறைப்படுவதற்குக் காரணம் ஒன்றுமே இல்லை. கோட்டை மதில், நகரம் எல்லாவற்றையும் நான் நன்றாய்ச் சுற்றிப் பார்த்தாகி விட்டது. இந்தக் காஞ்சிக் கோட்டையை ஏறக்குறைய புதிய கோட்டையாகவே செய்துவிட் டிருக்கிறார். தேவேந்திரனும் விருத் திராசுரனும் சேர்ந்து படையெடுத்து வந்தாலும் கூடக் காஞ்சிக் கோட்டைக் குள்ளே புகமுடியாது. வாதாபி புலி கேசியும், தலைக்காட்டுத் துர்விநீத னும் என்ன செய்துவிடப் போகி றார்கள்!'' என்று தளபதி பரஞ்சோதி கூறினார்.

''கோட்டையை அவ்வளவு பலப் படுத்த மாமல்லன் என்னென்ன காரி யங்கள் செய்திருக்கிறான்? நீதான் எனக்குச் சொல்ல வேண்டும், பரஞ் சோதி! மாமல்லன் எனக்கு ஒன்றுமே சொல்வதில்லை. அந்தப்புரத்துக்குள் அடைபட்டுக் கிடக்க வேண்டிய அபலை ஸ்திரீக்கு யுத்த விஷயங்கள் என்ன தெரி யப் போகிறது என்று அவனுக்கு எண் ணம்!'' என்றாள் மகேந்திர பல்லவரின் பட்டமகிஷி.

''அம்மா! அந்தப்புரத்தில் அடை பட்டுக் கிடக்கும் அபலை ஸ்திரீ உண்மை யில் தாங்களா? நானல்லவா பெண் ணிலும் கேடானவனாகக் கோட்டைக் குள்ளேயே அடைபட்டுக் கிடக்கிறேன்! மகேந்திர பல்லவர் இப்படி என்னை வஞ் சிப்பார் என்று நான் நினைக்கவில்லை!'' என்று கூறி மால்லர் கையைப் பிசைந்து கொண்டார்.

''குழந்தாய்! உன் தந்தையைப்பற்றி எதுவும் சொல்லாதே! அவர் என்ன சொன்னாலும், என்ன செய்தாலும் அது முன்யோசனையுடனும் தீர்க்க திருஷ்டியுடனும் இருக்கும்...'' என்று புவன மகாதேவி கூறுவதற்குள் பரஞ் சோதி, ''உண்மை தேவி! உண்மை! மகேந்திர சக்கரவர்த்தியைப் போல் மதிநுட்பமும் முன்யோசனையும் உள்ள வர்களை ஈரேழு பதினாலு உலகத்திலும் காண முடியாது என்று நான் சத்தியம் செய்வேன்!'' என்றார்.

''ஒருவருக்கு இரண்டு பேராய்ச் சேர்ந்து கொண்டீர்கள் அல்லவா? அப்படியென்றால் நானும் உங்களோடு சேர்ந்து கொள்ளுகிறேன். மகேந்திர பல்லவர் ரொம்பவும் முன்யோசனை யுடன் காரியங்களைச் செய்கிறவர்தான்; சந்தேகமில்லை. ஆனால், அவருடைய தந்தை சிம்மவிஷ்ணு மகாராஜா இன் னும் அதிக முன்யோசனை உள்ளவர். ஆகையினால்தான் அவர் துர்விநீத னுடைய தந்தைக்குப் பட்டம் கட்டி வைத்தார். அவரே நேரில் கங்க தேசம் சென்று தம் கையினாலேயே மகுடம் சூட்டினார்! அந்தக் காரியத்

துக்கு எவ்வளவு நன்றாய் இப்போது துர்விநீதன் நன்றி செலுத்துகிறான் பாருங்கள்! சிங்கமும் சிங்கமும் சண்டை போட்டுக் கொண்டிருக்கும்போது நடுவில் நரி நுழைவது போல், புலிகேசி படையெடுத்திருக்கும் சமயம் பார்த்துத் துர்விநீதனும் பல்லவ இராஜ்யத்தின் மீது படையெடுத்து வருகிறான்! அவசர அவசரமாக எங்கும் இராத் தங்காமல் துர்விநீதன் தன் சைனியத்துடன் வந்து கொண்டிருக்கிறான். இது தெரிந்தும், நான் இந்தக் கோட்டைக்குள்ளேயே அடைந்து கிடக்க வேண்டியிருக்கிறது! நீங்கள் சக்கரவர்த்தியின் மதி நுட்பத்தையும் தீர்க்காலோசனையையும் பற்றிப் பேசுகிறபோது, எனக்கு உடம்பெல்லாம் பற்றி எரிகிறது!'' என்று மாமல்லர் கூறுகையில், அவருடைய கண்கள் நெருப்புத் தணலைப் போல் சிவந்து தீப்பொறியைக் கக்கின.

''குழந்தாய்! வீணாக நொந்து கொள்ளாதே! கங்கபாடி அரசனின் நன்றியற்ற துரோகச் செயலை நினைத்தால் எனக்கும் கோபமாய்த்தான் இருக்கிறது. அதற்காக என்ன செய்யலாம்? எதற்கும் காலம் வரவேண்டுமல்லவா?'' என்றாள் புவன மகாதேவி.

''தேவி! துர்விநீதனுக்குத் தக்க தண்டனை கொடுக்க இதற்குள்ளாகவே சக்கரவர்த்தி திட்டம் போட்டிருப்பார்; சந்தேகமில்லை'' என்றார் தளபதி பரஞ்சோதி.

''சக்கரவர்த்தி திட்டம் போட்டிருப்பார்; அதை நிறைவேற்றவும் செய்வார். ஆனால், நான் ஒருவன் எதற்காக யுவ மகாராஜா, குமார சக்கரவர்த்தி, மாமல்லன் முதலிய பட்டங்களைச் சுமந்து கொண்டிருக்கிறேன்? —அம்மா! பாரதக் கதையில் வரும் உத்தரகுமாரனை விடக் கேடானவன் ஒருவன் உண்டு என்றால், அவன் நான்தான். உத்தர குமாரனாவது போர்க்களத்துக்குப் போய்விட்டுத் திரும்பி ஓடி வந்தான். நானோ அரண்மனையை விட்டு வெளிக் கிளம்பவே இல்லை. மகாபாரதக் கதையை எழுதியது போல் இந்தக் காலத்துக் கதையை யாராவது எழுதினால், என்னுடைய வீரத்தையும் தீரத்தையும் எவ்வளவு பாராட்டுவார்கள்? ஆனாலும் நான் சாந்தமாக இருக்க வேண்டுமென்று நீங்கள் இருவரும் சேர்ந்து உபதேசிக்கிறீர்கள்!'' என்று கூறியபோது, வீர மாமல்லரின் கண்களில் நீர் ததும்பி நின்றது.

அவருடைய முகத்தை நேருக்கு நேர் பார்க்க முடியாதவரா யிருந்த பரஞ்சோதி, சக்கரவர்த்தினியை நோக்கி, 'தேவி! பல்லவகுமாரர் தம்மை உத்தர குமாரனுடன் ஒப்பிட்டுக் கொள்வது கொஞ்சமும் பொருத்தமா யில்லை. மற்ற எல்லாரும் போருக்குப் போன போது உத்தரகுமாரன் என்ன செய்து கொண்டிருந்தான்? தன்னுடைய தங்கை உத்தரகுமாரி நாட்டியம் கற்றுக் கொள்வதைப் பார்த்துக் கொண்டு காலம் கழித்தான். மாமல்லர் அப்படிக் காலம் கழிக்கவில்லையே!'' என்றார். இவ்விதம் அவர் சொல்லி வருகையில் மூன்று பேருக்கும் சிவகாமியின் நாட்டியக் கலை விஷயம் ஞாபகம் வந்தது! மாமல்லரின் முகம் சுருங்கியது.

பரஞ்சோதி தாம் நடனக் கலையைப் பற்றிப் பிரஸ்தாபித்தது உசிதத் தவறு என்பதை உணர்ந்து கொண்டு, ''மேலும் யுத்தம் இன்னும் ஆரம்பமாகக்கூட இல்லையே? மகாபாரத



யுத்தத்தைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு பெரிய யுத்தம் இனிமேல் தானே நடக்க விருக்கிறது? மாமல்லர் வீரச்செயல்கள் புரிவதற்கு இனிமேல்தானே சந்தர்ப்பங்கள் வரப் போகின்றன?'' என்றார்.

''போதும், போதும்! எத்தனை யுத்தம் நடந்தால் என்ன, எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்கள் வந்தால் என்ன? அப்பா என்னை இந்தக் கோட்டைக் குள்ளேயே பூட்டிவைக்க மாட்டார் என்பது என்ன நிச்சயம்?'' என்று மாமல்லர் கொதிப்புடன் கேட்டார்.

புதல்வனின் மன நிலையைக் கண்ட அன்னை பேச்சை மாற்ற விரும்பி, ''பரஞ்சோதி! கோட்டையைப் பத்திரப் படுத்துவதற்கு மாமல்லன் செய்திருக்கும் காரியங்களைப் பற்றி நீ ஒன்றும் சொல்லவில்லையே?'' என்றாள்.



மகா சிவராத்திரியில் மாரத்தான் ஓட்டம்

இப் பாரத நாட்டின் தென்கோடியிலுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் திருமலை, திக்குறிச்சி, திருப்பரப்பு, திருநந்திக்கரை, பொன்மனை, பன்னிப்பாகம், கல்குளம், மேலாங்கோடு, திருவிடைக்கோடு, திருவிதாங்கோடு, திருப்பன்றிக்கோடு, திருநட்டாலம் என்ற பன்னிரண்டு பழம்பெரும் சிவாலயங்கள் உள்ளன. இக்கோவில்களில் சிவபிரானுக்கே உரிய இரவான மகா சிவராத்திரி விழா வருடா வருடம் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. சிவராத்திரி யன்று பக்தர்கள் காவி அல்லது மஞ்சள் வர்ண உடை அணிந்து 'கோவிந்தா', 'கோவிந்தா' என்னும் நாமத்தைத் துதித்துக் கொண்டே மேலே குறிப்பிடப்பட்டுள்ள திருமலைக் கோயிலிலிருந்து தொடங்கி முறையாகப் பன்னிரண்டு கோயில்களுக்கும் மாரத்தான் ஓட்டமாக ஓடி வழிபடுகிறார்கள். சிவராத்திரி அன்று 'கோவிந்தா', 'கோவிந்தா' என்று திருமாலின் நாமத்தைக் கூறுவது அரியும் சிவனும் ஒன்று என்பதை உணர்த்தவே என்பர். —ரமா ராமநாதன்

''தேவி! நமது கோட்டை மதிலைச் சுற்றியுள்ள அகழியைத் தாங்கள் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா?''

''ஆமாம்; எட்டு மாதங்களுக்கு முன் பார்த்திருக்கிறேன். சக்கரவர்த்தி புறப்பட்டுச் சென்ற பிறகு நான் அரண்மனையை விட்டு வெளியே கிளம்பவே இல்லை.''

''நானும் எட்டு மாதங்களுக்கு முன்பு பார்த்ததுதான். முன்னே பார்த்த போது சிறு கால்வாய் மாதிரி இருந்தது. இப்போது பார்த்தால் சமுத்திரம் மாதிரி அலை மோதிக் கொண்டிருக்கிறது. எங்கே பார்த்தாலும் முதலைகள் வாயைப் பிளந்து கொண்டு காணப்படுகின்றன. வாதாபிச் சைன்யத்தில் எத்தனை பேருக்கு இந்த அகழியில் மோட்சம் கிடைக்கப் போகிறதோ!'' என்றார் பரஞ்சோதி.

''அகழியில் அவர்கள் இறங்கினால் தானே? பாலங்கள் அமைத்துக் கொண்டு வந்தால்? அல்லது படகிலே வந்தால்?''

''தேவி! அகழியின் அருகில் வருகிறவர்கள் மீது அம்புகளைப் பொழிய ஐயாயிரம் வில்வீரர்கள் மதில்கள் மீது மறைந்து காத்திருப்பார்கள். அப்படியும் அகழியைத் தாண்டி வருகிறவர்களுக்கு, மதில் சுவருக்கும் அகழிக்கும் மத்தியில் எத்தனையோ அதிசயங்கள் காத்துக் கொண்டிருக்கும். வெளிக்குத் தெரியாத பள்ளங்களில் அவர்கள் விழுந்து காலை ஒடித்துக் கொள்வார்கள். ஆங்காங்கே கண்ணுக்குத் தெரியாதபடி விரித்திருக்கும் வலைகளிலும் பொறிகளிலும் சிக்கிக் கொள்வார்கள். இவற்றையெல்லாம் மீறி வந்து மதில் சுவர் மேல் ஏற முயலும் சளுக்க வீரர் தலைகளின் மீது மதில் சுவரின் மேல் வைத்திருக்கும் பாறாங்கற்கள் உருண்டு விழும்!...''

''வாதாபிச் சைனியம் கடலைப்போல் பெரியதென்று சொல்கிறார்களே, பரஞ்சோதி? இலட்சக்கணக்கான வீரர்கள் மனம் வைத்தால் அகழியை ஆங்காங்கே தூர்த்து வழி ஏற்படுத்திக் கொள்ளலாமல்லவா?''

''ஆமாம், தேவி! அகழியைத் தூர்க்கலாம்; ஆனால் கோட்டை மதிலை அவ்வளவு சுலபமாக இடிக்க முடியாது!''

''கோட்டை வாசலுக்கு எதிரே அகழியைத் தூர்த்துக் கொண்டு யானைகளை ஏவினால் என்ன செய்கிறது? மத்த கஜங்களின் தாக்குதலுக்கு எதிரே கோட்டையின் மரக் கதவுகள் என்ன செய்யும்?'' என்று பட்டமகிஷி கேட்ட போது, பரஞ்சோதி எதையோ நினைத்துக்கொண்டவர்போல் சிரித்தார்.

''அப்பா! ஏன் சிரிக்கிறாய்?'' என்றாள் சக்கரவர்த்தினி.

''தாங்கள் கேட்டதை நினைத்துத் தான் சிரித்தேன். உண்மைதான், தேவி! வாதாபி வீரர்கள் அப்படித்தான் செய்யப் போகிறார்கள். நமது கோட்டை வாசல்களுக்கு எதிரே அகழியைத் தூர்க்கப்போகிறார்கள். அல்லது பெரிய பெரிய மரங்களை வெட்டிக் கொண்டு வந்து பாலம் போடப் போகிறார்கள். போட்டு விட்டுக் கோட்டைக் கதவுகளைத் தகர்க்க யானைகளை ஏவப் போகிறார்கள். அந்த யானைகளுக்கு முதலில் மதுவைக் கொடுத்து விட்டுத்தான் ஏவுவார்கள்! ஆனால், ஆகா! அந்த யானைகள் எப்பேர்ப்பட்ட அதிசயத்தை அனுபவிக்கப் போகின்றன; கோட்டை வாசலின் மேல் மண்டபத்தில் இருந்தும் பக்கத்து மதில் சுவர்களின் மேலிருந்தும் வஜ்ராயுதம் விழுவது போல் வேல்கள் வந்து அவற்றின் தலைமீது விழும்போது, அந்த மதுவுண்ட யானைகள் பயங்கரமாய்ப் பிளிறிக் கொண்டு இரும்பி ஓடி வாதாபி வீரர்களைத் துவைத்து நாசமாக்கப் போகிற காட்சியை நினைத்

துப் பார்க்கையிலேயே எனக்குச் சிரிப்பு வருகிறது! இது மட்டுமா? மேலேயிருந்து விழுகிற வேல்களுக்குத் தப்பிச் சிற்சில யானைகள் வந்து கதவிலே மோதக் கூடுமல்லவா? அதனால் கோட்டைக் கதவுகள் பிளக்கும்போது அந்த யானைகளுக்கு மகத்தான அதிசயம் காத்திருக்கும். தேவி, வெளிக் கதவு பிளந்ததும், உள்ளே இருக்கும் மற்றொரு கதவில் பொருத்தப்பட்டு நீட்டிக் கொண்டிருக்கும் வேல் முனைகள் அவற்றின் மண்டையைப் பிளக்கும்போது, ஆகா! அந்த யானைகள் வந்த வேகத்தைக் காட்டிலும் திரும்பி ஓடும் வேகம் அதிகமாயிராதா?'' என்றார் பரஞ்சோதி.

''அப்படியா?'' என்று மாமல்லரின் அன்னை அதிசயத்துடன் கேட்டாள்.

அதுவரையில் மௌனமாயிருந்த மாமல்லர் அப்போது சம்பாஷணையில் சேர்ந்து, ''ஆம் அம்மா! ஆனால், இந்த ஏற்பாடுகளுக்கெல்லாம் மூலகாரணம் யார் தெரியுமா? நம் தளபதி பரஞ்சோதிதான்! இவர் முதன் முதலில் காஞ்சியில் புகுந்த அன்று மதயானையின் மேல் வேலை எறிய, யானை திரும்பி ஓடிற்றல்லவா? அதற்கு மறுநாளே இந்தக் காஞ்சி மாநகரில் உள்ள கொல்லர்கள் எல்லோரும் வேல் முனைகள் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்! தளபதி அன்று செய்த காரியத்தினால்தான், வாதாபி யானைப் படையை, எதிர்ப்பதற்குத் தக்க யோசனை அப்பாவின் மனத்தில் உதயமாயிற்றாம். இதையெல்லாம் அப்பாவே என்னிடம் சொன்னார்!'' என்று பெருமையுடன் கூறிப் பரஞ்சோதியை அன்புடன் தழுவிக் கொண்டார்.

''தேவி! இந்த எட்டு மாதங்களில், காஞ்சி நகர்க் கொல்லர்கள் செய்திருக்கும் வேலையை நேற்று நான் பார்த்தேன். லட்சோப லட்சம் வேல்களைச் செய்து குவித்திருக்கிறார்கள். காஞ்சி நகர்க் கொல்லர்கள் வெகு கெட்டிக்காரர்கள் அம்மா! நான் கொண்டு வந்திருந்த சோழ நாட்டு வேலைப் போலவே அவ்வளவும் செய்திருக்கிறார்கள். என்னையே அவர்கள் ஏமாறச் செய்து விட்டார்கள். வட நாட்டுக்கு நான் யாத்திரை சென்றபோது என்னிடம் கொடுக்கப்பட்ட வேல் என்னுடைய சொந்த வேல்தான் என்று எண்ணி நான் ஏமாந்து போனேன். இங்கே திரும்பி வந்ததும்தான் என்னுடைய வேலை மாமல்லர் பத்திரமாய் வைத்திருந்தார் என்று தெரிந்தது. எட்டு மாதங்களும் வீணில் கழித்ததாக

மாமல்லர் எண்ணுவது பெரும் பிசகு. அம்மா! கோட்டை மதில் பாதுகாப்புக் காரியம் மட்டுமல்ல; கோட்டையை முற்றுகைக்கு ஆயத்தமாக்க இன்னும் எவ்வளவோ செய்திருக்கிறார். காஞ்சி மக்களுக்கு இரண்டு வருஷங்களுக்குத் தேவையான தானியங்கள் வந்து சேர்ந்திருக்கின்றன. நகருக்குள்ளிருந்த அநாவசியமான மக்கள் எத்தனையோ பேரை வெளியேற்றியாகி விட்டது. முக்கியமாகக் காஞ்சி நகருக்கே அவலட்சணமாயிருந்த காபாலிகர்களை வெளியேற்றியது பெரிய காரியம். அதற்குக் குமார சக்கரவர்த்தி வெகு நல்ல யுக்தியைக் கையாண்டார், தேவி! காஞ்சியிலுள்ள மதுபானக் கடைகளையெல்லாம் மூடிவிடவேண்டும் என்று நேற்றைய தினம் கட்டளை போட்டார். இன்றைக்கு அவ்வளவு காபாலிகர்களும் கையில் மண்டை ஓட்டையும், மாட்டுக் கொம்பையும் எடுத்துக் கொண்டு வடக்குக் கோட்டை வாசல் வழியாகப் போய் விட்டார்கள்....!''


இப்படிப் பரஞ்சோதி சொல்லிக் கொண்டே வருகையில் அந்தப்புரத்துச் சேடி ஒருத்தி, அரண்மனை முன்கட்டிலிருந்து உள்ளே வந்து, புவன மகாதேவியின் அருகில் நின்று மெதுவான குரலில் ஏதோ கூறினாள்.

அதைக் கேட்ட தேவி, முகத்தில் கிளர்ச்சியுடன், ''மாமல்லா! அப்பாவிடமிருந்து செய்தியுடன் சத்ருக்னன் வந்திருக்கிறானாம்!'' என்று சொன்னாள்.

மாமல்லர் பரபரப்புடன் எழுந்து போக முயன்ற போது, ''குழந்தாய்! சத்ருக்னன் இங்கேயே வரட்டும். செய்தி என்னவென்று நானும் தெரிந்து கொள்ளுகிறேன்'' என்றாள் அன்னை.

(தொடரும்)







கடும் அதிவெப்பத் தேவைகளுக்கு நம்பகமானவை

ஃபயர்க்ரீட் மற்றும் ஃபயர்க்ரீட் சூபர்

ஏசிசி யின் காஸ்டபிள் ரிஃப்ராக்டரிகள்

எவ்வடிவத்திலும் வார்க்கலாம். எந்த அளவிற்கும் உருவமைக்கலாம். சிறு துணுக்குகளாதல் மற்றும் தேய்மானம் இவற்றைத் தவிர்ப்பதோடு வெப்ப அதிர்ச்சிகளையும் தாங்க வல்லவை.


1350° செ. வரையிலுமான வெப்பநிலைகளுக்கு ஃபயர்க்ரீட், 1550° செ. வரையிலுமான வெப்பநிலைகளுக்கு ஃபயர்க்ரீட் சூப்பர்.

வாடிக்கையாளரின் தேவைக்கு தகுந்தவாறு காஸ்டபிள் ரிஃப்ராக்டரிகள் கிடைக்கின்றன.

ஏசிசி — தரமான
தயாரிப்புகளுக்கு நம்பகமான உத்தரவாதம்

தி அசோசியேடெட் சிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்

ACC. 1050 TAM.



பெருமானே சாட்சி

தொழிலதிபர் கோபாலரத்தினம் வாலிபப் பருவத்தில், இயற்கையின் விகார வசப்பட்டுச் செய்து விட்ட தவற்றுக்குப் பரிகாரம் செய்ய முடியாமல் தவிக்கும் தவிப்புதான் ஸ்டேஜ் ஃப்ரெண்ட்ஸ் நடத்தும் இந் நாடகத்தின் முக்கியமான பகுதி. ஒரு சோகமான நிகழ்ச்சியை மையமாக வைத்து ஒரு ஹாஸ்ய நாடகம் தயாரித்திருப்பதை மெச்ச வேண்டியதுதான். 'கோபாலரத்தினம் ஒருவிதம், அவர் மனைவி ஒருவிதம்; அவர் மகன் ஒருவிதம்; சதா குதிரைப் பந்தயத்துக்குப் போகும் மாமா ஒருவிதம்; அவர் பெண் ஒருவிதம் — இத்தனை பேர்களையும் தன் திறமையினால் சரிக்கட்டித் தன் வழிக்குக் கொண்டு வந்து குடும்பத்தையே சீர்ப்படுத்திய அபிராமி ஒருவிதம் !

எதற்கும் பெருமானையே துணையாகவும் சாட்சியாகவும் கொண்டு செயல்படுபவர் அனந்தாச்சாரி. எல்லாரையும் இயக்கித் தாமும் இயங்கி நாடகத்தை நல்லபடியாக முடித்து வைக்கும் அந்தப் பாத்திரத்தை ஏற்பதற்குத் தகுந்தவர், அநுபவம் மிக்க நடிகர் எஸ். வி. சகஸ்ரநாமமாகத்தான் இருக்க முடியும்.

அடுத்தபடி ரசிகர்களுக்குத் திருப்தியளிக்கும் பாத்திரம், அபிராமி. பேச்சு, பார்வை, நடிப்பு எல்லாமே பிரமாதம்! மாமா லோகநாதன் மீது காதற் பார்வையைக் கடைக் கண்ணால் வீசி அவரை அசடுவழியச் செய்யும் தந்திரம் ஒன்று போதும்!

மாமா லோகநாதனாக வரும் டி. எம். சாமிக்கண்ணு குதிரைப் பந்தயத்தைப் பற்றிப் பேசும் லாகவமும், அபிராமியின் காதற் பார்வையில் கலகலத்துப் போய் நெளிகிற நெளியும் மேடையையே கலகலப்பாக்கி விடுகின்றன!


கோபாலரத்தினம் கொஞ்சம் சீரியஸான பாத்திரம். அதற்கு ஏற்றவர்தான் சி. கே. ராஜப்பா. பழைய நிகழ்ச்சியைச் சொல்ல முடியாமல் தவிக்கும் கட்டத்தில் ரசிகர்களையே தவிக்க வைத்து விடுகிறார்.

ராஜேஷ் கன்னாவின் ரசிகையாக இருந்து வந்த நந்தினி (கோபாலரத்தினத்தின் மகள்) ராஜேஷுக்கும் டிம்பிளுக்கும் திருமணமாகி விட்ட செய்தி தெரிந்ததும், சத்ருக்ன சின்ஹாவின் ரசிகையாக மாறி விட்டது கட்சி மாறுவதை விடப் பிரமாதம்! சித்ரா அந்தப் பாத்திரத்தை நன்றாக நடித்தார். நந்தினியின் தாயாராக வந்த காந்திமதி தம் அநுபவப்பட்ட நடிப்பினால் ரசிகர்களுக்குக் களிப்பூட்டினார். சுவையான இந்நாடகம் பாதம் அல்வா மாதிரி — எந்தப் பகுதி சுவைமிக்க பகுதி என்று கூற முடியாது! நாடக ஆசிரியர் கோமல் சுவாமிநாதன் பாராட்டுக்குரியவர்.

''பெருமானே சாட்சி'' நாடகத்தின் சிறப்புக்கு ரசிகப் பெருமக்களின் ஆரவாரக் கையொலியே சாட்சி!

—காந்தன்

இயற்கையை வழிபட்டு இறைவனைக் கண்டவர்



இந்த வடிவத்தின்படியே வடலூர் ஞானசபை இப்போது அமைக்கப்பட்டு வருகிறது.

ஐந்தில் ஐந்தை எடுத்து ஏனைய ஜீவராசிகளைப் படைத்தான் அலகிலாத் திருவிளையாட்டுடையவன். மண், விண், வளி, நீர், நெருப்பு என்னும் ஐம்பெரும் பூதங்களின் குறு வடிவமே அல்லவா உயிரினங்கள்?

ஆய்ந்தறியும் அறிவு பெற்ற மனிதன், இவ்வைந்து தத்துவங்களும், பூத உடலில் சமரசம் செய்து கொண்டு இயங்குவதைக் கண்டான். அவற்றின் ஆற்றலைப் பகுத்து உணர்ந்து, அவற்றையே தன் வழிபடு தெய்வங்களாகக் கொண்டான்.

இந்தத் தத்துவங்களால் உண்டான உடல் ஒடுங்கும்பொழுது இந்தத் தத்துவங்களுக்குள்ளேயே அடங்கக் கூடியது என்பது கண்கூடு.

ஞானியரும் யோகியரும் அந்த அறிவைப் பெற்றிருந்ததுடன், அந்தந்தத் தத்துவங்களோடு உடலை இணைக்கும் ஆற்றலையும் பெற்றிருந்தார்கள். இதற்குப் பல சான்றுகள் உள்ளன.

'கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன், தோழீ' என்று ஸ்ரீரங்கநாதனையே தன் மணாளனாக வரித்து வழிபட்ட ஆண்டாள், பூத உடலுடனேயே அப்பரமனுள் புகுந்தாள், அவளது ஆத்மஜோதி, பரஞ்சோதியுடன் கலந்த நேரத்தில் இவ்வுடல் மறைந்து விட்டதாகக் கூறுகிறார்கள். அதாவது ஆண்டாளுக்கு அந்த அந்தத் தத்துவங்களோடு அந்தந்தத் தத்துவங்களை இணைக்கும் ஆற்றல் கைவந்திருந்தது. அவளது உயிர் மட்டுமே அவனுடன் கலந்தது; உடல் கரைந்து ஐம்பெருந் தத்துவங்களோடு கலந்தது.



'தில்லை வெளியில் கலந்து கொண்டால் அவர் திரும்பியும் வருவாரோ?'

தன்னை அடிமையாகத் தாழ்த்திக் கொண்டு ஆண்டவனை — தில்லை நடராஜனை — வழிபட்ட நந்தனார், அவனோடு கலந்து உயர்நிலை பெற்ற வரலாறும் இவ்வாற்றலுக்கு ஒரு சான்று அன்றோ?

சமீபத்தில் சில நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த கபீர்தாஸர் பிறப்பால் ஹிந்து; வளர்ப்பால் இஸ்லாமியர். தொழிலால் சேணியர். சமரச சன்மார்க்கத்துக்கு அடிகோலியவர்.

அவர் தம் உடலை ஒரு போர்வையாக நெய்ததாகவும் அதை அப்பழுக்கு இல்லாமல் பாதுகாத்ததாகவும், இறுதியில் மாசு படியாமல் ஆண்டவனிடமே அதனை ஒப்படைத்து விட்டதாகவும் கூறுகிறார்.

அவரது ஆவி பிரிந்தபோது உடல் கிடந்த இடத்தில் மலர்க் குவியல் குப்பெனப் பூத்து நின்றதாகவும் ஹிந்து — இஸ்லாமியர் இருவருமே பகிர்ந்து வழிபட்டதாகவும் ஒரு கதை வழங்குகிறது.

வாழையடி வாழையென வந்த அந்தத் திருக் கூட்டத்தில் தம்மையும் ஒருவராக்கிக் கொண்ட பெருமை வடலூர் ராமலிங்க அடிகளுக்கு உண்டு.

இவ்வாண்டு தைப் பூசத்தன்று, அவர் ஜோதி ராமலிங்கமாகி ஒரு நூற்றாண்டு நிறைவெய்தியதை வடலூரில் விழா எடுத்துக் கொண்டாடினோம்.

'வடலூர் ராமலிங்கம் திரும்பியும் வருவாரோ?' என்று கேட்பவர்களுக்கு, 'அவர் எங்காவது போனால் அல்லவா திரும்பி வர? ஐம்பெரும் பூதங்களில் தனித் தனியாகத் தம் உடலைக் கரைத்துக் கலந்து, ஆன்ம ஜோதியைப் பரஞ்ஜோதியுடன் இரண்டறக் கலந்து, இறையுடன் எங்கும் நிறைந்துவிட்டார்!' என்ற விடையே வரலாறு கூறும்.

சிதம்பரத்தை அடுத்த மருதூரில், கருவிலேயே திருவுடையோராகத் தோன்றிப் புகழுடம்பு பெற்றவர் ராமலிங்கம். அவர் பெயரே சைவ — வைணவ இணைப்புக்குச் சான்று பகர்வதாக அமைந்துள்ளது.

சீர்காழியில் தோன்றி, சின்னஞ்சிறு பிராயத்தில் உலக மாதாவான உமையினிடம் ஞானப்பால் அருந்திச் சிவம் பெருக்கிய திருஞான சம்பந்தர் ராமலிங்கத்தின் தீக்ஷா குரு. பிறந்த ஐந்தாவது மாதத்திலேயே ராமலிங்கத்துக்குத் தில்லை நடராஜரின் திவ்விய தரிசனம் கிட்டியது. அதுவே தில்லை வெளியின் இரகசியத்தைக் காட்டிக் கொடுத்தது.

பற்றற்றான் பற்றினைப் பற்றுவதற்கும் ஒரு பற்றுக்கோடு தேவைப்படுகிறது என்பதைத் திருவள்ளுவரும், அதன் பலனாக ஒரு நாமம் ஒரு உருவம் இல்லாதவனுக்கு ஓராயிரம் நாமமும் பல்லாயிரம் உருவ

மும் எப்படிப் படைத்துக் கொள்கிறோம் என்பதை மணிவாசகப் பெருமானும் கூறுகின்றனர்.

ஆண்டவன் அருவமானவன் என்பது எம்மதத்துக்கும் சம்மதமான உடன்பாடே. ஆயினும் உருவ வழிபாடு அவனை உள்ளத்தில் இருத்திக் கொள்ள உதவுகிறது என்பது கண்கூடு. இதனை ஒரு சமயம் காஞ்சி முனிவர் பாலாற்றிலே நீராடிக் கொண்டிருந்தபோது திருஷ்டாந்தம் காட்டியே தெளிவாக விளக்கினார்கள்.

அவரை அடிக்கடி தரிசிக்க வரும் குடும்பம். அக்குடும்பத்தைச் சேர்ந்த நான்கு வயதுக்குட்பட்ட பாலகன் அவரைப் பலமுறை பார்த்திருக்கிறான். ஆனால் நீராடும்போது பார்த்ததில்லை. 'என்னைத் தெரிகிறதோடா?' என்று கேட்டார்கள். 'இல்லே!' என்ற பதிலே தான் பலமுறை கேட்டும் வந்தது. அதற்குள் அவர் நீராடி உலர்ந்த ஆடை அணிந்து தண்டத்துடன் நின்றார். 'அட! நம்ம சங்கராச்சாரியார்!'' என்று கூறி வியந்து தாள் பணிந்து மகிழ்ந்தான் பாலகன்.

'பார்த்த உருவத்தில் பார்த்தால்தான் மனிதனே தெரிகிறான். அருவமான ஆண்டவனுக்கு ஒருருவம் கொடுத்து மனிதன் வழிபடுவதற்குக் காரணம் இப்பொழுது விளங்குகிறதல்லவா?' என்று அவர் கேட்டபொழுது, உருவம் அருவமாகி உள்ளம் புகுந்தது.

சிறு பிராயத்தில் சென்னை வாசம் புரிய வந்த ராமலிங்கத்துக்கு வழிபடு கோவில்களாக விளங்கியவை, சென்னை கந்தசாமிக் கோவிலும், திருவொற்றியூரும் ஆகும்.

ஜப்பானில் வழங்கும் 'சிந்தோ' மதம் ஆண்டவனை ஆடியில் வழிபடுவதாகக் கூறுகிறது. நினைந்து நினைந்து உருகித் திருத்தணிகை முருகனை வழிபட்ட ராமலிங்க அடிகளுக்கு நிலைக்கண்ணாடியில் முருகன் தோற்றம் அளித்தான் என்றால் அது அருவம் உருவமாகிய விந்தைதானே?

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகச் சென்னையில் வதிந்த ராமலிங்க ஸ்வாமிகள் வடலூரைத் தமது இருப்பிடமாகத் தேர்ந்தெடுத்தார், பொற்சபையைச் சிற்சபையில் கண்டுகொண்டே இருக்க வேண்டும் என்ற ஆவலில். அப்படி ஆண்டவன் நினைவில் திளைத்தவர் அவன் படைத்த ஜீவராசிகளின் நிலையையும் நினைந்தார். பிறவியெடுத்த எந்த ஜீவராசியையும்வாட்டுவது வயிற்றுப் பசி. அதைப் போக்கினால் ஒழிய ஆண்டவன்கூட நினைவுவரமாட்டான் என்பதைக் கண்டார். அதன் பலனாகச் சத்திய வேததர்மசாலையை நிறுவிப் பசி என்று வந்தவர்களின் பசியைப் போக்க வழி வகை செய்தார். 'வெறும் கை முழம் போடுமா?' என்று கேட்பவர்கள், எத்தகைய மூலதனமும் இல்லாமல் இன்றுவரை பல்லாயிரக் கணக்கான மக்களின் பசியாற்றி வரும் இந்தத் தர்மசாலையைக் கண்டால் மெய் சிலிர்த்துப் போவார்கள். உள்ளத்தில் உண்மையொளியோடு தொடங்கிய இப்பணி இடையறாது நடைபெறும், பசிப்பிணியைத் தீர்த்து வரும் என்பதை நிரூபிப்பதே போல், அவர் தொடங்கி வைத்த கோட்டை அடுப்பு இன்றும் அணையாமல் எரிந்து வருகிறது. பல்லாயிரக் கணக்கான மக்களின் பசிப் பிணியை எரித்து வருகிறது.

வயிற்றுப் பசியை நீக்கிய பின் அறிவுப் பசியின்பாலும் அடிகளின் கவனம் சென்றது. அவர் இயற்றிய திருவருட்பா போன்ற நூல்கள் ஒருபுறம் அதைத் தீர்க்க உதவுகின்றன. இன்னொரு புறம் சமரச சன்மார்க்கம் பணியாற்றுகிறது. இருட் குகையாகத் திகழும் உள்ளக் குகையில் ஒளி பாய்ச்சினால் ஒழிய அவனைக் காண்பது அரிது என்பதை அநுபவத்தால் கண்ட அடிகள் சத்திய ஞான சபையை நிறுவி விளக்கேற்றி வைத்தார்கள்.

'அவன் இருக்கும் இடத்தை விளக்கு ஏற்றித்தான் தெரிந்து கொள்ள வேண்டும்!' என்னும் பேச்சு வழக்கில் இருக்கிறதே. அதனை ஒட்டி, 'எவனைத் தெரிந்துகொள்ள?' என்ற கேள்வியும் எழுகிறதல்லவா? அருட்பெருஞ் சோதியான அவனைத் தெரிந்து கொள்ள அவனது தனிப் பெருங் கருணையே தேவை என்பதைக் கூறுவது போல் விளக்கேற்றி வைத்துள்ளார் அடிகள். 'சோதி வழிபாடு, ஆத்ம ஜோதியைத் தூண்டி அருட்பெருஞ் சோதியை அடைய உதவும். பாமரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் பொதுவான, இலகுவான அருஉரு வழிபாட்டைச் சுடர் நினைவுறுத்தும்' என்ற எண்ணத்தோடு அவர் ஏற்றி வைத்த விளக்குகளில் மூன்று, அன்றிலிருந்து இன்று வரை அணையாமல் எரிந்து வருகின்றன.

பொருள் படைத்ததன் பொருளைப் பயனுள்ளதாக்கச் சதா முயலும் திரு நா. மகாலிங்கம் அவர்கள் பலரின் ஒத்துழைப்புடன் அடிகளார் மேற்கொண்ட பணிகளுக்கு மேலும் உரம் ஏற்றும் வகையில் இருபது லட்சம் ரூபாய் செலவிட்டு வடலூரை ஆத

வள்ளலார் பற்றிய நூல் வெளியீட்டு விழாவில் ஸ்ரீ மகாலிங்கம், முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதன்.



ரீசத் தலமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

ஜீவகாருண்யம் பரப்பிய புத்தருக்கும் ஒரு படி மேலாக அஹிம்ஸை இயக்கம் நடத்திய ராமலிங்கம் அடிகளின் சத்திய ஞான சபையைச் சுற்றி ஏறக்குறைய எண்பது ஏக்கர் நிலம் திடலாகக் கிடக்கிறது. நீர் வளம் குறைந்து நிற்கிறது. இதனைப் பசுஞ்சோலையாக்கும் முயற்சியின் முதற் படியாக ஏறக்குறைய ஒன்றரை லட்சம் ரூபாய் செலவில் ஏறக்குறைய எழுநூறு அடி ஆழத்துக்குச் சென்றுவிட்ட நீரை மேலே கொண்டு வரும் முயற்சியில் வெற்றி கண்டுள்ளார்கள். நிழலின் அருமை வெயிலில்தானே தெரியும்? நீர்ப் பஞ்சம் மிகுந்த ராஜஸ்தானைச் சேர்ந்த சென்னை ராஜஸ்தானிய சங்கம் இப்பணிக்கு ஐம்பதினாயிரம் ரூபாய் தந்து இப்பணி சிறக்க வழி செய்துள்ளது.

அடிகளார் வாழ்வாங்கு வாழ்ந்து வீடுபெற வேண்டும் என்ற கொள்கையை உடையவர் மட்டுமல்ல; எட்டுக் கோண வடிவில் இன்றையப் பொறியாளர்களும் வியக்கும் வகையில் அன்றைக்கே சத்தியஞான சபையைச் சிறப்புறச் சமைத்தவர். அவரது அச்சபையை அதே எழிலுடன் சிறப்புறத் திருப்பணி செய்வதற்காக ஐந்து லட்சத்துக்கும் மேலாகச் செலவு செய்து, அது நிறைவேறும் தருவாயை நெருங்கியுள்ளது.

ராமகிருஷ்ண மிஷனுக்கு இணையாக ராமலிங்க மிஷன் இயங்க வேண்டும்; எம்மதத்தினருக்கும் சம்மதமான சன்மார்க்க சங்கத்தின் கொள்கைகள் உலகனைத்தும் பரவ வேண்டும் என்ற ஆர்வத்துடன் பணியாற்றும் திரு மகாலிங்கம் 'அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' என்பதற்குப் புது வியாக்கியான கர்த்தாவாக, அருளும் பொருளும் இணைய நிற்கிறார்.

அருட்பாக்களை மருட்பாக்கள் என்று கூறிப் போரிட்டவர் புறமுதுகிடும்படியான நேர்த்தி பெற்ற இலக்கிய நயம் மிகுந்தவை ராமலிங்க சுவாமிகளின் பாடல்கள். இயற்கையின் இயல்பையும், ஈசனின் அருள் வெள்ளத்தையும் எளிய நடையில் எல்லோருக்கும் புரியும் வண்ணம் எடுத்து ஓதுபவை.

''கோடையிலே இளைப்பாற்றிக்கொள்ளும்
வகை கிடைத்த குளிர்தருவே தருநிழலே
நிழல் கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீர் இடைமலர்ந்த
சுகந்த மண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே
சுகத்தில் உறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசே என்
அலங்கல் அணிந்தருளே''

என்று இயற்கையை வழிபட்டு, அதன் மூலம் தாமும் இறைவனைக் கண்டு பிறருக்கும் காட்டும் அழகை என்னவென்பது?

சத்திய ஞான சபையைச் சுற்றி இத்தகைய சூழலை உண்டுபண்ணக் கனவு காண முயலும் பொள்ளாச்சிப் பொருளதிபருக்கு அருட்பெருஞ் சோதியின் தனிப் பெருங் கருணை துணை நிற்குமாக.

— ரா. வீழிநாதன்

ஊருக்கோர் உற்ற நண்பன்



நண்பன் என்ற பதத்துக்கு ஓர் உருவம் உண்டெனில் அது பாலுதான். இணையற்ற அன்பு; ஒப்பற்ற நட்பு; தம் இதயபூர்வமான ஸ்நேகத்தை எவருக்கும் சுபாவமாக அள்ளிக் கொடுத்து, அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்தவர் பாலு. தமக்கென வாழாமல் பிறர்க்கெனவே வாழ்க்கை நடத்திக் காண்பித்தவர். உண்மைப் பிரமச்சாரியாகவே அறுபத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்த பாலுவுக்குத் தமக்கெனத் தனிக் குடும்பம் கிடையாது. என்றாலும் ஏராளமான நண்பர்கள்பால் கொண்டிருந்த நேசப்பான்மையால் அவர் பெரிய குடும்பஸ்தராக விளங்கினார். ஆயிரக் கணக்கானவர்களுக்குத் தம்மாலியன்ற உதவியைச் செய்து வந்தார். சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு சிறை புகுந்தவர் பாலு. 'ஸண்டே டைம்ஸ்' முதலான பத்திரிகைகளில் அவரது அரசியல் பணி மிளிர்ந்தது. திரு காமராஜின் உற்ற சகாவாக இருந்தவர். அவரிடம் அளவுகடந்த அன்பும் மதிப்பும் வைத்திருந்த திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் ஒரு சமயம் அவரைப் பற்றித் தம் அநுபவ உண்மையைக் கண் கலங்கக் குறிப்பிடுகையில் சொன்னார்: ''நான் பாலுவைப்போல் ஓர் அரிய பிறவியை இதுவரை பார்த்ததில்லை. என்னுடன் எவ்வளவோ நெருங்கிப் பழகியிருக்கிறார். இதுவரை அவர் தமக்கென என்னை ஒரு சிறிய விஷயம் கூடக் கேட்டதில்லை. ஆனால் பிறருக்கு நன்மை செய்வதற்காக அவர் எதுவும் கேட்கத் தயங்கினதில்லை.''

சில காலமாக நோய்வாய்ப்பட்டிருந்து குணமாகி வரும் தருவாயில் ஆண்டவன் அவர் உயிரை பிப்ரவரி 17ந் தேதி அதிகாலையில் கொள்ளை கொண்டு விட்டான். பாலுவை அறிந்த யாவரும் ஆறாத் துயரில் உள்ளபோது யார்யாருக்கு ஆறுதல் சொல்வது? ஆண்டவனுக்கே பொறுக்கவில்லை, இவ்வளவு நல்ல ஓர் ஆத்மாவை இந்தப் பாவம் நிறைந்த பூவுலகில் விட்டுவைக்க. ஆண்டவனுக்கும் ஓர் உற்ற நண்பன் வேண்டியிருந்தது போலும்!

நாகரீக உலகின் நலம் கொழித்திட
நவீனப் பொருள்களால் அகம் செழித்திட





அதிர்ஷ்டம் உங்களை அழைக்கிறது!

நாகரீக வாழ்வுக்கேற்ற நவீனமான வீட்டு உபயோக சாதனம் மற்றும் பொருள்களை

எமது குடும்ப ஆதாயச் சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து சுலபத் தவணையில் கீழ்க்கண்டவாறு பணம் செலுத்தி வேண்டிய பொருள்களைப் பெற்று பயனடைவீர்.

குரூப்	சந்தா	செலுத்த வேண்டிய காலம்	மொத்த மதிப்பு
M	வாரம் ரூ. 5/-	50 வாரங்கள்	ரூ. 250/-
N	வாரம் ரூ. 6/-	50 வாரங்கள்	ரூ. 300/-
O	வாரம் ரூ. 5 or மாதம் ரூ. 20/-	50 மாதங்கள்	ரூ. 1000/-
R	வாரம் ரூ. 12/50 or மாதம் ரூ. 50/-	40 மாதங்கள்	ரூ. 2000/-

பிரதி மாதமும் ஒரு குலுக்கல். சந்தாதாரர்களுக்கு இன்னும் சில விசேஷ சலுகைகள் உண்டு.

விபரங்களுக்குத் தபாலிலோ அல்லது நேரிலோ விண்ணப்பிக்கவும்



பாலு எலக்ட்ரானிக்ஸ்
(ஏர்-கண்டிஷன்ட் ஷோரூம்)
''பாலு பில்டிங்ஸ்'' ஈரோடு-1

பருவகாலம்

"செம்பருத்தி" என்ற மலையாளப் படத்தின் தழுவல் இந்தத் திரைப்படம். தழுவலுக்கு இதுதானா கிடைத்தது?

பாவாடை கட்டிய சிறுமி, தாவணி போட்டுக்கொண்டநிலையில் ஹீரோயினாகிவிடுகிறாள். தாயாகவும் ஆகிவிடுகிறாள். நான்கு கதாநாயகர்கள் வருகிறார்கள். ஒரு போலிச் சாமியார், ஓர் ஓவியன், பந்தயக் குதிரைக்குப் பயிற்சியளிப்பவன், போலீசுக்குத் தப்பித் தலை மறைவாகத் திரியும் குற்றவாளி — இவர்களில் அந்த இளம் பெண்ணைத் தாயாக்கியவன் யார் என்பதுதான் திரைக் கதையின் சாராம்சம். ஏர்க்காட்டுக்கருகில் உள்ள ஒரு லாட்ஜில் நடக்கும் கதை. மேற்படி பிரச்னையைத் தலைப் பொறுப்பாக ஏற்றுக் கொண்டு தானாக வலிய வந்து நீதிவிசாரணை நடத்துபவள் ஒரு பெண் — அழகிய பெண் — அதுவும் ஒரு விலைமகள்! அவளும் அந்த லாட்ஜில் வந்து தங்கியிருப்பவள்தான். லாட்ஜில் தங்கியிருக்கும் ஒவ்வோர் ஆண் மகன் மீதும் சந்தேகம் கொள்ள ஆதாரங்கள் இருந்தன. காரணம், அந்த லாட்ஜின் வேலைக்காரப் பெண்ணான சாந்தாவிடம் எல்லாருமே அன்பாகப் பழகுகிறார்கள்.

சாமியாராக வரும் நாகேஷ் மீதும், குற்றவாளியாக வரும் ஸ்ரீ காந்த் மீதும், குதிரை 'ட்ரெயின'ராக வரும் சசிகுமார் மீதும், ஓவியர் மீதும் சந்தேகம் கொள்ளும்படியான நிகழ்ச்சிகள் [illegible]ாக உதவுகின்றன.

தலை மறைந்து திரியும் குற்றவாளியாக வரும் ஸ்ரீ காந்தின் நடிப்பு நன்றாயிருக்கிறது.

இந்தக் குற்றம் நடந்ததற்கு மூலகாரணம் பருவப் பெண் சாந்தாவைக் குளியல் அறையில் ஓர் ஆண் மகன் பார்த்ததுதான்! அவன் யார் என்பது படத்தின் சஸ்பென்ஸ்!

மஸ்தானின் ஒளிப்பதிவு மிகவும் பாராட்டுக்குரியது. கதாசிரியர் ஜோஸ் பர்னாண்டஸ் டைரக்ஷனுக்குப் பாராட்டைப் பெறுகிறார். ஏ. எஸ். பிரகாசம் உரையாடல்களை எழுதியிருக்கிறார்.

விலைமாதாக வரும் பிரமீளா நீதி விசாரணையை மேற்கொண்டு ஒரு கவர்ச்சி நடனமும் ஆடி, தம் பொறுப்பைத் திருப்தியாக நிறைவேற்றியிருக்கிறார்.

ரோஜாரமணி, பாவாடை கட்டும் பெண்ணாக வந்து தாவணி போடும் வயதை அடைந்தும் விவரம் தெரியாத பெண்ணாக நடிக்க வேண்டிய நிலையைப் புரிந்து கொண்டு நடித்திருக்கிறாள். நடிப்பில் இன்னும் அநுபவ மெருகு ஏற வேண்டும். நாகேஷ் தம் பாத்திரத்தை எல்லாருடைய நினைவிலும் நிறுத்திவிட்டார். கருவிராஜன், சச்சு, ஐ.எஸ்.ஆர். வரும் நகைச்சுவைக் காட்சிகள் சுவையாயிருக்கின்றன. கடைசியில் விசாரணையில் குற்றவாளி யார் என்று தெரிகிறது. அவனுக்குத் தண்டனையாகச் சாந்தாவுடன் திருமணம் செய்து வைக்கப்படுகிறது. வழுக்கி விழுந்தவர்களுக்கு வாழ்வளிக்கும் 'ஓல்ட்வேவ்' கதை! ஆம், வழுக்கி விழத்தான் விழுவேன், நீ யார் கேட்பதற்கு' என்றல்லவா நியூ வேவ் ஆகும்!

— காந்தன்



‘பவர் கிளப்’ உறுப்பினராவதற்கு பணம் மட்டும் போதாது

சர்வதேச ‘பவர்கிளப்’ உறுப்பினராகியுள்ள இந்தியா, தன்னுடைய மின் உற்பத்திக் கருவிகளைத் தானே தயாரிப்பதன் மூலம் முன்னேறிய நாடுகளில் ஒன்ருகத் திகழ்கிறது.

உலக மின் சக்தி உற்பத்தியில் இந்தியா உயர்நிலை பெற உதவும் வகையில் பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ்

ஆமாம், சர்வதேச ‘பவர் கிளப்’ உறுப்பினராவது என்பது நம்மைப் போன்ற வளர்ந்துவரும் நாட்டுக்கு ஒரு பெரும் வெற்றியாகும்.

மின் சக்தித் துறையில் முழுமையான தன்னிறைவு பெறுவதற்குத் தேவையான கருவிகளைத் தயாரிக்கும் ஆற்றல் பெற்றிருப்பதால் இந்தியாவுக்கு இந்த வெற்றி கிடைத்துள்ளது.

இந்தத் தன்னிறைவைப் பெற உதவும் சக்தியாக விளங்குவது பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ்.

நம்முடைய வளர்ந்துவரும் பொருளாதாரத்தில் மின் சக்தித் தேவை மேலும் மேலும் பெருகிவருகிறது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின் சக்தித் தேவை 15 மில்லியன் KW ஆகப் பெருகியுள்ளது. இதைப் பெருமளவில் பூர்த்தி செய்ய பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் தயாராக இருக்கிறது. கைவசம் 10.5 MKWவுக்கான ஆர்டர்கள் உள்ளன. ஆண்டொன்றுக்கு 3 MKW சக்தியை பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் அளிக்கவல்லது.

மிக நவீன உத்திகளுக்காக மிகச் சிறந்த தொழில் நுட்பக் கூட்டுறவு

இந்தத் துறையில் கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த சர்வதேசத் தொழில்நுட்ப அறிவைப் பெறுவதையே கொள்கையாகக் கொண்டுள்ளது பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ். இத்துறையில் முன்னணியில் நிற்கும் சர்வதேச நிறுவனங்களுடன் கூட்டுறவு கொண்டு மிக நவீன தொழில்நுட்பத் திறனைப் பெற்றுள்ளது.

இங்கிலாந்து, அமெரிக்கா, சோவியத் யூனியன், செக்கோஸ்லாவாகியா, ஸ்வீடன், மேற்கு ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளுடன் தொழில்நுட்ப கூட்டுறவு ஒப்பந்தங்கள் உள்ளன. அதன் மூலம் தயாரிக்கப்படுபவை: ஹைடிராலிக் டர்பைன்கள், ஏர் ப்ரீ ஹீட்டர்கள், ஸ்டீம் டர்பைன்கள், ஜெனரேட்டர்கள், பாய்லர்கள், எலெக்ட்ரோ ஸ்டேடிக் பிரெஸிபிடேட்டர்கள், ஸாப்ட் ப்ளோயர்கள், கம்பிரஸர்கள், ஃபான்கள். கூட்டுறவு கொண்டுள்ள புகழ்வாய்ந்த நிறுவனங்கள் இவை: கம்பஸ்ஷன் இன்ஜினீரிங், GEC, AEI, ப்ரோமோஷ் எக்ஸ்போர்ட், ஸ்கோடா, ஸ்வென்ஸ்கா ப்ளாக்ட் ஃபாப்ரிகன், ASEA, நூவோ பிக்னோன்.

ஏற்றுமதித் துறையிலும் வெற்றிகள்

ஈரான், இராக், குவாயித், மாலாவி, உகாண்டா, மலேசியா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா, ஐக்கிய அரபுக் குடியரசு, கென்யா, கம்போடியா ஆகிய நாடுகளுக்கு பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் மின் உற்பத்தி கருவிகளை ஏற்றுமதி செய்துள்ளது. இவை மட்டுமின்றி தொழில்நுட்பத் துறையில் முன்னேறியுள்ள இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கும் கூட ஏற்றுமதி செய்துள்ளது. ஏற்றுமதி செய்துள்ள கருவிகளில் சில இவை: ஸ்விட்ச் கியர், கபாஸிட்டர்கள், டிரான்ஸ்ஃபார்மர்கள், ஸிங்க்ரோனஸ் மோட்டார்கள், பாய்லர்கள், வால்வுகள்.

இப்போது, அதிக உற்பத்தித் திறன், நீடித்த உழைப்புக்கான ஆராய்ச்சி

எல்லா வசதிகளும் நிறைந்த ஆய்வு-வளப் பிரிவு ஒன்றையும் பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் அமைத்துள்ளது. மிகச் சமீபத்திய முன்னேற்றங்களைப் பற்றிய முழு விவரங்களையும் இந்தப் பிரிவு அறிவிக்கும். மேலும் தயாரிப்பு டிசைன்களைத் தர நிர்ணயப்படுத்தி, அதிக உற்பத்தி, சிக்கனம், பராமரிப்பிலும் இயக்குவதிலும் எளிய முறைகள் இவற்றைப் பெறவும் உதவும்.

டில்லியில் மாற்றுப் பகுதிகள் — பராமரிப்பு ஆகியவற்றுக்கான ஒரு பிரிவையும் பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் அமைத்துள்ளது. இந்தப் பிரிவு, தற்போதுள்ள கருவிகளை இயக்குவதற்கும் பராமரிப்பதற்கும் உதவும் வகையில் விசேஷப் பணியாற்றுகிறது.

ஆமாம், ‘பவர்கிளப்’ உறுப்பினராவதற்குப் பணம் மட்டும் போதாது.

காற்றடைத்த பை

உயிர் வாழ்தலின் அடையாளமே மூச்சு தான். மூச்சு என்னும் இயக்கத்தின் முக்கிய கதாபாத்திரம் நுரையீரல்.

மூச்சின் பயணம் நீண்ட பயணம். மூக்கைக் கடந்து, தொண்டைக் குழாயைக் கடந்து, குரல்வளையைக் கடந்து, டிராகியா என்னும் பருத்த நெஞ்சுக் குழாய் வழியே பயணம் ஆகிறது மூச்சு. டிராகியாக் குழல் மார்பின் இடப்புறமும் வலப்புறமும் இரண்டு குழாய்களாகப் பிரிகிறது. இவற்றுக்கு 'பிராங்கஸ்' என்று பெயர். வலது பகுதி சற்றே பெரிதாக இருக்கும். இந்த இரண்டு குழாய்களும் கிளை விட்டு, கிளை விட்டு இடது மார்பையும் வலது மார்பையும் நிறைத்து விடுகின்றன — இலை அடர்ந்த ஒரு செடியைக் கவிழ்த்து வைத்தது போல. கிளை விட்டுக் கிளை விட்டு, வெறும் கண்ணுக்குத் தெரியாத அளவு கிளை விட்டுச் சின்னஞ் சிறு குழாய்களாகப் போகும் வரை படர்வதே நுரையீரல்.

மேலும் மேலும் கிளைத்து, சிறு சிறு குமிழ்களாகப் படரும் இந்தப் பகுதிகளைப் பெரிதாக்கிப் பார்த்தால் திராட்சைக் குலைகளைப் போலக் காணும். இவையே 'அல்வியோலவ்' பைகள் — 'காற்றடைத்த பை' என்ற சித்தர் வாக்கு நுரையீரலுக்கு மிகவும் பொருந்தும்.

உடலிலே ஒரு கன அடிக்குள் அழுத்தப் பட்டிருக்கும் இந்தக் காற்றடைத்த பைகளை விரித்துப் பரப்பினால் ஓராயிரம் சதுர அடி தேறுமாம்! அவ்வளவு நுணுக்கமாக, நெருக்கமாக அமைந்திருக்கும் பல லட்சம் அல்வியோலவ் பைகளுக்குள்ளே இடைவிடாது நிகழும் பணியே உயிர்ப் பணியாகிறது. இங்கிருந்தே உடலெங்கும் உயிர்ச் சக்தி பரப்பப்படுகிறது.

தாயின் கர்ப்பத்திலிருந்து வெளியே வந்த கணம் முதல் மூச்சுப் பணி தொடங்குகிறது. நுரையீரலின் பணி தொடர்கிறது. வெகு இயல்பாக, பிரயாசை யின்றி, உயிரினங்கள் மூச்சு இழுத்து விடுகின்றன. மனித உடல் அமைப்பு இதற்கு வக்கணையாக இருக்கிறது.

முக்கியமானதும் நுட்பமானதுமான நுரையீரல்களைக் காக்கும் கவசமாக மார்புக் கூடு எலும்புகள் சுற்றி யுள்ளன. காற்றை வாங்கும் போது விரிந்து, விடும்போது சுருங்கவேண்டும் நுரையீரல். இதற்கு ஏற்றபடி விலா எலும்புகள் பக்க வாட்டிலும், முன்புறத்திலும் ஏறி - இறங்கி வசதி செய்யும். நுரையீரல் முழுதும் விரிந்து கொடுத்துப் போதிய அளவு சுருங்க, வயிற்று மேல் விதானத் தசையும் உதவுகிறது.

சாதாரணமாக நிமிஷத்துக்குப் பதினைந்து பதினாறு முறை காற்றை உள்ளே இழுக்கிறது நுரையீரல். ஒருமுறை இழுக்கும் அளவு ஒன்றரை லிட்டர் இருக்கும். ஆனால் இதைப் போல் ஆறு மடங்கு காற்று முன்னமே உள்ளே இருக்கும். எனவே எப்போதும் மூச்சை வெளியே விடும்போது பழைய காற்றில் ஆறில் ஒரு பகுதி வெளியேறுகிறது. உள் ளிழுக்கும் மூச்சுக் காற்று நுரையீரலின் நுட்பமான உட்பகுதியில் பரவி, அல்வியோலவ் பைகளுக்குள் எட்டிவிட்டால் போதும்.

இங்கே இயற்கையின் ரசாயனச் சாலை இருக்கிறது. இதயத்தின் ரத்தம் இங்கே மிக மெல்லிய ரத்தக் குழாய்களில் பரவிப் படர்ந்திருக்கின்றது. மூச்சுக் காற்றிலிருந்து உயிர் இயக்கத்துக்குத் தேவையான பிராண வாயு இரத்தத்தால் உறிஞ்சப் படுகிறது. உடலியக்கத்தின் எரிபொருள் கழிவான கரியமிலவாயு வெளியேற்றப் படுகிறது. நல்ல உயிர்க் காற்றை உட்கொண்ட இரத்தம் இதயத்துக்கு விரைகிறது. கரியமில வாயு மூச்சு விடும்போது உடலை விட்டு வெளியேறுகிறது. மீண்டும் புதுக் காற்று உள்ளே



நீரில் மூழ்கியதாலோ, விபத்தினாலோ மூச்சு விடுவது நின்றால் செயற்கை முறையில் சுவாசிக்க வைப்பது உண்டு. நெஞ்சையொட்டிப் பக்கவாட்டில் விட்டு விட்டுக் கரங்களால் அழுத்தம் கொடுப்பதும் வாயோடு வாய் பொருத்திப் பலவந்தமாகக் காற்றை உள்ளே செலுத்துவதும் முதலுதவிகள். ஜெர்மனியில் இத்தகைய செயற்கை சுவாசத்துக்கு நவீன கருவி உருவாக்கியுள்ளனர். முகமூடியும் ஒரேவிதமாய் அமுக்க வேண்டிய ஒரு பிளாஸ்டிக் பையும் இணைப்புக் குழாயும் கொண்ட இதை எளிதில் பயன்படுத்தலாம். விபத்துக் காலத்தில் உதவக் கார்களில் இக்கருவி கட்டாயம் இருக்க வேண்டும் என்று சட்டம்!

வரும். அழுக்கடைந்த இரத்தம் புதுக் காற்றால் பயனடையும். இவ்வாறு தொடர்ச்சியாக இரத்தத்தைத் தூயதாக வைத்திருக்கும் பணியே உயிர்ப் பணி. நுரையீரலின் அரும் பணி. இதயத்தை ஒட்டிய பணி.

இயற்கை இப்படிப்பட்ட முக்கிய பணிகளில் ஓர் உறுப்பையே நம்பியிருப்பதில்லை போலிருக்கிறது. ஒன்றுக்கு இரண்டாக, இரண்டு மார்பிலும் இரண்டு நுரையீரல்களை அமைத்திருக்கிறது. வலது மார்பில் மூன்று பகுதியாகவும் (லோப்ஸ்) இடது மார்பில் இரண்டு பகுதியாகவும் பிரிந்துள்ள இவற்றுள் ஏதேனும் இரண்டாவது தொடர்ந்து இயங்கினால் போதும்; உயிர் இயக்கம் தொடரும். விபத்தினாலோ, கொடிய நோயாலோ இந்த ஐந்து பகுதிகளில் ஒன்றிரண்டை நீக்க வேண்டிய அளவு ரண சிகிச்சை பெற்று வாழ்வோரும் உள்ளனர்.

வேலை ஒன்றும் இல்லாதபோது மூச்சு விடுவதற்கும் சுறுசுறுப்பாக இயங்கும்போது மூச்சு விடுவதற்கும் வித்தியாசம் உண்டு. விரைவாக நடக்கும்போதும் உடற் பயிற்சி



நுரையீரல் பரிசோதனை

செய்யும்போதும் அதிக அளவிலும் அதிக எண்ணிக்கையிலும் மூச்சு விடுவோம். தூங்குகையில் நிதானத்துடன் இருக்கும். சுரத்திலே ஏறும்.

உங்கள் நுரையீரல் நன்றாக மூச்சு விடுகிறதா என்று பார்க்க வைத்தியர்கள் 'ஸ்பைரோ மீட்டர்' என்னும் ஒரு கருவி வைத்திருக்கிறார்கள். ஒருமுறை நீங்கள் வெளியிடும் காற்றை அளக்கும் கருவி இது. பலூன் ஊதுவது போல ஊத வேண்டும். நாதஸ்வரமும் புல்லாங்குழலும் கூட ஒரு வகையில் ஸ்பைரோ மீட்டர்கள்தாம்! அந்த வித்வான்கள் தாங்கள் ஆற்றலுடன் வெளிவிடும் காற்றைக் கொண்டுதானே இசை எழுப்புகிறார்கள்! ஆரோக்கியமான ஒருவர் ஒருமுறை இழுத்து மூச்சு விட்டால் அந்தக் காற்று சுமார் மூன்று லிட்டர் இருக்கும்.


இயற்கைக் காற்றின் துணையுடன் வெகு இயல்பாக இயங்க வேண்டிய இந்த நுட்பமான உறுப்பில் பல காரணங்களால் சில கோளாறுகளும் நோய்களும் தோன்றுகின்றன.

நுரையீரலின் பெரும் எதிரி தூசி. ஓயாது தூசி நிறைந்த இடத்தில் வாழ்வோரின் நுரையீரல் பல விதங்களில் பாதிக்கப்படுகிறது. தூசியுடன் பல கிருமிகள் நுரையீரலின் உள்ளே போய் நோய்களைப் பரப்பி விடுகின்றன.

புகை மற்றொரு விரோதி. புகைப் பழக்கம் உடையவர்கள் சிலர், சிகரெட்டின் கடைசி வரை இழுத்துப் பலமாக உறிஞ்சிப் புகைக்கிறார்களே, அவர்கள் தமது நெஞ்சுக்குச் செய்யும் அநீதி எவ்வளவு! இயல்பாக மூச்சு விடுவதற்குத் தடையாகவோ, எரிச்சலாகவோ இருக்கும் எந்த நிலையும் நுரையீரலின் ஆரோக்கியத்தைப் பாதிக்கும்.

நுரையீரல் தனது பணியை ஆயுள் முழுதும் நன்கு புரிய மார்புக் கூடும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். இளமை முதலே நல்ல உடற் பயிற்சியும் பழக்கங்களும் இருந்தால் கூனல், கூம்பிய மார்பு போன்ற கோணல்களைத் தவிர்க்க முடியும். பெண்டிரின் மார்பைக் கவ்வும் இறுக்கமான ஆடைகளும் இயல்பான சுவாசத்துக்குத் தடையாகும்.

வேலை நேரத்தில் எப்படி இருந்தாலும் யாருமே நல்ல காற்றைச் சில நிமிடங்களாவது தினந்தோறும் சுவாசிக்க வேண்டும். காலை நேரத்தில் வெறும் வயிற்றுடன் இருக்கும்போது வெட்டவெளியில் தூசியில்லாத இடத்தில் முயற்சியுடன் நீண்டு இழுத்துப்



பிரிட்டனிலுள்ள நவீன மருத்துவ மனை ஒன்று. மிகவும் நோயுற்றவர்களுக்குக் கிருமிகள் அற்ற தூய காற்றைச் செலுத்தும் உபகரணம் படுக்கைக்கருகே உள்ளது. ஆபத்துக் காலத்தில் பிராண வாயு செலுத்தும் வசதியும் இதில் உண்டு. காற்றின் அளவு, செலுத்தப்படும் விதம் முதலியவற்றை ஒவ்வொரு நோயாளியின் தேவைக்கும் ஏற்பக் கட்டுப்படுத்தலாம். நோயாளியின் நுரையீரலிலிருந்து வெளிப்படும் அசுத்தக் காற்று ஒரு குழாய் வழியாக அறையிலிருந்து வெளியேற்றப்படுகிறது. இதனால் நோய் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவுவது தடுக்கப்படுகிறது. இது தவிர, இதே ஆபத்தைத் தவிர்க்க அறையிலுள்ள காற்று முழுவதுமே ஒரு மணி நேரத்தில் இருபது முறை மாற்றப்படுகிறது!



'' மாஜிக் நிபுணரிடம் பிக்பாக்கெட் அடிச்சது தப்பாப் போச்சு அண்ணே !''

'' ஏன் என்ன ஆச்சு ?''

'' என் சொந்த பர்ஸையே காணோம்.''

பலமுறை மூச்சு விடுவது ஒரு சாதாரணப் பயிற்சி. தினம் சில நிமிட நேரமே செய்தாலும் நிலையான பயனுள்ள பயிற்சி. எளிய உணவானாலும் ஆரோக்கியமான உணவு கொள்ள வேண்டும். எளிதில் கிடைக்கும் வாழைப் பழம், தக்காளி, நெல்லிக்காய், இவை தின்றாலே வைட்டமின் போஷாக்குக் கிடைக்கும்.

சாதாரண ஜலதோஷம், இருமலாக நீடிக்கலாம். இருமலும் சளியும் நீடித்தால் நுரையீரலைப் பாதிக்கலாம். நெஞ்சுக் குழலில் சளி நீடித்தால் அதுவே 'பிராங்கைடீஸ்' நோய். சாதாரண ஜலதோஷத்தின் மிகையே இது. இந்தத் தொந்தரவின்போது குரல் வளை, தொண்டைக் குழாய், நெஞ்சுக்குழாய் ஆகியவற்றின் உள் இதழ்கள் புண்ணாகியிருக்கும். கோழையாகவும் கபமாகவும் இவை வெளிவர வேண்டியிருக்கிறது. சிகிச்சை தொடங்கியதும் மருந்தை வேளை தவறாமல் அருந்தினால் குணம் தெரியும். கபம் குறையும்.

தொடர்ச்சியாக,பலநாட்கள் குணமாகாத பிராங்கைடிஸ் சிலருக்கு வரும். இதுவே 'கிரானிக் பிராங்கைடிஸ்'. தூசி நிறைந்த இடத்தில் வேலை பார்ப்போர் இதனால் கஷ்டப்படுகின்றனர். இந்த நோய் அடையாளம் கண்டவர் புகை பிடிக்கும் பழக்கம் உடையவரானால் உடனே அந்தப் பழக்கத்தை நிறுத்திவிட வேண்டும். நல்ல உணவும், நல்ல காற்று உள்ள இடத்தில் தினம் சில மணி நேரம் மூச்சு விடுதலும் கூட இதற்குச் சிகிச்சையாகும்.

ஆஸ்துமா மற்றொரு பெரும் இடர். ஆஸ்துமா நோயாளியின் முக்கியமான கஷ்டம் என்னவென்றால் உள்ளே இழுத்த மூச்சை வெளியே விடுவதில் உள்ள பிரச்னைதான். காற்று உள்ளே போய் வெளியேவரவேண்டிய நுண் குழாய்கள் ஆஸ்துமா நோயாளிகளுக்கு அடைத்துக் கொண்டிருக்கும். ஆஸ்துமா நோயாளிகள் பலர் 'எம்பைஸிமா' என்ற தொல்லையாலும் கஷ்டப்படுகின்றனர். நுரையீரலின் மிக நுண்ணிய காற்றுப்பை கவர்கள் புண்ணாகிக் கிழிவதே இந்த நிலை. இதனால் நல்ல காற்று நுரையீரலின் அடி ஆழம்வரை போவதும், இரத்தம் சுத்தமாவதும் ஒழுங்காக நடைபெற முடிவதில்லை. இது ஓர் அபாயமான நிலை. சில சமயம் இதயம்கூடப் பாதிக்கப்படலாம்.

'டியூபர் குலோசிஸ்' என்னும் காச நோய்தான் நமது நாட்டில் அதிகம் காணும் நுரையீரல் நோய். பல காரணங்களால், பல குடும்பங்களில் பரம்பரைத் தொல்லையாகக்கூட இந்த நோய் பரவுகிறது. குழந்தைகளையும் இளைஞரையும்கூட இது பற்றிக் கொள்ளுகிறது.

இருமலால் தொற்றும் வியாதி இது. பொது இடங்களில் எச்சில் துப்பக் கூடாது என்னும் விதியை நன்கு கடைப்பிடித்தால் காச நோய் பரவாது தடுக்க முடியும். பொது இடங்களில் ஜெப்படி செய்பவர்கள் பொதுநல விரோதிகள் என்றால், அவர்களை விடக் கொடியவர்கள் இருமிக் கோழை துப்புகிறவர்கள். காச நோய்க் கிருமி மிக நுட்பமானது. ஒரு சொட்டுக் கோழையிலே ஒரு லட்சம் இருக்கலாம். காற்றிலே, தூசியிலே பரவி, மற்றவர் சுவாசிக்கும்போது அவர்கள் நுரையீரலுக்குள் புகுந்தால் ஆபத்துதான். காச நோய் உடலில் எந்தப் பகுதியிலும் வரலாம்; ஆனால் நுரையீரல் காசம்தான் அதிகம்.

காச நோய் பரவலாக இருப்பதாலும் அதன் கொடுமையை உணர்ந்ததாலும் இன்று காச நோய் பற்றிய ஆராய்ச்சிகள் நிறைய நடைபெற்றுவருகின்றன. சிகிச்சை முறைகள் எளிதாக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் நாட்டில் காச நோய்ச் சிகிச்சைக்கு என்றே பல தனி நிலையங்கள் இருப்பதோடு, முக்கிய மருத்துவ மனைகளில் காச நோய்ச் சிகிச்சைப் பிரிவுகள் உள்ளன. நோய் அறிகுறி உள்ளவர்களைச் சோதித்துப் பார்க்கப் பல நுண் கருவிகள் உள்ளன. எக்ஸ்ரே கருவிகள் கண்டுபிடிப்பு இந்தச் சிகிச்சைக்குப் பெரிதும் உதவியுள்ளது. பல குடியிருப்புக்களிலும் தொழிற்சாலைகளிலும் நூற்றுக் கணக்கானவர்களுக்குச் சோதனைக்காக ஒரே மொத்தமாக எக்ஸ்ரே எடுத்து, தேவையானவருக்குச் சிகிச்சை அளிக்கும் முறைகளும் உள்ளன.

காசநோய் மிகவும் துன்பம் அளிப்பதுதான். ஆனால் தொடர்ந்து சிகிச்சை எடுத்துக் கொண்டால் பூரண சுகமடையலாம். பதினெட்டு மாத காலம் இடைவிடாது சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த அடிப்படை விதியைக் கடைப்பிடிக்காததால்தான் பல நோயாளிகள் தாமும் குணமடையாமல் பிறருக்கும் நோயைத் தொற்றவைக்கிறார்கள்.

நீண்ட காலச் சிகிச்சை என்றால் செலவு அதிகமா?

இப்போதுள்ள எளிய சிகிச்சை முறைகளால் முழுச் சிகிச்சைக்கும் நூறு ரூபாய்க்குள்தான்செலவு என்கிறார்கள் வைத்தியர்கள்.

உண்மையிலேயே 'கடைசி மூச்சு வரை' பணிபுரியும் நுரையீரலுக்கு என்ன கைம்மாறு செய்ய முடியும்?

கட்டுரை: **தம்பி சீனிவாசன்**

ஆலோசனை: **டாக்டர் கே. வி. கிருஷ்ணசாமி**

ஷேவர் ஸ்விஷ்

விமானக் கொள்ளையரை விரட்டியடிக்கிறான்



ஒவ்வொரு முறையும் இதே கதை: ஸ்விஷ் க்ஷவரம் செய்து கொள்பவரை மிஞ்சுவதற்கில்லை



மின்னலடிக்கும் வெண்மைக்கே...
ரின்
RIN
ரின். சோப் அல்ல இது. புத்தம் புதுமையான ஒரு சலவைச் சாதனம்—வில்லை வடிவிலே ஒரு டிடர்ஜெண்ட். சிக்கன மிக்கது ரின்: சோப்பைவிட மேலும் அரை மடங்கு அதிகத் துணிகளை வெளுத்-திடும். திறந்த சோப்புப் பெட்டியிலே ஈரமுலர வைத்துக் கொண்டால் சிறந்த பலன் அளிக்கும் ரின். குடும்பத்திலுள்ள ஆடவரின், பெண்டிரின், குழந்தையரின்...யாவரின் துணிகளிலும் மின்சுடரின் வெண்மை பளிச்சிடவே: ரின்!
சலவையோ யானையளவு!
சோப்பைவிட அரைமடங்கு அதிகத் துணிகளை வெளுப்பது ரின்!

அழகண்ணன் கண்ட அழகு!



கண்டி விருந்துபசாரத்தில் காப்டன் வாடேகர், இந்திய கிரிக்கெட் கன்ட்ரோல் போர்ட் தலைவர், இலங்கை பிரசிடென்ட், கிரிக்கெட் கோஷ்டி காப்டன் ரஞ்சித் பெர்னாண்டோ.

''இலங்கையில் சிறுவர்களிலிருந்து மந்திரிகள் வரை கிரிக்கெட்டில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். நம் இந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர்களை ஜயிக்க வேண்டுமென்று இலங்கைக் கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் பல நாட்களாகக் கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டிருந்தார்கள்'' என்று இந்திய கிரிக்கெட் கோஷ்டி மானேஜர் திரு ஆர். பி. அழகண்ணன் இலங்கை கிரிக்கெட் ஆர்வத்தை மெச்சினார்.

''இந்திய கிரிக்கெட் கோஷ்டியை ஜயிக்க வேண்டுமென்று அவர்களுக்கு அவ்வளவு ஆர்வம் ஏற்படக் காரணம் என்ன?'' என்றேன்.

''இலங்கைக் கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கு இன்னும் டெஸ்ட் அந்தஸ்து அளிக்கப்படவில்லை. உலக 'அன் அஃபிஷியல்' சாம்பியன்களான இந்திய கோஷ்டியினரை ஜயித்தால் உடனே அந்த அந்தஸ்து கிட்டிவிடும் என்பதினால்தான்.''

''அவர்களுடைய கிரிக்கெட் தரத்தைப் பற்றிச் சொல்கிறீர்களா?''

''ரொம்ப உசத்திதான். தைரியமாக ஆடுகிறார்கள். இரண்டாவது அன் அஃபிஷியல் டெஸ்ட்டில் தோல்வி நெருங்கிய போதிலும் இலங்கை காப்டன் டென்னிகூன் '169 நாட் அவுட்' எடுத்ததுதான் இலங்கைப் பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் பெரிய தலைப்போடு இடம் பெற்றது. காவியம் எழுதாத குறைதான்.''

''நம் இந்திய கோஷ்டிக் காப்டன் வாடேகர் ஆட முடியாத நிலையிலிருந்து இந்த டெஸ்ட்டில் கலந்து கொண்டார் போலிருக்கிறதே!''

''ஆம்! இந்த இரண்டாம் டெஸ்டின்போது நரம்புஇழுப்புக் காயத்தினால் வாடேகர் அவஸ்தைப்பட்டதால் ஆடவே கூடாது என்று டாக்டர் சொல்லி விட்டார்! காப்டன் வாடேகர் ஆடினால் இந்தியக் கோஷ்டியின் உற்சாகம் அதிகமாகும் என்று எங்களுக்கு எண்ணம். குதிரைப் பந்தயத்துக்கு முன் பந்தயக் குதிரையைப் பரீட்சார்த்தமாக ஓடச் செய்து பார்ப்பது போல் டெஸ்ட் ஆரம்பமாவதற்கு முன்னால், காப்டன் வாடேகரை மைதானத்தில் அரை மைல் ஓடச் சொல்லிப் பரீட்சித்தோம். இலங்கைக் கிரிக்கெட் விசிறிகளுக்கு இது ரஸமான ஒரு காட்சியாயிருந்தது! காப்டன் வாடேகர் 89 ரன்கள் எடுத்து, அவரைச் சேர்த்துக் கொள்வதென நாங்கள் செய்த முடிவு சரியானது என்பதை நிரூபித்தார். இரண்டாம் டெஸ்ட் வெற்றி, அவர் ஆட்டத்தில் சேர்ந்ததற்குக் கிடைத்த பரிசு!''

''அறுபது ஓவர் கிரிக்கெட்டில் 'லெக் சைடி'ல் ஐந்து பேருக்கு மேல் இருக்கக்கூடாதென்று ஒரு புதிய ரூல் கிளம்பியிருக்கிறதே, அதைப் பற்றி விளக்குங்களேன்!''

''இது பரீட்சார்த்தமான ரூல். . இந்தியாவைத்தான் இந்தச் சட்டம் ரொம்பப் பாதிக்கும். நம்மிடையே தானே பேடி, வெங்கட் போன்ற அருமையான ஸ்பின்னர்கள் இருக்கிறார்கள்?''

''அறுபது ஓவர் ஒரு நாள் கிரிக்கெட் மாட்சில்கூட இந்தியா ஜயித்து விட்டதே!''

''ஆம்! இலங்கைக் கிரிக்கெட் ஆட்டக்காரர்களை இது ரொம்ப பாதித்து விட்டது. அறுபது, ஐம்பது ஓவர் கிரிக்கெட் பந்தயங்களில் பாகிஸ்தான், எம். ஸி. ஸி. கோஷ்டிகளோடு ஆடி இலங்கை ஜயித்திருக்கிறது. இந்தியாவையும் ஜயித்து விட்டால் லண்டனில் 1975ம் ஆண்டில் நடைபெறும் உலகக் கோப்பைப் பந்தயத்தில் ஈடுபடும்போது தெம்பாக இருக்கும் என்று எதிர்பார்த்தார்கள்...''

''இலங்கையில் உங்களைக் கவர்ந்த விஷயங்கள்...''

''முதலில் அவர்களுடைய விருந்தோம்பும் பண்பு. இரண்டாவதாக இந்தியா, ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஆடி ஜயிக்க வேண்டுமென்ற அவர்களது பெரு நோக்கு. ஒரு சகோதரனின் வெற்றியாக இதைக் கருதுவார்களாம்! எத்தனை அழகான உள்ளங்கள் பார்த்தீர்களா?''


பேட்டி: **குண்டுமணி**

திரு ஆர். பி. அழகண்ணன்





ஓடும் பஸ்ஸில் ஓர் அனுபவம்



பஸ்ஸுக்காகக் காத்து நிற்கும் 'க்யூ' எறும்புச் சாரியாக நீண்டு நின்றது. மணிக் கட்டில் நகர்ந்த கடிகார முள்ளைப் பார்த்த படி அவசரமாக நடந்து வந்து 'க்யூ'வில் சேர்ந்து கொண்டாள் சுமித்ரா.

மெல்லிய ஆரஞ்சு நைலான் புடவை. உயரத்தை உயர்த்திக் காட்டும் கட்டு. வாளிப்பும் கட்டு மாகப் பொங்கும் இளமை. பெங்களூர் சூரியகாந்திப்பூ மாதிரி ஒரு பூரிப்பு. கண்ணைக் கட்டி நிறுத்தும் கவர்ச்சி.

''சுமி! 'மார்னிங்!' ''

கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்த ஒரு பெண், 'க்யூ'வில் சற்று முன்னால் நின்று கொண்டிருந்தவள், இடுப்பை மிடுக்காய் ஒடித்துக் கையை ஆட்டினாள். சுமித்ரா பதிலுக்குக் கையை அசைத்தபோது, காது ஜிமிக்கி ஆடிற்று. அந்த முகக் களையையும் குறுகுறுப்பையும் முன் வரிசை முகங்கள், ஒருமுறை திரும்பிப் பார்த்துத் திருப்திப் பட்டுக் கொண்டன.

சௌரிங்கி ரோட் ஸ்டாப்பில் இறங்க வேண்டும். அங்கிருந்து கிராண்ட் ஹோட்டல் பக்கமாகக் குறுக்கே நடந்தால் அவளுடைய அலுவலகமான கடிகாரங்கள் விற்பனை செய்யும் கடை இரண்டு பர்லாங்கு தூரம் இருக்கும். பஸ் கிடைத்து விட்டால் நின்றுகொண்டு செய்யும் பிரயாணம் பத்து நிமிடங்கள். அப்புறம் நடை பத்துநிமிடங்கள்.

பஸ் வந்து நின்றது; கூட்டம் அலை ஒதுங்கிற்று. இறங்குபவர்களுக்குக் காத்து நின்று வழி விட்டு, உடனே சுமி நெருக்கிக் கொண்டு உள்ளே ஏறினாள். முன்னும் பின்னும் பெண்கள்தாம். அதனால் நெருங்கி ஏறக் கூச்சம் இல்லை. உள்ளே போன பிறகு, மனிதச் சுவர்களுக்கு நடுவே அவளால் இடம் பார்த்து நிற்க முடியவில்லை. தலைப்பை இழுத்துக் கைக்குக் கீழே லாகவமாகப் போர்த்துக்கொண்டு உயரே தொங்கும் பிடியைப் பிடித்துக் கொண்டாள்.

திடீரென்று சுமித்ராவின் கண்ணில் கனல் பறந்தது. உராய்ந்து நிற்கும் கூட்டத்துக்கு நடுவே அந்தக் கை நீண்டு அவள் இடையில் பதிந்தது. விரல்கள் சேர்ந்து ஒரு கிள்ளு. அவள் பிதுங்கி நகருவதற்குள் கைநிறைந்து விட்டது. அதே கைதான். வழக்கமான அதே கைதான்.

கடிகாரத்தைப் பார்த்ததும் அவள் அடையாளம் சொல்லி விடுவாள். அது ஒரு டைம்-ஸ்டார் கடிகாரம். அகலப் பட்டையாக ஒரு பாம்புத் தோல் ஸ்ட்ராப். ஆள் காட்டி விரலில் ஒரு பவுன் மோதிரம். தற்செயலாகப் படுவது இல்லை அது. தெரிந்து அவளை அடையாளம் புரிந்துகொண்டு அந்தக் கை நீளுகிறது. எவ்வளவு தடித்தனம்? எத்தனை அகம்பாவம்? படபடவென்று வந்தது அவளுக்கு. ஆனால் ஏதும் செய்யமுடியவில்லை. கூட்டத்தில் அவனுக்கு முகம் தெரியவில்லை. ஆனால் அடையாளம் கண்டுகொள்ளக் கூடிய அதே கை. அந்த நினைப்பிலேயே அவள் கலகலத்துப் போவாள். கெட்ட சொப்பனம் கண்டது போல் உடல் வியர்த்துப் போகும். இதற்காகச் சில சமயம் நேரம் கழித்தே கடையிலிருந்து புறப்படுவாள். புறப்பட்ட பின் அங்குமிங்கும் பார்த்தபடி சிறிது தாமதமாகவே வந்து சேருவாள். வந்த பிறகும் கூட்டம் அதிகமாக இருந்தால் இரண்டு பஸ்களை விட்டு விடுவாள்.

அதனால் வீடு போய்ச் சேருவதற்குள் இருட்டி விடும். அவள் தந்தை கவலைப் பட்டுக் கொண்டு வாசலிலேயே நின்றுகொண்டிருப்பார். அவரைப் பார்த்ததும் ''ஏன் அம்மா இத்தனை நாழி?'' என்று கேட்பவரிடம், ஒவ்வொரு விதமாகப் பதிலைத் தேடிச் சொல்வதற்குள் பெரிய சிரமம் ஆகிவிடும். எப்படிச் சொல்வது இந்தச் சங்கடத்தை?

அன்று கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு யோசனையாகத் தன் 'ஸீட்'டில் உட்கார்ந்து கொண்டிருந்தாள் சுமி.

''ஹலோ மிஸ்! என்ன யோசனை அவ்வளவு தீவிரமாக?''

நிமிர்ந்து பார்த்தாள். கையில் பிரம்புத் தடியை உருட்டியவாறு நின்றுகொண்டிருந்தார் சட்டர்ஜி. புதுப் புது கடிகாரங்களைப் பார்ப்பது என்றால் அவருக்கு அலாதியான பிரியம். அடிக்கடி கடைக்கு வருவார். வந்தால் அவளிடம் பேசாமல் போக மாட்டார்.

''புது வித கடிகாரம் ஏதாவது வந்திருக்கிறதா சுமி?''

''ஸ்பெஷலாக ஒன்றுமில்லை ஸார்!'' என்று தலையைக் குனிந்து கொண்டாள். முதல் நாள் மாலையில் விரல் பட்ட கோபம் இன்னும் ஆறவில்லை.

''வழக்கமான புன்சிரிப்பைக் காணுமே, சுமி?''

சுமித்ரா 'களுக்'கென்று சிரித்துக்கொண்



எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

டாள். ஆனாலும் அது கண நேர மின்னல் தான். சிரிப்பு சந்தோஷத்துடன்தான் ஒலித்தது. ஆனால் நெஞ்சில் இடறும் ஒற்றைப் பருக்கையைப் போல, அந்தக் கலகலப்பில் ஒரு பொய்ம்மை ஒளிந்து கொண்டிருந்தது. அது சட்டர்ஜியின் கவனத்துக்குத் தவற வில்லை.

''நீ சொன்னால்தான் நான் போகப் போகிறேன்!''

''ஒன்றுமில்லை ஸார்!''

''நான் ஓர் இன்ஸ்பெக்டர். என்னை நீ ஏமாற்ற முடியாது.''

யோசித்துக் கொண்டே இழுத்தாற்போலக் கொஞ்சம் கொஞ்சமாகச் சொன்னாள் சுமி.

''சரி. அந்த ஸ்டாப்பிலும் பக்கத்து ஸ்டாப்பிலும் கண்காணிக்கச் சொல்லி இந்த 'ரேஞ்சி'ன் இன்ஸ்பெக்டரிடம் சொல்லுகிறேன். ஒரு 'ட்ராப்' ஏற்பாடு செய்து பருந்து கவ்விப் பிடிக்கிற மாதிரி பிடித்து விடலாம்.''

''தொந்தரவு ஏற்படாதே, ஸார்?''

'' 'ஈவ்-டீஸிங்' — இந்த மாதிரிப் பெண்களைத் தொந்தரவு செய்வது சட்டப்படி குற்றம். நாங்கள் மடக்கிப்போட்டுவிடுவோம். அப்புறம் உனக்கு போன் செய்கிறேன். நீ வந்து உன்னைத் தொந்தரவு செய்கிறவனை அடையாளம் காட்ட வேண்டும். முடியுமா உன்னால்?''

சுமித்ரா அரை நிமிடம் யோசித்தாள். அந்த முகத்தை அவள் பார்த்ததில்லை. ஆனால் கையைப் பார்த்தால் சொல்லி விடுவாள்.

''ஆகட்டும் ஸார்!''

''பை! பை!'' என்று சொல்லி விட்டு சட்டர்ஜி போய்விட்டார்.

அன்று காலை மணி பதினொன்று இருக்கலாம். அவளுக்கு போன் வந்தது. சட்டர்ஜி தான் பேசினார்.

''ஏழெட்டுப் பேரை மடக்கி வைத்திருக்கிறோம். ஒரு மணி நேரத்தில் அடையாளம் காட்டும் 'பரேட்' நடக்கும். நீ வருவதற்குத் தயாராக இரு. நான் 'ஜீப்'பை அனுப்பி வைக்கிறேன்.''

இதை எதிர்பார்த்துத் தயாராக இருந்திருந்தாலும், கேட்டவுடன் 'ஜில்' என்று அந்தக் குளிர்சாதனம் செய்த அறையிலும் வியர்த்தது. கூடவே மனத்தில் ஒரு மகிழ்ச்சியும் ஏற்பட்டது. பழிவாங்குவதில் ஏற்படும் ஆனந்தமே அலாதியானதுதான். அவனுடைய தொல்லைகளுக்கு அவன் தண்டனை பெற்ற பிறகு ஒரு முடிவு ஏற்படும்.

'ஜீப்' வந்ததும் ஏறிக் கொண்டு போனாள்.

வரிசையாகப் பார்த்தபடி நடந்து வந்தாள். அங்கே இருந்த ஏழெட்டுப் பேரில் ஒரு வாலிபனின் முகம்தான் கள்ளம் கபடில்லாமல் இருந்தது. பார்க்கும் போதே 'இவன் எப்படி இங்கே வந்தான்?' என்று நினைக்கத் தோன்றியது. சட்டென்று அவன் மணிக்கட்டைக் குனிந்து பார்த்தாள். அவன் வலது கை இடது கை மணிக்கட்டை மூட முயன்று கொண்டிருந்தது.

'டைம் ஸ்டார்' கடிகாரம்; அகலப் பட்டையாகப் பாம்புத் தோல் ஸ்ட்ராப்!

அதிர்ந்துபோய் நின்றாள் சுமி. தளர்ந்து போய்த் தலையை மெல்ல மெல்லக் குனிந்த அவனுடைய கண்கள் அவளைப் பரிதாபமாகச் சந்தித்தன. எத்தனை அழகான முகம்? பார்த்தாலே இளக வைக்கும் கண்கள்? அந்தப் பார்வை அவளைச் சுற்றிச் சுற்றி வந்து காலில் விழுவதைப் போலத் தோன்றியது. ஒரு கணம் தான் தயக்கம். உடனே விறுவிறுவென்று அவனைக் கடந்து போய் விட்டாள்.

''என்னம்மா? யாரையாவது அடையாளம் தெரிந்ததா?'' என்று கேட்டார் சட்டர்ஜி. குழந்தையைப் போலச் சிரித்துக் கொண்டே நினைத்ததைச் சொல்லத் தெரியாமல் தடுமாறினாள் சுமி.

''இதில் யாரும் இல்லை ஸார்!''

உதட்டைப் பிதுக்கிப் பெருமூச்சு விட்டார் சட்டர்ஜி. ''பார்க்கலாம். கவலைப்படாதே.''



சுமக்க வேண்டாம் : சுகமாய் ஆடலாம்!

ஜப்பானைச் சேர்ந்த ஒரு நிறுவனம் கால்ஃப் ஆட்டக் காரர்களுக்கு ஒரு வசதி செய்து தர முன் வந்திருப்பதாக நியூஸ்வீக் பத்திரிகை கூறு கிறது. மானோ ரயில் கால்ஃப் வண்டி கால்ஃப் மைதானத்தைச் சுற்றி வரும். அதில் கால்ஃப் குச்சிகள் அடங்கிய நான்கு பைகள் இருக் கும். இந்த மானோ ரயில் வண்டி மணிக்கு மூன்று மைல் வேகம் செல்லும். கால்ஃப் 'டீ' இடங்களிலும் பாயிண்ட்களிலும் தானாகவே இந்தக் கால்ஃப் வண்டி நிற்கும். இந்தக் கால்ஃப் வண்டியை மின்காந்த சக்தியால் இயக்குகிறார்கள். எந்தக் குண்டு குழி பள்ளத்திலும் சொன்ன இடத்தில் இதை நிறுத்தி வைக்க முடியுமாம்!

- பி. எஸ். எம்

'இனிமேல் கவலை இல்லை ஸார். மறுபடியும் நடக்காது' என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டு சுமி 'ஜீப்'பில் ஏறினான்

சுமித்ராவின் கல்யாணத்தை அந்த 'சீஸ'னை விட்டுத் தள்ளிப் போடுவதில்லை என்று தீர்மானம் செய்து விட்டார் அப்பா.

நல்ல குடும்பமாம். பையன் கல்லூரிப் படிப்பு முடித்தாயிற்று. 'மிலிடரி'ல் சேர்ந்து கொள்ளப் போகிறானாம். பார்க்க நல்ல அழ காக அவளுக்குப் பொருத்தமாக இருப்பானாம்!

''எனக்கு அவசரம் இல்லை அப்பா!'' என்று இழுத்தாள் சுமி.

''அந்தப் பையன் உன்னைப் பார்க்கட்டும். நீயும் பார். உனக்குச் சம்மதம் இல்லாது போனால் நான் வற்புறுத்த மாட்டேன்'' என்றார் அவர். அவளும் ஒத்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

அவர்கள் வந்தபோது சுமித்ரா உள்ளே இருந்தாள். நிலைக் கண்ணாடிக்கு முன்னால் நின்று முகத்தைத் திருப்பித் திருப்பி முது கைப் பார்த்துக் கொள்வதும், இலேசாகச் சரி செய்து கொள்வதுமாகத் தனக்குள்ளேயே ஓர் இரகசிய மகிழ்ச்சியில் தவித்துக் கொண் டிருந்தாள்.

''சுமித்ராவைக் கூப்பிடு.''

அப்பாவின் குரலைக் கேட்டு, அறை வாசலை மெதுவாகக் கடந்தவள் ஓரடி பின்னடைந் தாள். அவன்மேல் பட்டுப் பிரமித்த பார்வை யைப் பெயர்க்க முடியவில்லை அவளால்.

அதே வாலிபன்—டைம்ஸ்டார் கடிகாரம்—பாம்புத் தோல் பட்டை!

உடல் முழுதும் ஓர் உணர்ச்சி கூசி நெளிந்து அடங்கிற்று. அவள் திரும்பி உள்ளே போய்விட்டாள். சிறிது நேரம் ஆயிற்று. அப்பா தொடர்ந்து உள்ளே வந்தார்.

''சுமி! அந்தப் பையன் தனியாக உன் னுடன் ஐந்து நிமிடம் பேச வேண்டுமாம். முன் அறையில் உட்கார்ந்திருக்கிறான். உனக் குத் தடை இல்லை என்றால்...''

''எதற்காகவாம் அப்பா?''

''தெரியவில்லை. உனக்குப் பிடிக்கவில்லை என்றால் வேண்டாம்.''

பிடிக்கவில்லை என்று சொல்லி விட முடி யுமா? அப்படியானால் மனத்தில் ஏன் இந்தக் கலக்கம்? குழப்பம் செய்யும் வேதனை? இத் தனை அழகான வாலிபனுக்கு இப்படி ஒரு மனச் சபலமா என்ற இரக்கம்தானே? 'உண் மையைச் சொல்லு' என்று உள் மனத்தை வற்புறுத்திக் கேட்டால் அந்தப் பதில்தானே கிடைக்கும்?

''சரி, அப்பா. வருகிறேன்'' என்று தீர் மானமாக வெளியே வந்தாள்.

அவன் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவளைப் பார்க்கக் கூடத் தைரியம் இல்லை. காலடிச் சத்தம் கேட்டதும் தலையைக் குனிந்து கொண்டான். அவள் ஜன்னல் ஓர மாக நின்றாள்.

''எதற்குக் கூப்பிட்டீர்கள்?''

''ஏதோ ஓர் அசட்டுத்தனம்... தப்புச் செய்து விட்டேன். அதற்கு நீ தண்டனை கொடுத்திருக்கலாம். ஆனால் அன்று நீ விட்டு விட்டாய்....அப்புறம் உன்னைச் சந்தித்துச் சொல்ல வேண்டும் என்றிருந்தேன். நன் றியோ மன்னிப்போ சொல்வதற்கு அல்ல. 'எதற்காக என்னை விட்டு விட்டாய்' என்று கேட்பதற்குத்தான். உன் பெருந்தன்மையை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஒரு மாதமாகவே அந்த அவஸ்தை.

''இங்கே வரும்போது எனக்கு விருப்பம் இல்லை. என் மனம் நான் கேட்காமலே என்னை மன்னித்துவிட்ட அந்தப் பெண்ணைத்தான் நினைத்துக் கொண்டிருந்தது. உன்னைப் பார்த் ததும் எனக்கு மகிழ்ச்சியும் கலக்கமுமாக ஓர் அதிர்ச்சி. இப்போது முடிவு உன் கையில் தான் இருக்கிறது. நீ என்னைப் பிடிக்கவில்லை என்று சொல்லி விடலாம். எனக்கு அதுதான் சரியான தண்டனை. ஆனால் எதனால் பிடிக்க வில்லை என்று மட்டும் சொல்லி விடாதே. அதுதான் என் வேண்டுகோள். உன் பெருந் தன்மைக்கு இது இரண்டாவது சோதனை! என்ன செய்யப் போகிறாய்?''

அவள் மனம் அந்தப் பார்வையையும் பேச்சையும் உணர்ந்து சஞ்சலித்து அடங் கிற்று. ஏனோ அவளுக்கு அவன் மேல் தனிப் பரிவு எழுந்தது.

''என் வேண்டுகோளை ஒப்புக்கொள்ளமாட் டாயா சுமித்ரா?''

''மாட்டேன்!''

அவன் தவித்துப் போனான். கைவிரல்கள் பிரிந்து சேர்ந்து முஷ்டித்தன.

''ஆமாம். என்னால் உங்களை எனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்ல முடியாது!''

'களுக்'கென்று சிரித்துவிட்டு நடந்தாள் சுமித்ரா. அவளைப் பற்றப் போனவன் கையை இழுத்துக் கொண்டான். அந்த ஸ்வாதீனத்துக்கு இன்னும் கொஞ்ச நாட்கள் பொறுத்திருக்க வேண்டுமே அவன்!

உள்ளம் கவர் கள்வன்!©

உள்ளம் கவர் கள்வன்!
இவருக்குக் கவலையில்லை...
இவருக்குக் கிடைத்துவிட்டன

விமல்

தரும் துணிகள்



விமல், உங்களுக்கு எப்போதுமே புத்தம்புதிய துணிகளை வழங்குகின்றனர். இணையற்ற புடவைகள்— மனதைக் கொள்ளை கொள்ளும் இலேசான, குளுமை தரும் மென்மையான புடவைகள்.

பாஷன் உலகில் பிரபலமான உடுப்புத் துணிகளும் உள்ளன. அற்புதமானவை! மனங் கவருபவை. கவர்ச்சியான தோற்றத்துக்கு உயிரானவை. ஜக்கார்டு மற்றும் ப்ளெயின் ஷர்ட்டிங்—டெக்ஸ்லீன் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த சூட்டிங்குகள் உங்கள் அமைதியான எடுப்பான தனித்தன்மைக்கு அழகூட்டுகின்றன. வூவன் மற்றும் நிட்டெட் ஸ்டரெச் சூட்டிங்குகள் 100% டெக்ஸ்சரைஸ்டு பாலியெஸ்டர்.

எப்போதும் கவர்ச்சியான துணிகளுக்காக...

VIMAL®
A RELIANCE PRODUCT

Texlene

100% டெக்ஸ்சரைஸ்டு
பாலியெஸ்டர் சூட்டிங்குகள்
வூவன் மற்றும் நிட்டெட்
(ஸ்ட்ரெச்)

C.P.AdS-VF

'Vimal' is registered trademark of Reliance Textile Industries Pvt. Ltd. Ahmedabad.

உடலில் ஊனம்; உள்ளத்தில் ஊக்கம்!

வயது முப்பத்தொன்று நடக்கிறது. இந்த வயதிலும் திரு ஸ்ரீனிவாசன், குழந்தை போலத் தம் வீட்டில் தவழ்ந்துதான் செல்கிறார்! வாசலுக்கு வந்துவிட்டாலோ அங்கே தயாராக நிறுத்தியிருக்கும் மூன்று சக்கரச் சைக்கிளில் லாகவமாக ஏறி அமர்ந்து விடுகிறார். கைகளினால் பெடல்களை விசையாகச் சுற்றுகிறார். தெருவில் சக்கரங்கள் உருளத் தொடங்குகின்றன.

தினமும் காலை எட்டு மணி அளவில் திரு ஸ்ரீனிவாசன், இப்படித்தான் தம் வீட்டிலிருந்து கிளம்புகிறார்.

மகாதானபுரம் (திருச்சி மாவட்டம்) ரயிலடிக்கு எதிரேயுள்ள, 'ஸ்ரீ மீனாக்ஷி காப்பி ஒர்க்ஸ்' எனும் தம் சொந்த நிறுவனத்துக்கு வந்து சேர்கிறார்!

''பிறந்து பத்தாவது மாதத்திலேயே தாயை இழந்தேன். இரண்டு வயதில் இளம்பிள்ளை வாதத்தால் இரண்டு கால்களும் சூம்பிப் போய்விட்டன. நடக்கும் சக்தியை இழந்தேன். மின்சார சிகிச்சை, மருத்துவ சிகிச்சைகளினால் என்னால் உட்கார முடிந்ததே தவிர நிற்க முடியவில்லை. வீட்டுக்குள்ளே இளமைப் பருவம் முழுவதும் தவழத்தான் செய்தேன்... வேறு வழியில்லை.''

''உங்கள் பள்ளிக்கூட அநுபவங்களைச் சொல்ல முடியுமா?''

''என் தாய் மாமனுக்குக் குழந்தைகள் இல்லை. அவர்தான் என்னை எடுத்து அன்புடன் வளர்த்தார். அன்பில் உயர்நிலைப் பள்ளியில் இந்தி ஆசானாக இருந்தார். அவர் தினமும் என்னைத் தம் சைக்கிளின் பின் சீட்டில் அமர வைத்துப் பள்ளிக்குக் கொண்டு 'செல்வார். வீட்டுக்குத் திரும்பவும் அழைத்து வருவார்.''

1960-ம் ஆண்டு அன்பில் உயர்நிலைப் பள்ளியிலேயே அதிக மதிப்பெண்களுடன் எஸ். எஸ். எல். ஸி.யில் தேறிய மாணவர் இந்த ஸ்ரீனிவாசன்தான்.

ஸ்ரீனிவாசன் நாலு பேருக்குத்தெரியுமளவுக்குச் சொந்த நிறுவனத்தின் மூலம் பிரபலமடைய ஆரம்பித்து விட்டார். திருச்சிக்கு ரயில் மூலம் சென்று 'ஸ்டேன்ஸ்' காப்பி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு மொத்தமாகக் காப்பிக் கொட்டை வாங்கி வர ஆரம்பித்தார். வாரம் ஒரு முறை, இப்படி ரயில் பயணம் செய்வது அத்யாவசியமாகி விட்டது.

ரயில்வே பிளாட்பாரங்களில் தவழ்ந்தே செல்ல வேண்டிய நிலை. இதை அவர் பொருட்படுத்துவதில்லை. ஸ்டேஷனுக்கு அப்பால் சைக்கிள் ரிக்ஷா மூலம் திருச்சி நகருக்குள் செல்வார்.

மகாதானபுரம்வாசிகளுக்கு நீரில் ஊறவைத்த அரிசி, உளுந்து முதலிய தானியங்களை அரைத்துக் கொடுக்கும் மின்சார ஆட்டுக்கல் (அரவை யந்திரம்) ஒன்றும் அமைத்துள்ளார்.

திரு ஸ்ரீனிவாசன் தம் நிறுவனத்தில் இரண்டு வாலிபர்களை மாதச் சம்பளத்துக்கு அமர்த்திக்கொண்டிருக்கிறார்.

''மூன்று சக்கர சைக்கிளை வீட்டுக்கும் நிறுவனத்துக்கும் இடையில் போய்வர மட்டும்தானா உபயோகிக்கிறீர்கள்?''

''இல்லை, இல்லை! இந்த ஊரிலிருந்து கிருஷ்ணராயபுரம் வரையில் கூடப் போவேன். ஏழு மைல் தூரம் வரை அயர்வின்றிச் செல்வேன். பாங்கில் வரவுசெலவு கணக்கு வைத்திருப்பதால் அங்கு செல்லவும் இந்தச் சைக்கிளையே பயன்படுத்துகிறேன். பாங்க் கடனுதவியுடன் மூன்று சக்கர சைக்கிளை வாங்கினேன். அந்தக் கடனும் தீர்ந்து விட்டது. ஓர் அவசரமானால் வாடிக்கையாளர்களின் வீடுகளுக்குக் காப்பிப் பொடி, மாவு ஆகியன அடங்கிய டின்களையும், பாத்திரங்களையும் என் சைக்கிளின் முன்னாலுள்ள இடத்தில் வைத்து நானே எடுத்துப் போவேன்!'' என்கிறார்.

பல மாணவர்களுக்கு 'டியூஷன்' சொல்லிக் கொடுத்தபடியே தொழிலையும் வளர்த்து வரும் அவருக்குப் பொழுது போக்கு சீட்டாட்டம்.

''ஆமாம், நீங்கள் திருமணம்....?''

'' ஏன் தயக்கத்துடன் கேட்கிறீர்கள்? பேஷாகத் திருமணம் செய்து கொள்ளத் தயார்! என் குறையைப் பொருட்படுத்தாமல் மனப்பூர்வமாகச் சம்மதித்துக் கை கொடுக்க முன் வந்தால் ஏற்கக் காத்திருக்கிறேன்.''

தவழ்ந்து தரையில் செல்லும் மனிதரானாலும் வாழ்க்கையில் வெற்றி பெற்று மனத்தால் நிமிர்ந்து நிற்கிறார் ஸ்ரீனிவாசன்.

பேட்டி: ஏ. சுவாமிநாதன்

தவழ்ந்து சென்றாலும் தலைநிமிர்ந்து வாழ்கிறார்!



இந்திய திரைப்பட, டெலிவிஷன் கழகம், பூனா-4

நுழைவு அறிக்கை: 1974-75 கல்வியாண்டு

அடுத்த கல்வி ஆண்டு 1974 ஜூலை முதல் தேதி தொடங்கும். இந்தக் கழகம் பின்வரும் வகுப்புகளை நடத்துகிறது:

1. **பிலிம் டைரெக்ஷன் அண்ட் ஸ்கிரீன் ப்ளே ரைட்டிங்.**
2. **மோஷன் பிக்சர் போட்டோகிராப்.**
3. **சவுண்ட் ரிகார்டிங் அண்ட் சவுண்ட் எஞ்சினியரிங்.**
4. **பிலிம் எடிட்டிங்.**
5. **பிலிம் ஆக்டிங்.**

முதல் மூன்று வகுப்புகள் ஒவ்வொன்றும் மூன்று ஆண்டு காலத்துக்கு நடக்கும். கடைசி இரண்டு வகுப்புகளும் இரண்டு ஆண்டு காலம் நடக்கும்.

பல்வேறு வகுப்புகளுக்கு விண்ணப்பம் செய்பவர்கள் ஆங்கிலக் கட்டுரை, பொது அறிவு இவற்றில் தேர்வு எழுத வேண்டும். விண்ணப்பத் தாளுடன் மற்ற விவரங்கள் அடங்கிய பிராஸ்பக்டஸ் பிரதி ஒன்றுக்கு பூனா 4-ல் உள்ள பிலிம் அண்ட் டெலிவிஷன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் இந்தியா அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீசருக்குக் கொடுக்கப்படும் வகையில் கிராஸ் செய்யப்பட்ட 1 ரூபாய் போஸ்டல் ஆர்டரையும், 50 பைசா மதிப்புள்ள ஸ்டாம்பு ஒட்டப்பட்ட, உங்களுடைய முகவரி எழுதப்பெற்ற கவரையும் (25 செ.மீ. × 18 செ.மீ.) அனுப்பி விண்ணப்பித்துக் கொள்ளலாம். உரிய வகையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 1974 ஏப்ரல் 10ந் தேதிக்குள் அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீசருக்கு வந்து சேர வேண்டும்.

டெலிவிஷன் பயிற்சிக்கான வகுப்புகள் இன்னமும் இக் கழகத்தில் தொடங்கப்படவில்லை. எனவே இந்த வகுப்புகளில் சேருவதற்கான விண்ணப்பங்களை அனுப்பவேண்டாம்.

நுழைவுக்கான தகுதி வரையறை: *பிலிம் டைரக்ஷன் அண்ட் ஸ்கிரீன் ப்ளே ரைட்டிங்: கலைத் துறை அல்லது விஞ்ஞானத் துறையில் பட்டம் அல்லது அதற்குச் சமமானது; தேசிய நாடகத் துறைப் பள்ளியின் டிப்ளோமா அல்லது அதற்குச் சமமானது; மோஷன் பிக்சர் போட்டோகிராப், சவுண்ட் ரிகார்டிங் அண்ட் சவுண்ட் எஞ்சினியரிங், பிலிம் எடிட்டிங், பிலிம் ஆக்டிங் ஆகியவற்றில் இந்தியத் திரைப்பட, டெலிவிஷன் கழகத்தில் பெற்ற டிப்ளோமா அல்லது அதற்குச் சமமானது.*

மோஷன் பிக்சர் போட்டோகிராப்: *பௌதிக, ரசாயன பாடங்களுடன் கூடிய இண்டர்மீடியட் (ஹையர் செகண்டரி பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்கள், பௌதிக, ரசாயன பாடங்களுடன் கூடிய மூன்றாண்டுக் கால விஞ்ஞானத் துறை பட்டப் படிப்பில் முதல் ஆண்டுப் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற பின் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்); அல்லது எஸ். எஸ். ஸி.யுடன் நுண்கலைத் துறையில் (பெயிண்டிங்) பட்டம் அல்லது டிப்ளோமா; எஸ். எஸ். ஸி.யுடன் எஞ்சினீயரிங் துறையில் (இரண்டாண்டுப் படிப்பு) பல்கலைக் கழகத்தின் அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற கழகத்தின் டிப்ளோமா; எஸ். எஸ். ஸியுடன் போட்டோகிராப் துறையில் பல்கலைக் கழக மொன்றின் அல்லது மாநில அரசு அல்லது இந்திய அரசு அங்கீகரித்துள்ள மாநில அரசாங்கக் கழக மொன்றின் டிப்ளோமா. (போட்டோகிராபி துறையில் இந்த டிப்ளோமா படிப்பு இரண்டாண்டுக் காலமானதாக இருக்க வேண்டும்.)*

சவுண்ட் ரிகார்டிங் அண்ட் சவுண்ட் எஞ்சினியரிங்: *பௌதிகம், ரசாயனம், கணிதம் ஆகிய பாடங்களுடன் கூடிய இண்டர்மீடியட் அல்லது அதற்குச் சமமானது; (ஹையர் செகண்டரி பரீட்சையில் தேறியவர்கள், பௌதிகம், ரசாயனம், கணிதம் ஆகிய பாடங்களுடன் கூடிய மூன்றாண்டுப் பட்டப் படிப்பின் முதலாண்டு பரீட்சையில் தேறிய பிறகு சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.) எஸ். எஸ். ஸி.யுடன் எஞ்சினீயரிங் துறையில் பல்கலைக் கழக மொன்றின் அல்லது மாநில அரசு அங்கீகரித்த கழக மொன்றின் (இரண்டாண்டுப் படிப்பு) டிப்ளோமா.*

பிலிம் எடிட்டிங்: *கலைத் துறையில் அல்லது விஞ்ஞானத் துறையில் இண்டர்மீடியட் அல்லது அதற்குச் சமமானது. (ஹையர் செகண்டரி பரீட்சையில் தேறியவர்கள், மூன்றாண்டுக் காலப் பட்டப் படிப்பின் முதலாண்டுப் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற பிறகு அனுமதிக்கப்படுவார்கள்); அல்லது எஸ். எஸ். ஸி.யுடன், எஞ்சினீயரிங் துறையில் பல்கலைக் கழக மொன்றின் அல்லது மாநில அரசு அங்கீகரித்த கழகம் ஒன்றின் (இரண்டாண்டுப் படிப்பு) டிப்ளோமா.*

பிலிம் ஆக்டிங்: கலைத் துறை அல்லது விஞ்ஞானத் துறையில் ஆங்கிலப் பாடத்துடன் கூடிய இண்டர்மீடியட் அல்லது அதற்குச் சமமானது. ஹிந்தி-உருதுவில் நடைமுறை அறிவு அவசியமாகும்.

73/598

15. துரோகத்தின் நிலைகள்

அசுரப் பசியை அடக்கத் தனஞ்செயன் 'ஆனியன் பிஸ்ஸா'வை ஒரு கை பார்த்து விட்டு இப்போது 'சீஸ் ஸாண்ட் விட்ச்'களை மளமள வென்று உள்ளே தள்ளிக் கொண்டிருந்தான். இடை இடையே சூடான காப்பியையும் உறிஞ்சிக் கொண்டிருந்தான்.

''எப்படி இருந்தது பிஸா?'' என்று கேட்டாள் அனுபமா, ஐஸ்கிரீம் நிரம்பிய ஸ்பூனை நாசூக்காக அதரங்களுக்கிடையே செலுத்தியபடி. ''கிட்டத் தட்ட அடை போல் இல்லை?''

''தோகையை விரித்தாட மயில் இல்லாதபோது வான்கோழியின் நாட்டியத்தை ரசிக்க வேண்டியதுதான். என் அம்மா சூடான கீரை அடைக்குத் தொட்டுக் கொள்ள முதலில் வெல்லமும் பிறகு வற்றல் குழம்பும் போடுவாள்... அடடா!'' தனஞ்செயன் சப்புக்கொட்டினான். ''அவளுக்கு ஒரு 'மிக்ஸி' வாங்கித் தந்தேன். தொடவே இல்லை. 'ஆட்டுக்கல்லில் போட்டு அரை மணி நேரம் அரைத்தால்தான் ருசி' என்பாள்!''

''காலம் மாறிக் கொண்டிருக்கிற வேகம் உங்கள் தாயாருக்குப் புரியவில்லை.''

''ஆமாம்; அவள் பழங்காலத்து மனுஷி. 'ராக்கெட்டில் ஏறிச் சந்திரனுக்குப் போகிறேன் என்கிறார்களே, அமாவாசையன்று புறப்பட்டால் எப்படிப் போக முடியும்?' என்று என்னை ஒரு சமயம் கேட்டாள்!''

''பாவம்!'' என்று புன்னகையுடன் பரிந்துரைத்தாள் அனுபமா. ''இந்தப் பாமரத்தனத்திலும் எளிமையிலும் ஓர் எழில் இருப்பதை நீங்கள் உணருகிறீர்களா? கள்ளங் கபடமறியாத அழகான உள்ளம் உங்கள் தாயாருடையது.''

''உள்ளம் மட்டுமில்லை. பார்ப்பதற்கும் அவள் அசாத்திய அழகு. என்னைப் பெற்றெடுத்தவள் வேறு எப்படி இருப்பாள்?''

இலேசான புன்னகையைக் கூட முகத்தில் பரவ விடாமல் அவன் மிக முக்கியமான விஷயத்தை ரொம்பச் சிரத்தையுடன் கூறுவதுபோல் பேசினான்.

அடக்க மாட்டாமல் சிரித்துவிட்டாள் அனுபமா. அது ஓய்ந்ததும், ''உங்களை மன்மதன் என்று என்னிடம் தம்பட்டம் அடித்துக் கொள்ளத்தான் என்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பி இங்கே வரச் சொன்னீர்களா?'' என்று கேட்டாள்.

''இல்லை, பெண்கள் எல்லோரும் என் தாயாரைப் போல் பார்க்க அழகாகவும்



கி.ராஜேந்திரன்

ருசியாகச் சமைக்கத் தெரிந்தவர்களாக வும் ஆட்டுக்கல்லை ஆட்டுவதற்குரிய பலமுள்ளவர்களாகவும் இருந்தால் போதும்; பல்வேறு விஞ்ஞானத் துறை களில் நிபுணர்களாக மாறி என் போன்றவர்களுக்குக் கழுத்தறுப்பாக விளங்க வேண்டாம் என்று கூறத்தான் அழைத்தேன்!''

''ஏன் நான் விஞ்ஞானியாக விளங்கு வதில் உங்களுக்கு என்ன கஷ்ட நஷ்டம்?''

''ஓர் அருமையான டெர்ரி காட் ஷர்ட் கிழிந்தது நஷ்டம். வயிற்றிலே ஊமைக் காயமும், தலையிலே ரத்தக் காயமும் ஏற்பட்டது கஷ்டம்.''

அவள் எதிரே அமர்ந்திருந்த நாற் காலியை விட்டு விருட்டென்று எழுந்து அவனருகே வந்தாள். அவன் வலக் கரத்தைச் சட்டென்று பற்றிக்கொண்டு, ''என்ன நடந்தது? எப்படி? எங்கே?'' என்று பதற்றத்துடன் கேட்டாள்.

அவள் முகத்தில் தோன்றிய கவலைக் குறிகள் அவன் இதயத்தைக் கிளு கிளுக்க வைத்தன. நடந்ததைச் சுருக்க மாக விவரித்துவிட்டு அவன் மேலும் கூறினான்: ''உன் ஒத்துழைப்பு எனக் குக் கிடைக்கும் என்பது உறுதியானால் நான் இன்னும்கூட அதிகமாக அடியோ உதையோ வாங்கிக்கொள்ளத் தயாரா யிருக்கிறேன். கொடுப்பதற்கும் தயங்க மாட்டேன்!''

''நான் ஒத்துழைக்கத் தயாராயிருந் தாலும் அதனால் உங்களுக்குப் பலன் இல்லை என்றுதான் ஏற்கனவே கூறிவிட் டேனே. நான் ஈடுபட்டிருக்கும் ஆராய்ச் சித் துறையே வேறு.''

''உனக்குத் தெரியாத ஆனால் எங் களுக்குத் தேவைப்படுகிற அந்த விவரங் களை நீ மைக்கேலிடமிருந்து கற்றுக் கொண்டுவிடு. அவனால் எங்களுக்கு உதவ முடியும் என்றுதான் சொன் னாயே.''

''இது என்ன அடுப்பங்கரை விவ காரமா, சுலபமாகக் கற்றுக்கொண்டு விட? சோறு வடிப்பதற்குக்கூட அனுப வம் வேண்டும்.''

''சரி. எவ்வளவு காலம் பிடிக்கும் உனக்கு? அதைச் சொல்லு.''

அவள் சிரித்தாள். ''விண்வெளி விஞ்ஞானம் பற்றி உங்களை விட உங்கள் அம்மாவுக்கே அதிகம் தெரியும்போலி ருக்கிறதே! மைக்கின் ஞானத்தை யெல்லாம் நான் பெறுவதென்றால் அதற்கு என் வாழ்நாள் போதாது!''

''நாம் அவ்வளவு காலம் தாமதிப்ப தற்கில்லை'' என்று விளையாட்டாகச் சொன்னான் தனஞ்செயன்.

''ஆமாம், உங்கள் பேரில் எதிரிகள் ஏற்கனவே சந்தேகப்படுகிறார்கள் என்று நிச்சயமாகத் தெரிகிறதே!''

''சந்தேகம் வலுவடைந்தால் எனக் குச் சக்தி வாய்ந்த விதத்தில் அவர்கள் முட்டுக்கட்டை போடவும் முயலுவார் கள். அவர்கள் செயலில் இறங்கு முன் நாம் முந்திக் கொள்ள வேண்டும்!''

''அதனால்....?''

''நீயும் வா; உன்னுடன் மைக்கேலை யும் அழைத்து வந்துவிடு!''

அவள் தூக்கி வாரிப் போட நிமிர்ந்து உட்கார்ந்தாள். கலவரம் கண்களில் பிரதிபலிக்கச் சொன்னாள்: ''என் நாட் டுக்குத் துரோகம் இழைத்து விட்டு உங்களுடன் கிளம்ப வேண்டும் என்கி றீர்கள். இப்போது அதனால் மட்டும் பலன் இல்லை என்று தெரிந்ததும் சிநே கத் துரோகம், நம்பிக்கைத் துரோகம் முதலியவற்றிலும் ஈடுபடுமாறு சொல் கிறீர்கள். இதெல்லாம் நீசத்தனம் என்று உங்களுக்குப் படவில்லையா?''

''தேசத் துரோகம், சிநேகத் துரோ கம் என்றெல்லாம் பெரிய பெரிய வார்த்தைகளை ஏன் போடுகிறாய்? நீங்கள் இருவரும் உங்களுக்கே சொந்த மான அறிவை உங்கள் விருப்பப்படி இந்தியாவிலுள்ள பிற விஞ்ஞானி களுடன் பகிர்ந்து கொள்கிறீர்கள். அவ்வளவுதானே? உங்கள் சொத்தை உங்கள் இஷ்டப்படி பிரியமானவர் களுக்குப் பகிர்ந்து அளிப்பதில் என்ன குற்றம்? நீயேதான் குறிப்பிட்டாய், விஞ்ஞான உலகு குறுகிய நாட்டுப்பற்று தேச எல்லைகளைக் கடந்து நிற்பது என்று.''

''நான் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் வேறு ஓர் அர்த்தத்தில் சொன்னதை இதில் சம்பந்தப்படுத்தாதீர்கள். இது பச்சைத் துரோகமின்றி வேறில்லை!''

''சரி. அப்படி நினைத்துக் கொண் டால்தான் உனக்குத் திருப்தி என்றால் எனக்கு ஆட்சேபணை இல்லை. காரியம் நடந்தால் சரி.''

''முடிவுகள் சரியாக இருந்தால் மட் டும் போதாது. அதை அடையும் மார்க் கங்களும் சரியானவையாய் இருக்க வேண்டும்.''

''ஐய்யய்யோ! காந்தீயத்தை இதில் நுழைக்காதே. என் தொழிலுக்கும் காந்தீயத்துக்கும் ரொம்பத் தூரம்! மைக்கேலையும் அழைத்துக் கொண்டு என்னுடன் கிளம்ப நீ மறுக்க மாட் டாய் என்பது எனக்குத் தெரியும். அப்படி நான் நிச்சயமாக நம்புவதற்கு வலுவான காரணங்கள் உள்ளன!''

அவள் அவனை வியப்புடன் பார்த்தாள். ''என் எதிர்கால வாழ்க்கையையே நிர்ணயிக்கும் பிரும்மாவாக உங்களை யார் நியமித்தது?''

அவன் புன்னகையுடன் தொடர்ந்தான்: ''காரணங்களை விவரிக்கட்டுமா? உனக்கும் மைக்கேலுக்கும் இடையில் ஒருதலைப்பட்சமான காதலே நிலவுகிறது. அவன் உன்னை விரும்புகிறான். ஆனால் நீ அவனைக் காதலிக்கவில்லை; அல்லது உனக்கு அவனிடம் உள்ள அன்பு காதலாக மலர்ந்து விட்டதா இல்லையா என்பது உனக்கே இன்னும் தெரியவில்லை. ஆக இப்படிப்பட்ட நிலையில் அவனைச் சிறிதளவு ஆபத்துக்கு உள்ளாக்கக்கூட நீ தயங்க மாட்டாய். அதே சமயம் அவனுக்கு உன்னிடம் அளப்பரிய காதல் இருப்பதும் நமக்கு அனுகூலம்தான். நீ என்ன சொன்னாலும் அவன் உடனே நிறைவேற்றி வைக்கத் தயாராயிருப்பான். அதற்காக நீ அவனிடம் உட-



னடியாக, 'இந்தியாவுக்கு என்னுடன் வந்து அங்கே ராக்கெட் விஞ்ஞானத்தின் கைடன்ஸ் அண்ட் கண்ட்ரோல் துறையில் உன் கைவரிசையைக் காட்டு' என்றோ அல்லது, 'பாரதம் ஒரு செயற்கைச் சந்திரனை விண்வெளிக்கு அனுப்பி வைக்க உன் ஆற்றலெல்லாம் பயனாகட்டும்' என்றோ சொல்ல வேண்டியதில்லை: அதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். இப்போதைக்கு, 'இரண்டு மாத விடுமுறையில் நான் இந்தியாவுக்குப் போகலாமென்று இருக்கிறேன். நீயும் வாயேன்' என்று அழைத்தால் போதும். உன் நாலாவது வயதில் இந்தியாவைப் பார்த்ததுதான். அதற்குப் பின் உனக்குச் சந்தர்ப்பமே அமையவில்லை. இப்போது என்னைச் சந்தித்துப் பேசியதாலும் நமது உரையாடல்களில் இந்தியாவின் தொன்மையான புகழும் நவீன முன்னேற்றங்களும் அதிகமாக இடம் பெற்றதாலும் உனக்குப் பாரதத்துக்கு உடனே பறந்து செல்ல வேண்டும் என்ற ஆசை கிளர்ந்தெழுந்திருக்கிறது. இதை நீ சொன்னால் அவனும் உடனே இரண்டு மாதம் லீவு போட்டுவிட்டுக் கிளம்பி விடுவான், உன்னுடன். விரலைச் சொடுக்கினால் ஓடி வரும் நாய்க்குட்டி அவன், உன்னைப் பொறுத்த வரையில்!''

''எவ்வளவு பயங்கரமான விஷயத்தை எவ்வளவு சர்வ சாதாரணமாகப் பேசுகிறீர்கள்! நாக் கூசவில்லையா உங்களுக்கு?''

''நான் சொல்வது சரியா இல்லையா என்று தர்க்க ரீதியாக யோசித்துப் பார். மனத்தை அதில் சம்பந்தப்படுத்தாதே. மைக்கேலுடனும் என்னுடனும் நீ இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்யக் கிளம்புவதற்கு உன் குடும்பத்தினரும் குறுக்கே நிற்கப் போவதில்லை. நீ அமெரிக்கப் பாணியிலேயே அதிக அளவு சுதந்திரங்களுடன் வளர்க்கப்பட்டு விட்டாய்.''

''என் வீட்டுக்கு நீங்கள் விஜயம் செய்தது இதையெல்லாம் நோட்டம் பார்க்கத்தானா?'' என்று அவள் ஏமாற்றத்துடன் கேட்டாள்.

''அருமையான சாம்பார் சாதத்துக்காகவும்தான். அப்படியே இன்னொன்றையும் கணித்துக் கொண்டேன். உன் அப்பாவுக்குத் தாய்நாட்டுக்கு உழைக்காமல் அமெரிக்காவில் பணியாற்றுகிறோமே என்ற தாழ்வு மனப்பான்மை ஓரளவு இருக்கிறது. அதனால் நீ உன் விஞ்ஞான அறிவை இந்தியாவுக்காகப் பயன்படுத்த முடிவு செய்தால் அதற்கு அவர் ஆட்சேபிக்க மாட்டார் என்பதோடு வரவேற்கவும் செய்வார். தம்மால் முடியாமல் போனது தம் மகளாலாவது நிறைவேறுவதில் அவருக்கு ஓர் ஆத்ம திருப்தி ஏற்படும். அந்தத் திருப்தியை அவருக்கு அளிக்க நீயும் ஆசைப்படுகிறாய். ஆனால் இந்த விவரம் அவருக்கு உடனடியாகத் தெரிய வேண்டியதில்லை. இப்போதைக்கு நீ விடுமுறையில் இந்தியாவுக்குச் செல்வதாகவே இருக்கட்டும்!''

''உம், அப்புறம்?''

''உனக்கே பாரதத்துக்காக உழைக்க வேண்டும் என்கிற ஆசை உண்டு. இல்லாமலா இந்தியாவில் இயங்கும் ஒரு மிஷனரியின் தொழு நோய் நிவாரணப்பணிக்கு மாதந்தோறும் தவறாமல் பணம் அனுப்பி வருகிறாய்?''

''எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துக் கணக்குப் போட்டு முடித்துவிட்டீர்கள். இவ்வளவுதானா? இன்னும் ஏதாவது பாக்கி இருக்கிறதா?''

''இருக்கிறது. அதுதான் என் பர்சனாலிடி! அதற்குக் கட்டுப்படாமல் தப்பிக்க உன்னால் எப்படி முடியும்?'' என்று அவன் இலேசாகப் புருவங்களை உயர்த்தி, கண்களிலும் அதரங்களிலும் விஷமம் கொப்புளிக்கக் கேட்டான்.

''காஸனோவாவின் காதல் புராணங்களில்கூட இந்த அளவுக்குத் தற்பெருமையைக் காண முடியாது'' என்று கூறிச் சிரித்தாள் அவள்.

''கையாலாகாதவன் தற்பெருமை அடித்துக் கொள்ளக் கூடாது. சாதனைகளைப் புரிபவன் தனக்குள்ள ஆற்றலை வெளிப்படையாகச் சொல்வதில் என்ன தவறு?''

''இரண்டு தவறுகள் உங்களுடைய தர்க்கரீதியான வாதத்தில் உள்ளன. பல காரணங்களை முன்விட்டு நான் இந்தியாவுக்கு உதவவே விரும்புவேன் என்ற உங்கள் அனுமானம் சரிதான். ஆனால் பாரதத்துக்குத் தேவைப்படும் உதவி என்னிடமிருந்து கிடைக்கப் போவதில்லை. மைக்கேலிடமிருந்துதான் பெறப் போகிறீர்கள். அதில் எனக்கு என்ன திருப்தி ஏற்பட முடியும்? ஐந்தாம்படை வேலை செய்தேன் என்ற இழிவு உணர்ச்சிதான் உருவாகும். இரண்டாவதாக, மைக்கேல் என்னுடன் இந்தியாவைச் சுற்றிப் பார்க்கச் சந்தோஷமாக முன்வருகிறான் என்றே வைத்துக் கொள்வோம். அங்கு சென்ற பிறகு உங்கள் விருப்பத்துக்கு இசைந்து தும்பாவிலோ அல்லது மற்றொரு ராக்கெட் தளமான ஸ்ரீஹரிகோட்டாவிலோ பணியாற்றச் சம்மதிப்பான் என்பது என்ன நிச்சயம்?''



பயமுறுத்தும் அஜீரணமா? உடன் நிறுத்த ஹ்யூலட்ஸ் மிக்ஸ்சர் அருந்துங்கள். மீண்டும் முன்போல் சாப்பிடத் தொடங்குங்கள்!

அஜீரணத்தை அசட்டை செய்தால் பசியை மட்டுமின்றி பொறுமையையும் இழந்து விடுகிறீர்கள். சிடுசிடுப்பும், எரிச்சலூட்டும் வலியும் ஏற்படுகின்றன.

ஹ்யூலட்ஸ் மிக்ஸ்சர் அருந்துங்கள். வெகுவிரைவில் அது அமிலங்களைச் சமனப்படுத்தி உங்கள் வயிற்றுக்குப் பாதுகாப்பளிக்கிறது. வலியைப் போக்கி எல்லாவித அஜீரணங்களிலிருந்தும் முழு நிவாரணம் அளிக்கிறது.

வயிற்றுக் கடுப்புக்கு ஓபியம் கலந்த ஹ்யூலட்ஸ் மிக்ஸ்சர் கேட்டு வாங்குங்கள்.



C. J. ஹ்யூல்ட் அண்ட் சன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

சென்னை 600002, கல்கத்தா 700001

SAA/CJH/1192

Asia's most popular journal The Illustrated Weekly of India presents its second annual

THE NEW LANDSCAPE OF INDIA



The 1973 Annual brings you a 200-page volume on the progress - and failures - of our different States; the changing life style of our people since Independence, the difference made by industrialisation and electrification and other close-ups of our national life.

Written by acknowledged experts and fully illustrated in colour and black and white

Buy Your Copy Today

Price : Rs. 10.00

NOW ON SALE

A TIMES OF INDIA PUBLICATION

தனஞ்செயனின் இதயம் திடீரென்று சில்லிட்டு உறைந்து போனது போலாகிவிட்டது. ரத்த ஓட்டமே நின்றுவிட்ட மாதிரி இருந்தது சில கணங்களுக்கு. அவன் அதிர்ச்சியைச் சமாளித்துச் சிறிது தன்னைச் சுதாரித்துக் கொண்டு பேசியபோது நாத் தழுதழுத்தது: ''அனு! எனக்கு ஏமாற்றம் அளிக்காதே! எனக்கு உன் ஒத்துழைப்பை மறுக்காதே! நான் கலபத்தில் தோல்வியை ஒப்புக் கொள்வதில்லை என்று தலையிலும் வயிற்றிலும் அடி வாங்கியபோது தீர்மானித்துவிட்டேன். நீ பிடிவாதம் செய்தால் நான் பொல்லாதவனாக மாறிக் காரியத்தைச் சாதிக்க வேண்டியிருக்கும். அதை நினைத்துப் பார்க்கவே எனக்குப் பிடிக்கவில்லை!''

அவன் கண்களில் மெல்லியதாக நீர்த்திரையிட்டிருப்பதைக் கண்டு அவள் திகைத்தாள். கூடவே அவனுடைய வார்த்தைகள் அவள் இதயத்தை அச்சுறுத்தி நடுங்க வைத்தன.

16. சூழ்ச்சியின் எல்லைகள்

நியூயார்க் நகரின் மையத்திலிருந்து கென்னடி சர்வதேச விமான நிலையம் நோக்கி 'ஏர்போர்ட் கோச்' விரைந்து கொண்டிருந்தது. நெரிசல் மிகுந்த நகர எல்லையைக் கடந்து அகன்ற நீண்ட சாலையில் அந்த 'லக்ஷுரி பஸ்' தங்கு தடையின்றி மைல்களை விழுங்கிக் கொண்டிருந்தது. அத்தனை வேகத்தினிடையிலும் மேகப்பொதியில் அமர்ந்து நிர்மலமான நீல வானத்திடை பயணப்படுவது போன்ற ஒரு சுகம்!

அனுபமா மைக்கேலின் கரத்தோடு தன் கரத்தைக் கொக்கி போட்டாற்போல் இணைத்துக் கொண்டாள். குற்ற உணர்வினால் பீடிக்கப்பட்டிருந்த அவளுக்கு அப்படியே அவன் மார்பில் முகம் பதித்துக் கதறி அழுதுவிடலாம் போல் இருந்தது. ஆனால் அதைச் செய்ய முடியாது போகவே அவன் கரத்துடன் தன் கரத்தைப் பின்னி விரல்களுடன் விரல்களைக் கோத்துக் கொண்டாள். அதற்கு, 'என்னை மன்னித்து விடுங்கள்' என்று கேட்பதாக அர்த்தம். ஆனால் அது அவனுக்குப் புரியவா போகிறது? அவன் திரும்பி அவளை நோக்கிக் குனிந்து புன்னகை புரிந்தான். அந்த அம்பு அவள் இதயத்தைக் குறி பார்த்துப் பாய்ந்து அதனைச் சுக்குநூறாக உடைத்தது.

இருந்தாலும், 'பஸ்ஸை நிறுத்துங்கள்; நாம் கீழே இறங்கிவிடுவோம். இந்தப் பயணம் வேண்டாம்' என்று கூற அவளால் முடியவில்லை. 'நான் உங்களை ஏமாற்றி இந்தியாவுக்கு அழைத்துப் போகவிருந்தேன்; தக்க சமயத்தில் தவற்றை உணர்ந்து திருந்தி விட்டேன்' என்று ஒப்புக் கொள்ள அவளுக்குத் தைரியம் வரவில்லை.

ஏன் இந்தத் துணிச்சல் தனக்கு இல்லை என்பது அவளுக்கே புதிராக இருந்தது. 'மைக்கேலை என்னுடன் விடுமுறையைக் கழிக்க இந்தியா வருமாறு வஞ்சித்து அழைத்துப் போக ஏன் ஒப்புக் கொண்டேன்? மறுத்தால் தனஞ்செயன் ஏமாற்றமும் கோபமும் அடைந்து எனக்கோ மைக்கேலுக்கோ அல்லது என் தகப்பனாருக்கோ ஏதேனும் தீங்கு இழைத்து விடுவான் என்ற பயமா? அல்லது தனஞ்செயன் அடிக்கடி கூறி வந்ததுபோல் அவனது வசீகர சக்தி தான் காரணமா?'

இதோ அவளுக்குப் பின்னால் அமர்ந்து அவளுடைய ஒவ்வோர் அசைவையும் கண்காணிக்கிற தனஞ்செயனிடம் ஓர் அலாதியான கவர்ச்சி இருக்கத்தான் செய்கிறது. மைக்கேலுக்கு அவன் முற்றிலும் மாறுபட்டவன். மைக்கேல் நாகரிகப் பழக்கங்களுக்குக் கட்டுண்டவன். பண்பாட்டுச் சிறப்

The following particulars regarding the ownership of 'KALKI', the Tamil weekly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

1. *Place of Publication*: Madras
2. *Periodicity of its Publication*: Weekly
3. *Name of Printer and Publisher*:
   R. Ananthanarayanan
   Nationality: Indian
   Address: 20, Dr. Guruswami Mudaliar Road Chetput, Madras-600031
4. *Name of Editor*: T. Sadasivam
   Nationality: Indian
   Address: 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-31
5. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital;*
   Bharathan Publications Pvt. Ltd., 20, Dr. Guruswami Mudaliar Road, Madras-600031.

R. Ananthanarayanan,
1-3-74 *Publisher*

தொலைந்ததா, பிடித்ததா?



மகன்: பக்கத்து வீட்டுக்காரர் ஆர்மோனியத்தை விற்று விட்டாரப்பா!.......

தந்தை: தொலைந்தது சனி.

மகன்: 'பிடிச்சது சனி'ன்னு சொல்லுங்க! மாடி வீட்டுக்காரர்தான் அதை வாங்கி யிருக்கிறார்!

-- ரமா ராமநாதன்

புக்களை மதித்து நடப்பவன். அவனுடைய பேச்சிலும் நடத்தையிலும் மென்மையும் நாசூக்கும் இருக்கும். அதுவும் அனுபமாவுக்கு அவன் ரொம்பவும் கௌரவம் கொடுத்து ஒவ்வொரு சிறு காரியத்திலும் அவள் விருப்பத்தைத் தெரிந்து கொண்டு நடப்பான். ஆனால் தனஞ்செயனின் தோற்றத்திலும் நடத்தையிலும் முரட்டுத்தனம் மிகுதியாக இருந்தது. பேச்சிலே வீம்புப் பிடிவாதம், தன்னம்பிக்கை, அதிகார தோரணை எல்லாம் இழையோடின. குறுகுறுக்கும் அவன் கண்கள் அடக்கமின்றி அவள் உடலைத் தீண்டி உள்ளத்தை ஊடுருவின. அவன் தற்பெருமையடித்துக்கொண்டால்கூடத் தகும் என்று தோன்றியது. அவன் சில சமயங்களில் பணிந்து போனாலும் சோர்வுற்றாலும் அதுவும் காரியார்த்தமாகத்தான். பாய்வதற்கு முன்னால் பதுங்கும் புலி போலத்தான் அத்தருணங்களில் காணப்பட்டான். நாகப் பாம்பினிடம் தென்படுவது போன்ற ஒருவித அச்சமளிக்கும் கவர்ச்சி அவனிடத்தில் இருந்தது. இதனைக் காதல் என்று அனுபமா ஏற்றுக் கொள்ளாது போனாலும் இதனால் தான் பாதிக்கப் படவில்லை என்று அவள் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளவும் தயாராக இல்லை. ஆனால் அவள் இந்தியாவுக்கு மைக்கேலையும் அழைத்துக் கொண்டு கிளம்பத் தனஞ்செயனிடமிருந்த கவர்ச்சியோ அல்லது அவளுக்கோ, அவள் தகப்பனுருக்கோ, மைக்கேலுக்கோ தனஞ்செயனால் ஏதேனும் தீங்கு நேரும் என்ற அச்சமோ மட்டும் காரணங்களல்ல. இந்தியாவை நோக்கி ஏதோ ஒரு கண்ணுக்குப் புலனாகாத சக்தி அவளைக் கவர்ந்திழுத்துக் கொண்டிருந்தது. மோசடியில் ஈடுபட்டாவது பாரதத்துக்கு உதவ வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை அவளுக்கு ஏற்படுத்தியது எது? தேசப் பற்று அல்லது பக்தி என்பதைவிடப் பாசம் என்று அதை வர்ணிக்கலாம் போல் அவளுக்குப்பட்டது. அறிவைப் பாசம் வென்று கொண்டிருந்தது!

இந்தக் காரணங்களின் ஒட்டு மொத்தமான விளைவே இந்தப் பயணம்.

அனுபமா இந்தக் கணமே தன் இதயத்தின் இயக்கம் நின்று போய்விடக் கூடாதா என்று ஏங்கினாள். 'அப்படி ஏதாவது நேர்ந்தால்தான் தனக்கு இனி நிம்மதி. இல்லாத போனால் தொடர்ந்து இந்த மன உளைச்சலுடனேயே வாழ வேண்டியதுதான். இன்னும் என்னென்னவோ விபரீதங்கள் நிகழப் போகின்றன என்பதும் அவளுக்குத் தெரியும். இங்கே, இப்போது மைக்கேலை ஏமாற்றுவது போதாதென்று அங்கே போன பிறகும் தொடர்ந்து நாடகமாட வேண்டும் என்பது தனஞ்செயனின் ஆணை! ''என் வேஷம் கலையும்போது ஒரு விஷப் பூச்சியை அருவருப்புடன் உதறுவதுபோல் என்னை ஒதுக்கிவிடுவானே மைக்கேல்?'' என்று அவள் தனஞ்செயனிடம் வாதாடிப் பார்த்தாள். ''பாரதத்துக்கு உதவுமாறு அங்கு போன பிறகு நான்தானே மைக்கேலைக் கேட்டாக வேண்டும்?'' என்றாள்.

அதற்குத் தனஞ்செயன், ''அப்படியெல்லாம் ஒன்றும் நேராது. உன்னிடம் அவனுக்குள்ள மதிப்பு சற்றும் குறையாது. அதற்கு நான் பொறுப்பு'' என்றான். தொடர்ந்து அவன் விவரித்த திட்டம் அவள் தலையைக் கிறுகிறுக்கச் செய்தது. 'இவனுடைய சூழ்ச்சிகளுக்கு ஓர் எல்லையே கிடையாதா?' என்று வியந்தாள்.

உலக மகா மோசடி என்று கருதத் தக்க அளவில் தனஞ்செயனின் திட்டம் அமைந்திருந்தது. மைக்கேலை ஏமாற்றி, அனுபமா மீது அவனுக்கு எள்ளளவும் சந்தேகம் ஏற்படாத முறையிலும் பாரதத்தின் நற்பெயருக்கு லவலேசமும் இழுக்கு நேராத வகையிலும் காரியத்தைச் சாதித்துக்கொள்ள நினைத்திருந்தான் தனஞ்செயன். அவன் சொன்னதையெல்லாம் இப்போது கென்னடி சர்வதேச விமானநிலையம் நோக்கிச் செல்கையில் நினைவு கூர்ந்தபோது எதிர்காலம் பற்றிய திகில் அனுபமாவின் நெஞ்சை ஆட்கொண்டது. என்றாலும் தனஞ்செயனுடன் சேர்ந்து இப்படிச் செய்யக்கூடாத காரியங்களைச் செய்து ஆபத்துக்குள்ளாவதிலே தன் மனம் ஒரு ருசி காண்பதையும் உணர்ந்தாள்.

(தொடரும்)

ஆஸ்துமா

நிவாரண மூலிகை

ராஜஸ்தான் பிரபல அரசியல் சமூகத் தலைவர் காலஞ்சென்ற ஸ்ரீ சம்புநாத் அவர்களின் பேரன் **ஸ்ரீ கேசவ் மோஹன் லால்** ஏழைகளுக்கு ஆஸ்துமா நிவாரண மூலிகை விநியோகிக்கிறார். ஸ்ரீ சம்புநாத் அவர்களுக்கு இந்த மூலிகை ஒரு சந்நியாசியால் கொடுக்கப்பட்டு கடந்த 40 ஆண்டுகளாக இலவசமாக விநியோகிக்கப்பட்டது. இத்தன்னலமற்ற சேவைக்கு அரசாங்கம் உபகாரச் சம்பளம் அளித்தது. ஆனால் இந்த நற்பணியை அவர் தன் பேரனிடம் ஒப்படைத்து விட்டு துறவியானார். தற்பொழுது இப்பணியை பேரன் நடத்துவதோடு இதற்குப் பண உதவி செய்யுமாறு தனவந்தர்களைக் கேட்டுக் கொள்கிறார். மூன்று டோஸ் மருந்து சாப்பிட்டதுமே ஆஸ்துமாவினால் அவதியுறும் பலர் நிவாரண மடைந்துள்ளனர். ஆஸ்துமாவினால் அவதியுறுபவர்கள் மூலிகைக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு ஆங்கிலத்தில் எழுதவும்.

SRI KESHAV MOHAN LAL

P. B. No. 11463 - CALCUTTA-6



சென்னை, ஸ்ரீ கே. மணி (Deputy Commercial Tax Officer) அவர்கள் புதல்வி சௌபாக்கியவதி கோமதி என்கிற **மாலதி** B. A.க்கும், சென்னை ஸ்பென்ஸர் கம்பெனியைச் சேர்ந்த ஸ்ரீ எஸ். நாராயணசாமி அவர்கள் குமாரர் சிரஞ்சீவி என். **கணபதி** M. Sc.க்கும் 10-2-74 அன்று சென்னையில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்

NAA/K/73



அமிர்தாஞ்சனம்

AH/7572

தலைவலி, ஜலதோஷம் மற்றும் வலிகளுக்கு நம்பகமான நிவாரணி

அமிர்தாஞ்சனம் உடல்வலி, தலைவலி, தசைவலி, சுளுக்கு, ஜலதோஷம் இவற்றிலிருந்து உடனடியாக குணமளிக்கிறது. அமிர்தாஞ்சனம் தடவியதும் வலி மறைகிறது. பாட்டில்கள், சிக்கனமான ஜாடிகள், மற்றும் மலிவு விலை டப்பாக்களிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சனம் — பத்து மருந்து பொருள்கள் ஒருங்கே சேர்ந்தது.

அமிர்தாஞ்சன் லிமிடெட்


ஆசைகள் மடிவதில்லை
3
கதை : கௌசிகன்
சித்திரம்: சூர்யா..
காலஞ் சென்ற தர்மராஜனின் பங்களாவில் அவர் விதவை மனைவி மேனகா..
ஏன் இப்படி அவசரப் படுகிறீர்கள்? இருட்டி விட்டால் பயமா? சாப்பிட்டு விட்டுப் போகலாமே! என்னை விட அப்படி என்ன முக்கியமான விஷயம்?
உன்னை விட முக்கியமானது எதுவுமில்லை மேனகா. ஆனால் தொழில் முறையில் சில காரியங்கள் என்னை அழைக்கின்றன. அவசியம் கிளம்பியாக வேணும்.
அந்தக் காரியங்கள் காத்திருக்கட்டுமே. எனக்குத்தான் இத்தனை சொத்து வந்து விட்டதே. இன்னும் எதற்கு நீங்கள் தொழில் செய்ய வேணும்? அது சரி, நீங்கள் என்னை எப்போது மணந்து கொள்ளப் போகிறீர்கள்?
மேனகா, மெதுவாகப் பேசு. தர்மராஜன் இறந்து ஆறு வாரங்கள் கூட ஆகவில்லை. சந்தேகக்காரர்களின் பார்வையிலிருந்து நாம் இன்னும் முழுதுமாக விடுபடவில்லை. புரிந்ததா?
இப்படியெல்லாம் அசட்டுத்தனமாக உளறாதே. தவிர உன் குடியைக் குறைத்துக் கொள். என்றைக்காவது உன்னை அறியாமல் எதையாவது உளறி வைப்பாய்.


போதும் உபதேசம். அதைச் செய்யாதே இதைச் செய்யாதே என்று என் கணவர்தான் தொண தொணத்தார். நீங்களுமா?
நான் இப்படி எச்சரிப்பதன் காரணம் உனக்குத் தெரியாதா? நாம் கொஞ்ச காலத்துக்கு ஜாக்கிரதையாக இருக்க வேண்டாமா, கண்ணே?
உண்மைதான் என் ராஜா! எங்கே இப்படி என் அருகே வாருங்கள்....
என்ன மேனகா இது? யாராவது வரப் போகிறார்கள்....
மேனகாவின் அணைப்பிலிருந்து பிரயாசையுடன் விடுபட்ட சேகர்...
நான் வருகிறேன். நாளை சந்திப்போம்.
நாளைக்கு இப்படி ஓடக் கூடாது. தெரிந்ததா?
அம்மா உங்களைப் பார்க்கணும்னு ஒருத்தர் வந்திருக்காரு.
யார் அது? யாரானாலும் பரவாயில்லே, வரச் சொல். அப்படியே இன்னொரு பாட்டில் கொண்டு வா.
ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறிய சதீஷ் தர்மராஜனின் வீட்டுக்கு வருகிறான்.
அயல் நாட்டுச் சரக்கின் பூரண ஆதிக்கத்திலிருக்கிறாள் இவள்.
யார் நீங்கள்...?
என் பெயர் சதீஷ் குமார்.
தொடரும்



ருக்மிணி தொலைத்த நூறு ரூபாய்!



"எத்தனை மணிக்கு வருவதாகச் சொன்னார்கள்?"

அடுக்களைக்கும் வாசலுக்குமாகப் பந்து போல் தாவிக் கொண்டிருந்த ருக்மிணியிடம் அக்கறையுடன் விசாரித்தேன் நான்.

"பத்து மணிக்கு" என்றாள் அவள். கை எண்ணெய்க் கரண்டியால் கூந்தலை ஒதுக்கி விட்டுக் கொண்டது.

"இப்போதுதான் மணி பத்தே காலாகி விட்டதே!"

"ஞாயிற்றுக்கிழமை. இல்லையா? பஸ் கிடைத்திருக்காது" என்று காரணம் கூறினாள் ருக்மிணி.

"ஓடுவதில் நூற்றுக்குத் தொண்ணூறு திருவானைக்காவல் பஸ்தானே! அதோடு பகல் நேரத்தில் அப்படி ஒன்றும் அதிகக் கூட்டம் இருக்காதே!" என்றேன்.

ருக்மிணி பதில் தரவில்லை.

திருவானைக்காவில் இருக்கும் சிநேகிதி லலிதாவைக் குடும்பத்துடன் விருந்துக்கு அழைத்திருந்தாள் ருக்மிணி.

இருவருக்கும் பள்ளிச் சிநேகம். வெவ்வேறு அலுவலகத்தில் பணி புரிகின்றனர். ஆயினும் பழைய தொடர்பு இன்னும் அவர்களிடம் துளிர்விட்டுக் கொண்டிருந்தது. லலிதாவுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்புதான் மணமாயிற்று. புது மணமக்களைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கௌரவிக்க வேண்டும் என்று ரொம்ப நாட்களாகவே சொல்லிக் கொண்டிருந்தாள் ருக்மிணி, நானும் ஒப்புதல் தந்திருந்தேன். இன்றுதான் அவர்கள் வருவதாக உடன்பட்டார்களாம்.

ஆனால் இன்னும் வரக் காணோம்.

வடை, பாயசம் உட்படச் சகல சமையல் வேலைகளும் முடிந்தன. குளியலையும் முடித்துக் கொண்டாள் ருக்மிணி. மணி பதினொன்றரை.

சைக்கிள் ரிக்ஷா வந்து நின்றது வாசலில்.

அவர்கள்தாம்.

"வா... வா... ஏண்டி லலி.... இவ்வளவு தாமதம்?" என்று தோழியைச் செல்லமாய்க் கடிந்து கொண்டாள் ருக்மிணி. லலிதா ஏதேனும் சாக்குப் போக்குச் சொல்வாள் என்றுதான் நான் எதிர்பார்த்தேன். அவளோ "பிறகு சொல்கிறேன்" என்று சஸ்பென்ஸ் கொடுத்தாள். ஏனோ அவள் முகத்தில் மகிழ்ச்சி பிரதிபலிக்கக் காணோம். அவளைப் போலவே அவளது கணவனும் ஏதோ ஓர் எண்ணத் தடுமாற்றம் அடைந்தவனாகவே காணப்பட்டான்.

ருக்மிணி எலுமிச்சம் பழம் பிழிந்து, வந்த விருந்தினர்களுக்கு முதலில் தாக சாந்திக்கு அளித்தாள்.

லலிதாவின் கணவன் கோபாலும் நானும் முகப்புக் கூடத்தில் அமர்ந்து உரையாடினோம். முதல் சந்திப்பானதால் பேசுவதற்கு எங்களுக்கு 'சப்ஜெக்ட்' கிடைக்கவில்லை.

ஆனால் உள்ளே இருந்த ருக்மிணியும் லலிதாவும் பல விஷயங்களைப் பற்றி அலசித் தீர்த்தனர். நடுவில் அந்தப் பேச்சு வந்தது.

''ருக்கு.... இன்று நாங்கள் உன் வீட்டு விருந்துக்கு வந்திருக்கவே முடியாது'' என்றாள் லலிதா.

'' ஏன்?''

'' காலையில் அரிசிக் கடைக்காரருக்கு ஐம்பது ரூபாய் கொடுத்துவிட்டு, நூறு ரூபாய் நோட்டுக்கு மீதி ஐம்பது ரூபாய் வாங்கிக் கொண்டு திரும்பி வந்தேன். வழியில் அது எங்கோ தவறிவிட்டது. ஒன்றா....இரண்டா, கனையாக ஐம்பது ரூபாய். எனக்கு வேலையே ஓடவில்லை. பத்து மணி வரை குத்துப் புளி மாதிரி உட்கார்ந்துவிட்டேன். பிறகுதான்... அவர் இங்கு வரவேண்டும் என்பதை ஞாபகப் படுத்தினார்.''

''அப்படியா !''

''இங்கு வந்துவிட்டேனே தவிர, இன்னும் என் மனம் சமாதானம் அடையவில்லை ருக்கு.'' லலிதாவின் தொனியில் சோகத்தின் கனம் நன்றாகத் தெரிந்தது. அவளுக்காக மானசீகமாக அனுதாபப்பட்டேன் நான். ஆனால் அடுத்தவிநாடி ருக்மிணி என் காதில் கொதி நீரைக் கொட்டுவாள் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

''லலி! ஐம்பது ரூபாய்க்கு இவ்வளவு பிரமாதமாய் வருந்துகிறாயே, என் கதை உனக்குத் தெரியுமா?'' என்றாள் அவள்.

''என்ன?'' — லலிதா.

''போன வாரம் பஸ்ஸில் மணிப் பர்ஸோடு நூறு ரூபாயைப் பறிகொடுத்து விட்டேன், லலி! ஜேப்படியோ, அல்லது நான்தான் இடம் அறியாமல் விட்டு விட்டேனோ தெரியவில்லை. எப்படி இருந்தாலும் அது நம் கவனக் குறைவுதானே? கொஞ்சம் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டிருந்தால் அப்படி நடந்திருக்குமா?''

''உண்மைதான் ருக்கு!'' என்று அநுதாபப் பட்டாள் லலிதா.

என் மனம் புயல் அலைபோல் பொங்கியது. எவ்வளவு பெரிய விஷயத்தை என்னிடம் மறைத்திருக்கிறாள், ருக்மிணி?

அவளும் என்னைப் போல் வேலைக்குப் போகிறவள். கை நிறையச் சம்பளம் வருகிறது. நூறு ரூபாய் தொலைந்து விட்டதாகச் சொன்னால் நான் அதற்காகக் கோபித்துக்கொள்ளப் போவதில்லைதான். அப்படிச் செய்ய எனக்கு உரிமையும் கிடையாது. ஏனெனில் அது அவளது சொந்தப் பணம். இழக்கலாம் எதுவும் செய்யலாம்... ஆனால் அதை என்னிடம் சொன்னால் என்ன? கணவன் என்ற ஸ்தானத்துக்கு அந்த ஒரு மரியாதையைக்கூடச் செய்ய விடாமல், 'சம்பாதிக்கிறோம்' என்னும் தான்தோன்றித்தனம் அவள் கண்களை மறைத்து விட்டதா? சை... என்ன ஓர் அவமதிப்பு?

சாப்பிட உட்கார்ந்தேன்.

ருக்மிணி பரிமாறிய பாயசம் எனக்கு இனிக்கவில்லை.

''சினிமாவுக்குப் போக வேண்டும்'' என்றாள், அவள். ஆம்: அவர்களது நிகழ்ச்சி நிரலில் சினிமாவும் உண்டு.

''தலையை வலிக்கிறது'' என்று ஒதுங்கிக் கொண்டேன், நான்.

லலிதா குறுக்கிட்டாள். ''அப்படியானால் சினிமாவைக் 'கான்சல்' பண்ணி விடுவோம்.''

''அப்படிச் சொல்லாதே லலி! திட்டப்படி நிகழ்ச்சிகளை நிறைவுபடுத்தினால்தான் எனக்குத் திருப்தி. டவுனுக்கு... அதுவும் புதுத் தம்பதிகளாய் வந்த நீங்கள் சினிமாப் பார்க்காது போனால் நன்றாய் இருக்காது'' என்று வேடிக்கையாகப் பேசிக் கொண்டே அவர்களுடன் சினிமாவுக்குப் புறப்பட்டாள், ருக்மிணி.

அவளது அந்தச் செய்கை என் வயிற்றெரிச்சலை மேலும் அதிகப்படுத்திற்று.

அந்நியப் பெண் கூட — என் தலைவலி பாசாங்குதான் என்றாலும் — அதற்காக அனுதாபப்படும்போது ருக்மிணி அலட்சியமாகப் போகிறாளே!

சுவரில் இருந்த எங்கள் திருமணப் படம் என் கண்களை உறுத்திற்று. சம்பாதிக்கிற பெண்ணை மனைவியாகப் பெற்றிருக்கிறோம் என்பதை எண்ணிப் பல தடவை பூரிப்படைந்திருக்கிறேன், நான். ஆனால் இன்று—

ஆத்திரத்தில் எனக்குச் சகலமும் மறந்து விட்டது.



•ப.தமிழினியன்•



''இன்று முதல் உனக்கு விடுதலை. ஆனால், இந்தப் பூட்டுக்குச் சாவியைத்தான் காணோம்.''

''ஒரு குடைக் கம்பி தா. இப்பவே தொழிலை ஆரம்பிக்கிறேன்!''

பாய்ந்தெழுந்து அந்தப் புகைப்படத்தை எடுத்தேன். அடுத்த வினாடி—

படீர்!

தரையில் அடித்துச் சுக்குநூறாய்ச் சிதறியது, அதன் கண்ணாடி.

அமைதி குலைந்தது உள்ளத்தில். வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை. பூட்டிவிட்டு வெளியில் புறப்பட்டேன். எங்கே போவது?... இதென்ன கேள்வி—

எங்கேனும் போய்த் தொலையலாம். ஆடவன் கம்பீரமாகக் கொலுவீற்றிருக்க வேண்டிய இடம் மனைவியின் இதய மேடைதான். அதற்குக் கொடுத்து வைக்காத துரதிர்ஷ்டசாலியாகி விட்டேன், நான். இனி, எனக்குப் போக்கிடம் என்று ஒன்று இருக்கிறதா என்ன?

இறங்கு வெய்யிலின் உஷ்ணத் தாக்குதலைப் பொருட்படுத்தாமல், கால் போன திசையெல்லாம் சுற்றி யலைந்தேன்.

மாலை மணி ஆறு.

வெங்கட பவனில் ஒரு காப்பியை ஊற்றிக் கொண்டு வெளியில் வந்தேன். கால்கள் என்னையும் மீறி வீட்டை நோக்கி இழுத்தன. அதற்கு மேல் ஊர் சுற்ற அவற்றுக்குச் சக்தி இல்லையோ, என்னவோ!

பஸ் நிறுத்தம்.

ருக்மிணி அப்போதுதான் பஸ்ஸை விட்டு இறங்கி வந்தாள். அவள் என்னைக் கவனித்து விட்டாள்.

''லலிதாவையும் அவள் கணவனையும் அப்படியே பஸ்ஸில் வழியனுப்பி விட்டேன்.... அது சரி, தலைவலி என்றீர்கள். வீட்டிலேயே ஓய்வு எடுப்பதற்கு என்ன?'' என்றாள்.

''எனக்குத் தலைவலியானால் உனக்கு என்ன? உன் இஷ்டப்படி எல்லாம் நடந்தால் சரிதான்.'' என் குரலில் இருந்த வெறுப்பை அவள் புரிந்து கொண்டாள்.

''உங்கள் கோபம் எனக்குப் புரிகிறது. உங்களுக்கு உடம்புக்கு ஆகாதிருக்கும்போது நான் சினிமாப் பார்க்கப் போயிருக்கக் கூடாதுதான். ஆனால்... லலிதாவோ.... பாவம், பணத்தைத் தொலைத்துவிட்டு அதே கவலையால் தொய்ந்து போய் இருந்தாள். சினிமா ஒரு மாற்றமாய் இருக்குமே என்று தான் அழைத்துப் போனேன். சில சந்தர்ப்பங்களில் கட்டிக் காக்க வேண்டிய மரியாதை வரம்புகளைத் தாற்காலிகமாக மீற வேண்டித் தான் வரும். இன்று எனக்கு நேர்ந்ததும் அப்படி ஒரு சூழ்நிலைதான். அது மட்டுமல்ல! 'இழப்பு எல்லோருக்கும் சகஜம்' என்பதைத் தெளிவுபடுத்துவதற்காகவும், 'நான் கூட நூறு ரூபாய் தொலைத்தேன்' என்று ஒரு 'டூப்' விட்டேன்....''

''டூப்பா?''

''ஆமாம். அப்படி ஒரு பொய்யைச் சொல்லாதிருந்திருந்தால் இன்று அவள் என்னுடன் கலகலப்பாக இருந்திருக்கவே மாட்டாள்.'' புன்னகையுடன் கூறி முடித்தாள் ருக்மிணி.

உடைந்து போயிருந்த என் உள்ளம் ஒரு நொடியில் ஒட்டிக் கொண்டது. ருக்மிணியின் சாதுரியப் பேச்சை நான் தப்பாக எடுத்துக் கொண்டேனே!

அதிருக்கட்டும்!

வீட்டில் எங்கள் கல்யாணப் படம் அப்படியே சிதறிக் கிடக்கும். ருக்மிணி காரணம் கேட்டால் நான் என்ன பதில் சொல்வேன்? 'உன்னை அறியாமல் வந்த கோபம். அதனால் விளைந்த கோலம்' என்றால், என்னைப் பற்றி மட்டமாக நினைக்க மாட்டாளா அவள்?

அந்த அபவாதத்திலிருந்து எப்படியேனும் தப்ப வேண்டும். என்ன செய்யலாம்? ஓர் ஐந்து நிமிடங்கள் ருக்மிணிக்கு முன்னால் நான் வீட்டுக்குப் போக வேண்டும். வழி?

''ருக்கு! வக்கீலாத்து மாமியிடம் லைப்ரரி புத்தகம் கொடுத்திருந்தாயே, திரும்பி வாங்கி விட்டாயோ?'' என்றேன். மாமியின் வீடு இடையில் ஒரு குறுக்குச் சந்தில் இருந்தது. அங்கு ருக்மிணி போய் வருவதற்குள், நான் வீட்டுக்குப் போய் அந்தக் கண்ணாடிச் சில்லுகளை அப்புறப்படுத்தி விடலாமே!

ஆனால், ''அதை நேற்றே வாங்கி வந்து விட்டேன்'' என்றாள், ருக்மிணி.

போச்சு. அதிலும் தோல்வி.

வீடு நெருங்க நெருங்க, என் மனம் பதைபதைத்தது. வீட்டைத் திறந்து விளக்கைப் போட்டேன்.

''ஐயையோ!'' என்று திடுக்கிட்டாள், ருக்மிணி. ''இதென்ன அலங்கோலம்! இதற்குத்தான் வெளியில் கிளம்பினால், சன்னல் கதவுகளை மூடி வைக்க வேண்டும். இப்போது பார்த்தீர்களா... காற்றில் படம் கீழே விழுந்து கண்ணாடி நொறுங்கி விட்டது!'' கீழே குனிந்து கண்ணாடிச் சிதறல்களை அப்புறப்படுத்துவதில் முனைந்தாள், அவள்.

'அப்பாடா...!' நல்ல மூச்சு வந்தது எனக்கு.

உண்மை நடப்பு வேறாக இருந்தாலும், ருக்மிணிக்குத் தோன்றும் சமயோசிதத் தாலும் யூகத்தாலும் எத்தனை உள்ளங்களுக்கு மன ஆறுதல்!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam

ஒரே ஒரு காசு செலவில் 1 சேலை அல்லது 3 சட்டைகள் பனிபோல் வெண்மை பெற...

மாக்ஸிம்*

எல்லா துணிகளுக்கும்
உகந்த ஏற்றமிகு ஒயிட்னர்

எவ்வளவோ சிக்கனமானது!

எந்த ஆடையாக இருந்தாலும் சரி, அதற்குப் புத்தம் புதிய வெண்மை ஒளியேற்ற சராசரி ஒரு துளி மாக்ஸிம் போதும். ஒவ்வொரு மாக்ஸிம் பாட்டிலும் சுமார் 1200 துளிகள் கொண்டது என்பது உங்களுக்குத் தெரியுமோ என்னவோ! எனவேதான் மாக்ஸிம் மிகவும் சிக்கனமான, வீரியமுள்ள நீலநிற திரவ வடிவ ஒயிட்னராக விளங்குகிறது. மேலும் விசேஷ ட்ராப்பர் மூடிகொண்ட பிளாஸ்டிக் பாட்டிலாக இருப்பதால், இன்னும் லாபம். ஏனெனில் தேவைக்கு மேல் ஒரு துளி கூட சிந்தாது. எனவே துளியும் வீணாவதில்லை. துணியும் நீலம் படிவதில்லை.


- 'டெரீன்' ✓
- 'டெரீன்'/காட்டன் ✓
- நைலான் ✓
- உல்லன் ✓
- சில்க் ✓
- காட்டன் ✓

எல்லா துணிகளுக்கும் ஏற்றது

எல்லாவித துணிகளுக்கும் நீங்கள் மாக்ஸிம் உபயோகிக்கலாம். 'டெரீன் 'டெரீன்'/காட்டன், நைலான், உல்லன் சில்க் மற்றும் காட்டன் போன்ற எல்லா துணிகளுக்கும் மாக்ஸிம் வெண்மையூட்டி புதிய மெருகேற்றுகிறது. தவிர, மாக்ஸிம் துணியில் கறை ஏற்படுத்துவதுமில்லை.

உபயோக முறை மிகமிக எளிது

மாக்ஸிம் உபயோக முறை மிகமிக் எளிதானது. துணிகளை முதலில் சோப் அல்லது பிற சலவைச் சாதனங்கள் மூலம் சுத்தமாக துவைத்து நன்றாக அலசி எடுக்கவும். பிறகு வாளியிலுள்ள (5 லிட்டர்) நல்ல தண்ணீரில் 10-15 துளிகள் மாக்ஸிம் விட்டுக் கலக்கவும். (பழுப்பேறிய துணிகளென்றால் கொஞ்சம் கூடுதல் துளிகள் மாக்ஸிம் சேர்க்கவும்) பின்பு துணிகளை 10—15 நிமிடங்களுக்கு அதில் ஊறவைக்கவும். மீண்டும் அலச வேண்டாம். அப்படியே உலரவிடவும்.





ஒவ்வொரு காசுக்கும் உரிய பலனைத் தருகிறது மாக்ஸிம்

GHM-23 TAM

*Regd. T.M. Geoffrey Manners & Co., Ltd.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka இலங்கையில் விலை 50 சதம் (தபால் செலவு தனி)